www.tamilarangam.net


# களத்தில்


> கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 ஆடவை 12 (26.06. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p

# "சிறிலங்கா அரசு கனவு காண்கின்றது; மக்களைப் பட்டினி போடுவதால் போராட்டத்தை ஒடுக்க முடியாது"

**- தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் கரிகாலன்**

"மக்களைப் பட்டினி போட்டு சாகடிப்பதன்மூலம், அவர்களை எம்மீது வெறுப்படையச் செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யலாம் எனச் சிறிலங்கா அரசு கனவு காண்கிறது. அது ஒருபோதும் நடக்காது. எமது மக்கள் பட்டினியால் சாவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்" என, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஓர் அரச சார்பற்ற நிறுவன புதிய கட்டிடமொன்றின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், "வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள்கூட அரசின் பயமுறுத்தலுக்குக் கட்டுப்பட்டு எமது மக்களுக்கான உதவிகளை நிறுத்த ஏற்பாடு எடுத்தாலும், தமிழீழ விடுதலைப் போர் தொடரும். அது உறுதி குலையாது. இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் நிரந்தரக் கட்டிடங்களை அமைப்பதற்கு வேண்டிய மூலப் பொருட்களை சிறிலங்கா அரசு தடைசெய்துள்ளதுடன், அங்கு புதிய கட்டிடங்களைக் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாதெனவும் வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு விதித்துள்ளது.

இந்த நிலையில், நாம் எமது உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு இவ்வளவு அழகான உறுதியான ஒரு கட்டிடத்தை அமைத்துள்ளோம் என்பதை, இங்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...




உலகமே எங்கள் உணர்வைப் புரிந்து கொள் - கரும்புலிகள் நாள் யூலை 5

## குடாநாட்டின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சிறிலங்கா விளக்கம்

### அதனை உடைத்தெறிய உறுதி எடுத்தல் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் கடமை

**யாழ்.** குடாநாட்டை ஆக்கிரமித்தமை நியாயமான செயல் எனக்கூறும் விளக்கம் ஒன்றை, சிறிலங்கா அரசு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. காசிச்செட்டி எனும் தமிழ்ப் பெயரில் ஒப்பமிடப்பட்டுள்ள இவ் அறிக்கையில், யாழ். குடாநாட்டில் மக்கள் வாழ்வை வழமைக்குத் திருப்பும் முயற்சிகளில் சிறிலங்கா அக்கறை காட்டுவதுபோல் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், 1995இல் சிறிலங்காவுடன் இரட்டை முனை (Bi Lateral) ஒப்பந்தத்தை முதல் தடவையாகச் செய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் சிறிலங்கா அரசின் மீது, மனித உரிமைகளைப் பேணும்படி சட்டரீதியாக வற்புறுத்தும் உரிமையை ஐரோப்பிய ஒன்றியம் பெற்றுள்ளது. வெளிநாட்டு நிதி உதவிபெறும் நாடு மனித உரிமைகள், கல்வி, உணவு வழங்கல் ஆகியவற்றை ஒழுங்கான முறையில் பேணல் வேண்டும் எனும் பொது நிபந்தனையுண்டு.

<u>சிறிலங்காவின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள்</u>

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது வெளிப்படையாகவே மனித

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களினது எதிரொலி

## இயலுமானவரை முயற்சித்துள்ளோம் இதற்கு மேலும் முடியாது

**- சிறிலங்காப் படையினர்**

**வ**டபுலத்தில் சிறிலங்கா கடற்படைத் தலைமையகமாக விளங்கும் காரைநகர் கடற்படைத் தளத்தில் கடும் பாதுகாப்புக்களையும் ஊடுருவிச் சென்ற கடற்புலிகளும், கடற்கரும்புலிகளும், ஆனித் திங்கள் 16ஆம் நாள் அதிகாலை 4.11 மணிக்கு இரண்டு சவட்டன் ரோந்துப் படகுகளையும், ஒரு சிறிய டோறாப் படகையும் தாக்கி மூழ்கடித்துள்ளனர். இரு கடற்படையினர் கொல்லப்பட்டு ஒருவர் படுகாயத்திற்குள்ளாகியுள்ளார். இந்த அபாரமான தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் ரம்போ என்றழைக்கப்படும் ஓமந்தையைச் சேர்ந்த பொன்னையா தமிழ்ச்செல்வன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

<u>மட்டு.யாழ்.மாவட்டங்களில் கண்ணிவெடியில் 10 இராணுவம் பலி</u>

21-06-96 அன்று மட்டக்களப்பு,

தொடர்ச்சி 2 ம் பக்கம்...


- தாயகம் நோக்கிய பயணம்...
- தேவை (சிறுகதை)
- சுதந்திரத்தைத் தேடி...
- எத்தனை எத்தனை ...
- கவிதைக்களம் ...
- உலக அரங்கு...
- விடியலின் பாதையில்..... (ஓர் உண்மைச் சம்பவம்)
- தென்தமிழீழத்தின் கதை...
- வாழ நினைத்தால் ... (நேர்காணல்)

**உள்ளே... ☞**


## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அமைதியான சூழ்நிலை உருவாகும் வரை யாழ். திரும்வது பாதுகாப்பல்ல!"

## ✤ இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள்

''யாழ்ப்பாணத்திலுள்ள பதட்ட நிலை தணிய, நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு அமைதியான சூழ்நிலை உருவாகும் வரை யாழ்ப்பாணம் திரும்பிச் செல்வதென்பது பாதுகாப்பான விடயம் அல்ல" என யாழ். அரச அதிபரின் உத்தரவை எதிர்த்து, இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் ஏகோபித்த குரலில் கண்டனம் தெரிவித்துள்ளனர். சிறிலங்காப் படையினரின் யாழ். குடாநாடு மீதான சூரியக்கதிர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து, வன்னிப் பெரு நிலப்பரப்பில் தங்கியுள்ள அரச ஊழியர்கள் அனைவரையும் உடன் யாழ். திரும்புமாறும்,

மறுக்கும் பட்சத்தில் அவர்களுக்கான ஊதியம் வழங்கப்படமாட்டாது எனவும் யாழ்ப்பாண அரச அதிபர் உத்தரவிட்டுள்ளதைக் கண்டித்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் கண்டனக் கூட்டம் ஒன்றை கிளிநொச்சியில் நடாத்தியுள்ளனர்.

இவ்வூழியர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்களில் 17-06-96 தொடக்கம் கையொப்பமிடவிடாது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை யாழ்ப்பாணத்திற்கு திருப்பியனுப்பி வைக்கும்படி, யாழ். அரச அதிபரால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கேட்கப்பட்டுள்ளார். இந்த மனிதநேயமற்ற நடவடிக்கையைக் கண்டித்து 17-06-96 அன்று கிளிநொச்சியில் அரச திணைக்கள ஊழியர்களால் கண்டனக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இடம்பெயர்ந்த யாழ். அரச ஊழியர் சங்கத் தலைவர் திரு. வைரமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 1000க்கும் அதிகமான ஊழியர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

"யாழ். குடாநாட்டில் தொடர்ந்தும் போர்ச் சூழ்நிலையே காணப்படுவதால், வாழ்க்கை சுமூகமான நிலைக்குத் திரும்பவில்லை. இப்படியான சூழ்நிலையில் எம்மை யாழ். குடாநாட்டுக்குத் திரும்பச் சொல்லும் சிறிலங்கா அரசால், எமது உயிருக்கு எந்தவித உத்தரவாதமும் வழங்க முடியாது. இவ்வாறு இருக்கும்போது எவ்வாறு எங்களை குடாநாட்டுக்கு அழைக்க முடியும்? போர் நிறுத்தம் ஏற்பட்டு யாழ். குடாநாட்டில் ஓர் அமைதியான சூழ்நிலை உருவாகும்வரை நாங்கள் வேலைக்குத் திரும்புவதில்லை" என்று அங்கு உரைநிகழ்த்திய ஊழியர்கள் ஏகோபித்த குரலில் ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்தனர்.

இவ் ஊழியர்களை யாழ்ப்பாணத்திற்குத் திருப்பி அழைப்பதற்காகப் பலவிதமான நெருக்கடிகள் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவதாக, இவர்களுக்கான வைகாசி மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, கடந்த சில வாரங்களாக இவர்களுக்கான உலர் உணவு நிவாரணங்களும் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன. இவர்கள் இன்று கையில் பணமும் இல்லாமல் உண்ண உணவும் இல்லாமல் தவிக்கும் நிலைக்கு, சிறிலங்கா அரசு தள்ளியுள்ளது.

இவ் ஊழியர்கள் யாழ். செல்ல விரும்பினால்கூட இவர்கள் வவுனியா ஊடாகவே யாழ்ப்பாணம் செல்ல முடியும். இதற்குக் கூட எந்தவிதப் போக்குவரத்து ஒழுங்குகளும் சிறிலங்கா அரசினால் இதுவரை செய்யப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். ✷

# சிறிலங்கா அரசு கனவு...

பார்க்கின்றார்கள். இதனால், அரசு சொல்லும் நொண்டிச் சாட்டுகளை நம்பாமல் இங்கு காணும் உண்மை நிலைகளை உணர்ந்து அரசிற்கு உரைக்க வேண்டும். துருப்பிடித்த புகையிரதத் தண்டவாளங்களைக் கொண்டு அழகான தரமான கட்டிடங்களையும் நாம் அமைத்து வருகின்றோம். போர் பல நாடுகளில் நடைபெறுகின்றது. பல மக்கள் போராடுகின்றார்கள். ஆனால், எம்மக்கள் நடத்தும் போராட்டம் வித்தியாசமானது. எவ்வித உதவியோ வசதிகளோ இல்லாத நிலையில்தான் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், அமைப்புக்கள் பல வழிகளில் எம் மக்களுக்கு உதவி வருகின்றன. அது மேலும் தொடர வேண்டும்" எனவும் திரு. கரிகாலன் தனதுரையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. தில்லை நடராசா அவர்கள் தெரிவித்ததாவது, "தமிழ் மக்களுக்கு உதவும் நிலையில் சிறிலங்கா அரசு இல்லை. அரச சார்பற்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள்தான் தற்போது தமிழ் மக்களுக்கு உதவுகின்றன. ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தூதுவராலயம் வழங்கிய 5 இலட்சம் ரூபாய் செலவில் இக்கட்டிடம் அமைக்கப்பட்டது. இன்று நாம் ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருக்கின்றோம். இடம்பெயர்ந்து இங்கு வந்து தங்கியிருக்கும் மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை வழங்குவதற்கு அரசசார்பற்ற இணையம் நல்ல முறையில் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது" என்றார். ✷

# குடாநாட்டின் ஆக்கிரமிப்பை ...

உரிமைகளை மீறிக்கொண்டு, மனித உரிமைகளைப் பேணுவதற்குத்தான் ஆணைக்குழு அமைத்துள்ளதாக உதட்டளவில் கூறிவருகின்றது. கொழும்பில், தொடர்ந்தும் தமிழர்களைக் காரணமின்றிக் கைது செய்யும் சிறிலங்கா, வவுனியாவில் பல தமிழ் மக்களைச் சிறைப்பிடித்தும் உள்ளது. கொழும்புக்குச் செல்லவென வவுனியாவுக்கு வந்த பெண்களில் 277 இளம் தமிழ்ப் பெண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள், சந்தேகத்திற்கு இடமானவர்கள் என்று காரணம் கூறப்பட்டு எவ்வித நீதி விசாரணைகளும் இல்லாமல் சிறிலங்காப் படைகளினால் காமினி மகாவித்தியாலய இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதில் 171 பேர் நீண்டகாலமாகவும், 106 பேர் குறுகிய காலமாகவும் இச்சிறைகளில் வாடுகின்றனர். குறுக்கு விசாரணை எனும் பெயரில் இராணுவத்தினரால் இவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

முல்லைத்தீவு சுண்டிக்குளம் பூனைத்தொடுவாயில் மக்கள் குடியிருப்பு வான்பகுதியில் திடீரென பிரவேசித்த சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான 'கிபீர்' போர் விமானங்கள் இரண்டு நடாத்திய வெறித்தனமான குண்டு வீச்சில் 3 சிறுவர்கள் உட்பட ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் உடல்சிதறிப் பலியாகியுள்ளனர். இதில் 12 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சின்னத்தம்பி நாகரத்தினம் எனும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அதிகாரி, கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 23 இலட்சத்து 20ஆயிரம் ரூபா பணத்துடனும் 4000 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளுடனும் தாண்டிக்குளம் தடைமுகாமிற்கு வந்தடைந்த பின்னர் காணாமல் போயுள்ளார். ஆனி மாதம் 15ம் திகதி முதல் இவரைக் காணவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

மேலும், ஆனி 4ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, பாசிக்குடா, ஆலையடிவேம்பு ஆகிய பகுதிகளில் தேடுதல் முயற்சியில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர், ஒன்பது தமிழ் இளைஞர்களை எவ்வித காரணமும் இல்லாமல் விசாரிக்க வேண்டும் என்றுகூறிக் கொண்டு சென்றது. இவர்களின் நிலை குறித்து பெற்றோர்கள், உறவினர்கள் அதிரடிப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, இவர்களைத் தாம் கைது செய்யவில்லை எனவும், இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் வழமை போல் கைவிரித்துள்ளனர். இதனால் இவர்கள், படையினரால் கொன்றழிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இதற்கிடை, நாகசிவன் தீவில் மூன்று தமிழ் பொதுமக்களைச் சுட்டுப் படுகொலை செய்த சிறிலங்கா இராணுவத்தினர், இருவரின் தலைகளைக் கொய்தும் வெறியாட்டம் நிகழ்த்தியுள்ளனர். ஆனி மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயது வீரன் செல்வராசா, 5 பிள்ளைகளின் தந்தையான வடிவேலு மற்றும் 18 வயது மாணவனான வடிவேலு பாஸ்கரன் என்பவர்களே இத்தகைய கொடிய படுகொலைக்கு இலக்காகினர். மேலும், கல்குடாப் பகுதியில் இரு தமிழ் மீனவர்களை, சிறிலங்கா இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது. ஐந்து பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய தாமோதரம் ஏரம்பமூர்த்தி, 16 வயதுடைய எம். கந்தவனம் ஆகிய இருவருமே அரச வன்முறைக்குப் பலியானவர்களாவர்.

வடமராட்சியில் செல்வநாயகம் (வியாபாரிமூலை - நகை வியாபாரி), சுந்தரலிங்கம் (கம்பர்மலை - விறகுவிற்கும் நிலைய உரிமையாளர்) ஆகிய இருவரும் வடமராட்சியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு பொது மக்களைப் படுகொலை செய்யும் சிறிலங்கா, வன்னிப் பகுதி மீது கடும் உணவுக் கட்டுப்பாடுகளை விதித்து மக்களைப் பட்டினி போட முனைகிறது. அத்துடன், மன்னார் பகுதியிலும் தமிழர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான உணவு வழங்கலையும் சிறிலங்கா தடுக்கத் தொடங்கியுள்ளது. தற்போது வாகனப் போக்குவரத்தைத் தடை செய்வதன்மூலமும் இப்பகுதி மக்களைப் பட்டினி நிலைக்கு சிறிலங்கா தள்ளிவருகிறது.

மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 64 வயதுடைய சின்னத்துரை நன்னித்தம்பி என்பவர், வெளிநாட்டில் உள்ள தனது பிள்ளைகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காகக் கொழும்பு செல்ல வவுனியா தாண்டிக்குளத் தடை முகாமில் இராணுவத்தினரின் அனுமதி பெறக் கடும் வெய்யிலில் நீண்டநேரம் காத்திருந்தபோது மயங்கிவீழ்ந்து அவ்விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அத்துடன், வன்னிப் பிரதேசத்து பள்ளி மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை வழங்க மறுத்தும் வயோதிபர்களுக்கான உதவிப் பணங்களை அனுப்பாமலும், வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை நிறுத்தியும் சிறிலங்கா அரசு, தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் அடியோடு மறுத்து வருகிறது.

இத்தகைய கொடுமைகளைத் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் அதேவேளை, யாழ். குடாநாட்டுக்கான ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்தும் நடவடிக்கையிலும் சிறிலங்கா அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இந்நடவடிக்கையின் ஒரு செயற்பாடாகவே ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் தன்னை நியாயப்படுத்தி அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்நிலையில், சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களையும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறுவது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

இதன்மூலமே சிறிலங்காவின் சதிவலையை அறுத்தெறியலாம். ✷

# விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களினது....

யாழ்ப்பாணம் மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கி 10 சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 14 படையினர் படுகாயமடைந்துள்ளனர். கிளாலிக்குத் தெற்கே உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த படையினர் அமுக்கக் கண்ணிவெடியில் சிக்கினர். இதில் அவ்விடத்திலேயே 6 பேர் கொல்லப்பட, ஒருவர் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில் இருந்து உழவு இயந்திரத்தில் புறப்பட்ட இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் நான்கு படையினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

மட்டக்களப்பு பேய்த்தாழை எனும் இடத்தில் வைத்து உழவு இயந்திரத்தில் பயணம் செய்த சிறிலங்காப் பொலிசார் மீது, புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 11 பொலிசார் காயமடைந்தனர்.

### தென்மராட்சி அல்லிப்பளையில் .......

13-06-96 அன்று பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட கடும் மோதலில் பருத்தித்துறையைச் சேர்ந்த மேஜர் உதயன் வீரச்சாவடைந்தார். இதற்குப் பதிலடியாக அதேநாளில் தென்மராட்சி அல்லிப்பளைச் சந்திக்கு அருகில் வைத்து காவலரண் அமைக்க முற்பட்டுக் கொண்டிருந்த படையினர் மீது தாக்கியதில் இரண்டு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். அதேநேரம் வடமராட்சி மண்டான் பகுதியில் இராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு இராணுவம் கொல்லப்பட்டு மூவர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

பின்னர் அதேதினம், பருத்தித்துறை இரஞ்சன் பூங்காவுக்கு அண்மையில் வைத்து ரோந்து சென்ற படையணி மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### தென்தமிழீழ மாவட்டங்களில்....
### திருகோணமலை மாவட்டத்தில

14-06-96 அன்று திருமலை மாவட்டத்தில் அலியொலுவ எனும் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. 5 நிமிட மின்னல் வேகத் தாக்குதலில் பொலிஸ் நிலையம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தான் வெட்டிய குழிக்குள் தானே........

"**தா**ன் வெட்டிய குழிக்குள் தானே விழுந்தவன்" கதையாகச் சந்திரிகா, தமிழீழ மக்களை இராணுவ அச்சத்திற்கு உள்ளாக்கவென எடுத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால், இப்பொழுது தினமும் தன்னையும் தன் சிங்கள மக்களையும் பெரும் இராணுவ அச்சத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்.

எந்த நேரம், எங்கு, எது நடக்குமோ எனும் அச்சத்தில் இலங்கைத்தீவு முழுவதும் மக்கள் நடுங்கிக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டும் பல்வேறு செய்திகள், செய்தித் தணிக்கையினையும் மீறி வெளியாகிக் கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணம், தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல சிறிலங்கா அரசு மனித நேயமற்ற முறையில் நடாத்தும் கொடூர இனஅழிப்பு நடவடிக்கைகளே என்றும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறிலங்கா அரசு, பின்னர் அதற்கான எதிர்த்தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படலாம் எனும் மனப்பீதியில் செயற்படுகிறது எனவும் சிங்கள அரசியல்வாதிகள் வெளிப்படையாகவே கூறத்தொடங்கிவிட்டனர்.

இவ்வாறே, தமிழ் மக்கள் மீது 1972 முதல் தொடர்ச்சியாக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுவந்த சிறிலங்கா அரசு, அந்த இனஅழிப்பு முயற்சிகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் வாழ்வதற்கு எடுத்த முயற்சிகளைப் 'பயங்கரவாதம்' எனத் திரிபுவாதம் செய்து வருகிறது. ஆனாலும், நீதியான அமைதியின் மேல் தமிழ் மக்கள் கொண்டுள்ள மாறாத உறுதி, எந்த இனஅழிப்பு முயற்சிகளையும் எதிர்த்து நிற்கும் தார்மீக சக்தியை அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. கடந்த இருவாரங்களில், யாழ். குடாநாட்டுக்குள் நூற்றுக்கணக்கான ஆளணிச் சேதங்களையும் எதிர்பாராத இராணுவத் தளபாடச் சேதங்களையும் சிறிலங்கா சந்தித்துள்ளமை இதன் வெளிப்பாடாகும். அது மட்டுமல்ல, தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவம் அடுத்தடுத்து சந்திக்கும் தொடர்ச்சியான இழப்புக்கள் இராணுவத்தின் போரிடும் மனோவலிமையையே அழித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான இராணுவ இழப்புக்களால் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியதும், வழமைபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் இசுரேலிய தயாரிப்பு விமானங்களைப் பயன்படுத்திக் குண்டுவீசும் கைங்கரியத்தில் சந்திரிகா அரசு இறங்கியுள்ளது.

ஆனால் அதேநேரத்தில், சிறிலங்காவின் பொருண்மியம் எல்லாமே போரிற்கான ஆயுதங்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருப்பதினால் பொருண்மியம் மீளமுடியாத அளவுக்குப் படுவேகமாக வீழ்ந்து கொண்டிருக்கிறது. இதனால், குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள தமிழர்களின் புனர்வாழ்வு – புனருத்தாரணத்திற்கு உதவி தேவை என்ற காரணத்தைக் காட்டி, வெளிநாடுகளிடம் 1300 கோடி ரூபாக்களைக் கேட்டுள்ளது சிறிலங்கா அரசு. யாருக்கு, யார் உதவுவார்கள் என்ற யதார்த்தத்தை வெளிநாடுகள் சிந்திக்க வேண்டியநேரம் இது. தமிழ் மக்களை எதிரிகளாகப் பாவித்து அவர்களுடன் போரில் இறங்கியுள்ள சிறிலங்கா அரசு, அவர்களுக்குப் பொருண்மிய உதவிகள் செய்யுமா? தமிழ் மக்களுக்கு உணவு, மருந்து வழங்கங்களை மட்டுமல்ல அவர்களின் குழந்தைகளுக்கான பாலுணவு, பள்ளிப் புத்தகங்கள், நோய்த் தடுப்பு மருந்துகள் என்பவற்றைக்கூட வழங்க மறுக்கும் சிறிலங்கா அரசு, இந்த வெளிநாட்டு உதவியைத் தமிழ்ப் பிரதேசங்களில் பயன்படுத்துமா? என்பதை உதவி வழங்கும் நாடுகள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். எனவே ஒட்டுமொத்தமாக உயிர்விட்டுக்கொண்டிருக்கும் சிறிலங்காவின் பொருண்மியத்தைக் கொண்டு, தனது போரிற்கு உயிர் கொடுக்க முடியாமல் தவிக்கும் சிறிலங்கா வெளிநாட்டு உதவி எனும் 'ஒட்சிசன்' கொடுத்தாவது அதனைத் தாக்குப்பிடிக்கத் தவிக்கிறது. இதற்கு உற்சாக பானமாக, திறந்த பொருண்மியத்தினால் வெளிநாட்டு முதலீடுகளுக்குக் கதவுகளை அகலமாகத் திறக்கும் சிறிலங்கா, தனது திறந்த பொருண்மியக் கொள்கைக்கு விடுதலைப் புலிகளின் போர்நோக்கே தடையாக இருக்கின்றது என்ற பிரச்சாரத் தந்திரத்தையும் கையாள்கிறது. உண்மையில் விடுதலைப் புலிகளுக்கு போர் நோக்கு அல்ல – அமைதியே என்றும் இலக்கு. இந்த அமைதியைச் சுதந்திரமடைந்த நாள் முதல் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி தரமறுத்து, இனஅழிப்பு நோக்குடன் செயற்பட்டதினாலேயே போர் பிறந்தது. இந்த உண்மை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் சிறிலங்கா அரசு கொடிய சட்டங்களையும் செயற்பாடுகளையும் அமுலாக்கிப் போட்டு, தான் செய்த செயலால் தானே அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதுவே, வெளிநாட்டு மூலதனத்துக்கும் பொருண்மிய முயற்சிகளுக்கும் ஆபத்துக்களை எதிர்நோக்க வைக்கின்றது என்ற உண்மையையும் சர்வதேச முதலீட்டாளர்கள் சிந்திக்க வேண்டிய நேரம் இது. அதுமட்டுமல்ல, சந்திரிகா கூறும் 'பயங்கரவாதம்' என்பதன் உற்பத்தி, சந்திரிகாவின் அரசே என்பதனைச் சர்வதேச உலகு உணர வேண்டும்.

இச்சிக்கல்களைச் சமாளிக்கவே தன்னிச்சையான அரசியல் தீர்வு ஆலோசனைகளை முன்வைத்த சந்திரிகா, அதனையும்கூட சிறிலங்காவின் இன்றைய கட்டமைப்பு (சிங்கள–பௌத்த பேரினவாத ஆதிக்கம்) அனுமதிக்காது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திவிட்டார். இதனை உறுதி செய்வதுபோல், ஐக்கிய தேசியக் கட்சி எந்தவிதமான கூட்டு அரசியலதிகாரப் பரவலாக்கலுக்கும் தான் சம்மதிக்கமாட்டாது என்பதை ஆணித்தரமாகக் கூறிவிட்டது. இராணுவ விரிவாக்கத்தோடு, இவ்வாறு அரசியல் – பொருண்மிய ரீதியாகவும் மீளமுடியாத அளவுக்குத் தாக்குப்பட்டுவரும் சந்திரிகா, தமிழ் மக்களைத் தாக்குவதால் அதனை சமாளிக்கலாம் என நினைக்கிறார். இதனால் மீண்டும் முல்லை மண்ணில் குண்டு வீச்சுக்களும், ஆனையிறவில் எறிகணைகளும் முழக்கமிடுகின்றன. ஆனால், தமிழர்களை அடிமைப்படுத்த, அழித்தொழிக்க சந்திரிகாவினால் தொடர்ந்து வெட்டப்படும் படுகுழிக்குள் சந்திரிகாவும் சிங்களப் பேரினவாதமுமே விழும் என்ற உண்மையை, உறுதியும் தியாகவுமிக்க தமிழீழ போராட்ட வரலாறு தனதாக்கும். இதனை விரைவுபடுத்த உறுதியான உணர்வினையும் இனமானத்தையும் நிறைந்தளவு பணப்பலத்தையும் அளிக்க, உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் முன்வருதல் பிரதான வரலாற்றுத் தேவையாகும். ❋


# யூலை 5 கரும்புலிகள் நாள்

## "உலகமே எங்கள் உணர்வைப் புரிந்து கொள்"

-கரும்புலிகளது மன அலைகளிலிருந்து.....

**இ**னவெறி ஊட்டப்பட்ட சிங்களப்படைகள் தமிழீழத்தில் ஆழக்கால் பதித்து, கொடூரமான வகையில் இனஅழிப்புச் செய்த வேளையிலேயே, தமிழீழத் தேசியத் தலைவரின் புதிய போராட்ட வடிவமாக நாம் கரும்புலிகளாக உருவானோம். 1987 யூலை 5ஆம் நாள், நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாமை முதற் கரும்புலி கப்டன் மில்லர் தாக்கியழித்து, தன்னைத் தமிழீத்திற்குத் தற்கொடை ஆக்கியதிலிருந்தே எமது கரும்புலிகள் சகாப்தம் உருவானது.

சிலர் நினைப்பது போல் நாம் மனநோய் கொண்ட தற்கொலையாளிகள் அல்லர்; தற்கொடையாளர்களே! வாழ்க்கையில் விரக்தியடைந்து கோழையாக மாறுபவனே தற்கொலை செய்து



கொள்கின்றான். கரும்புலிகளாகிய நாம் இதற்கு எதிர்மாறானவர்கள். எம்மினம் வாழ்வதற்காக – எம்மினத்தின் விடுதலைக்காக – தமிழீழத்தின் மலர்வுக்காக அபாரத் துணிவுடன் எம்மை அழிப்பதன் மூலம், எதிரியை அழித்து எம்மையே முழுமையாக ஈகம் செய்பவர்கள். ஏனையோர்களைப் போன்று நாமும் வாழ விரும்புகின்றோம். ஆனால், அடிமைகளாக வாழ விரும்பவில்லை. சுதந்திர மனிதர்களாகவே வாழ விரும்புகின்றோம். அதனாலேயே எம்மை அழித் தாவது எமது சந்ததியைச் சுதந்திரமாக வாழவைக்க விரும்புகின்றோம்.

எமது உயிரைவிட, தமிழீழத்திலேயே தாகம் கொண்டுள்ளோம். அதனாலேயே, சாவுக்கு நாள் குறித்து, இவ்வாறுதான் சாவு வரும் என்று தெரிந்து கொண்டும் எமது இனத்தை அழிக்கக் கங்கணம் கட்டிநிற்கும் எதிரியை ஒழிப்பதற்குத் துணிவுடன் செல்கின்றோம்; விருப்புடன் செல்கின்றோம். மனநிறைவுடன் வெடிக்கின்றோம்.

எம்மினத்தை அழிக்கவரும் எதிரியை அழிக்கத் தேவையான ஆயுதங்கள் எம்மிடம் போதியளவில் இல்லை. ஆயுத பலம் மட்டுமல்ல, ஆளணிப் பலமும் போதியதாக இல்லை. அதனாலேயே, ஆயுத பலமும் ஆட்பலமும் மிக்க எதிரியை அழிக்க, எதிரியிடமிருந்து எமது மக்களைக் காப்பாற்ற உயிராயுதமாக மாறியுள்ளோம். உலகிலுள்ள ஆயுதங்களில் எமது உயிராயுதத்தினை மட்டுமே எதிரியானவன் பெறமுடியாதுள்ளான். இதுவே, எதிரியை நிலைகுலையவும் திணறவும் வைக்கின்ற மிகவும் சக்தி வாய்ந்த அபூர்வமான ஆயுதமாகவும் உள்ளது.

அதனால், உலகமே எங்கள் உணர்வுகளை இனியாவது சரியாகப் புரிந்துகொள்! எமது தேசிய விடுதலைப் போரட்டத்தில் உள்ள நீதித் தன்மையை, நியாயத்தைப் புரிந்துகொண்டு அதனை அங்கீகரிப்பதோடு, எம்மினத்தை அழிப்பவனுக்கு உதவு வதையும் நிறுத்துவதன் மூலமே எங்கள் கரும்புலிகள் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். அதுவரை, கரும்புலிகள் உருவாகுவது தவிர்க்க முடியாதது.

### சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள்:

-கரும்புலிகள் நினைவாக தமிழீழத் தேசியத் தலைவர்

1987 யூலை 5இல், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலைநாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை, இந்த இளம்புலி வீரன் தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படை



யணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான். கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் அறிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும் போது இனம்புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்க ளுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கு மென்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

### இது கரும்புலிகளின் சகாப்தம்!

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்தி பூசிப்போமாக.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிர்ச்சி தந்தது ஆச்சரியமல்ல!

காரைநகர் கடற்படைத் தளத்தினுள் கடற்புலிகள் நடத்திய தாக்குலானது, இந்திய கடற்படையின் விசேட கடற்படை அணி, அமெரிக்காவின் 'சீல்ஸ்' எனப்படும் விசேட கடற்படை அணி ஆகிய உலகின் தலைசிறந்த கடற்படை அணிகள் நடத்தும் 'கொமாண்டோ' பாணியிலான தாக்குதலை நினைவூட்டுகிறது எனக் கூறுகிறார், கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்'சின் இராணுவ ஆய்வாளர். இதேவேளை, வடபிராந்திய கடற்படைத் தலைமையகமான காரைநகர் சிறிலங்கா கடற்படைத் தளத்தினுள் நடத்தப்பட்ட கடற்புலிகளின் தாக்குதலை, எவ்வாறு நடாத்தியிருக்க முடியும் என்றொரு கேள்வியைச் சிறிலங்காப் படை வட்டாரங்கள் எழுப்பியுள்ளது என இவ் ஆய்வாளர் தெரிவிக்கிறார்.

> காரைநகர் கடற்படைத் தளத்தினுள் கடற்புலிகள் நடத்திய தாக்குலானது, இந்திய கடற்படையின் விசேட கடற்படை அணி, அமெரிக்காவின் 'சீல்ஸ்' எனப்படும் விசேட கடற்படை அணி ஆகிய உலகின் தலை சிறந்த கடற்படை அணிகள் நடத்தும் 'கொமாண்டோ" பாணியிலான தாக்குதலை நினைவூட்டுகிறது

காரைநகர் கடற்படைத் தளத்தில், அங்கிருந்த கடற்படைக் கலங்களைக் கடற்புலிகள் குண்டு வைத்துத் தாக்கி மூழ்கடித்தமை குறித்து, 'சண்டே ரைம்ஸ்'ன் இராணுவ ஆய்வாளர் செய்துள்ள ஒப்பீடும் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் இராணுவ ஆய்வாளர், பாதுகாப்புப் படை வட்டாரங்களில் இத் தாக்குதல் ஏற்படுத்திய அதிர்ச்சி குறித்து வெளியிட்ட தகவலும் முற்றிலும் நியாயப்பட்டவையே ஆகும். ஏனெனில், காரைநகர் கடற்படைத் தளத்தினுள் கடற்புலிகள் நடத்திய தாக்குதலானது எட்டமுடியாத இலக்கு ஒன்றை எட்டியதாகவே உள்ளது. ஏனெனில், குடாநாட்டில் சிறிலங்கா ஆயுதப்படையின் உயர்நிலைப் பாதுகாப்புக் கொண்ட இருமுக்கிய கேந்திர நிலையங்களில் காரைநகர் கடற்படைத்தளமும் ஒன்று. அதிலும் மத்திய கேந்திர நிலையான பலாலி, காங்கேசன்துறை உள்ளிட்ட கூட்டுப்படைத் தளத்தின் கெட்டியான பாதுகாப்பினைவிட, காரைநகர் கடற்படைத் தளம் பாதுகாப்பு மிக்கதாகும். அத்தோடு, அரசின் தகவலின்படி பார்த்தால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து குறைந்தது ஐம்பது கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பால் உள்ள தொடுதளமுமாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் ஒன்றிலிருந்து இலகுவில் எட்டிவிட முடியாத தொலைவிலேயே உள்ளது. அதிலும் தரைவழிப் பாதை முக்கியமாகத் தடைப்பட்டது போன்றதொரு நிலையில், கடல்வழிப் பாதையானது முழுமையான இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான பிரதேசத்தால் சூழப்பட்டதும் உயர்நிலைப் பாதுகாப்புக் கொண்டதுமான கடல்வழியாகும். இந்தநிலையில்ஈ கரும்புலிகளின் நீரடிநீச்சல் பிரிவினர் இவ் இலக்கிற்கு எவ்வாறு ஊடுருவிச் சென்றனர்? இவர்கள் இத்தளத்தை எவ்வாறு சென்றடைந்தனர்? என்பது பெரும் ஆச்சரியத்துக்குரிய கேள்விகளேயாகும். இக்கேள்விகளுக்குச் சிறிலங்கா ஆயுதப் படையினரால் பதில் கண்டுபிடிக்க முடியுமென நம்புவதற்கு இடமில்லை. ஆனால் இத்தாக்குதல், சில விடயங்களைச் சிறிலங்கா அரசுக்கு நிச்சயம் புரிய வைத்திருக்கும்.

இதில் ஒன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ். குடாநாட்டில் எந்த கேந்திர நிலையங்களையும் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் வல்லமையைப் பெற்றுள்ளது என்பது. இரண்டாவது, இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பினும் தமிழரின் தாயகம், அதன் மைந்தர்களுக்கு – புலிகளுக்குப் போதிய மறைவிடங்களைக் கொண்டுள்ளது என்பதாகும். இதைத்தவிர முக்கியமான விடயமாகக் கொள்ளக் கூடியது, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற நிலைப்பாடு, வெற்றிபெறப்போவதில்லை என்பதாகும். அதாவது சிறிலங்கா அரசினால் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றினை அமுல்படுத்திவிட முடியாது என்பதேயாகும். சிறிலங்கா இராணுவமானது, யாழ். குடாநாட்டைத் தமது பூரணமான கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டதாகப் பிரச்சாரம் செய்து கொண்டாலும், கடந்த சில வாரங்களாகக் குடாநாட்டில் மோதல்கள் ஆங்காங்கே நடைபெற்ற வண்ணமேயுள்ளன. இராணுவத்தினர் அங்கு சுதந்திரமாக நடமாடிட முடியாது. அதிலும் காரைநகர் கடற்படைத் தளத்தினில் நடந்த தாக்குதல் மூலம் ஆயுதப்படையினரின் சுதந்திரமான நடமாட்டம் மட்டுமல்ல, முகாம்களிலும் அவர்கள் பூரண விழிப்பு நிலையிலேயே என்றும் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், காரைநகர்த்தளம் மீதான தாக்குதல், புலிகளின் தாக்குதல் திறனை மட்டுமல்ல, யாழ். குடாநாடு, இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது என்ற கூற்றை பொய்ப்பித்துள்ளதோடு, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற அரசின் நிலைப்பாட்டிற்கு கொடுக்கப்பட்ட அடியுமாகும். ஆனால் இதைச் சந்திரிகா அரசு, எந்தளவிற்கு புரிந்து கொள்கிறதோ தெரியாது. ஆனாலும் இதனைச் சந்திரிகா அரசு விரைவில் புரிந்து கொண்டே ஆகவேண்டும். ஏனெனில் இத்தாக்குதலானது, யாழ். குடாநாட்டில் புலிகள் ஆரம்பித்துள்ள புதிய தந்திரோபாயத்தின் தொடக்கமாகும். சிறிது காலம் செல்லவே இத் தந்திரோபாயத்தின் முழுவடிவமும் வெளிப்படும்.

> *காரைநகர்த்தளம் மீதான தாக்குதல், புலிகளின் தாக்குதல் திறனை மட்டுமல்ல, யாழ். குடாநாடு, இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது என்ற கூற்றை பொய்ப்பித்துள்ளதோடு, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற அரசின் நிலைப்பாட்டிற்கு கொடுக்கப்பட்ட அடியுமாகும்.*

# தப்பான கணிப்பீடும் தவறான நடவடிக்கையும்

அண்மைக்காலத்தில் கிழக்கில், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளது என்பது வெளிப் படையானது. இதேவேளை, கிழக்கு மாகாணத்திலும் அதன் எல்லையோர மாகாணங்களிலும் புலிகளின் ஊடுருவல்களும் அதிகரித்துள்ளன. அத்துடன் பல தாக்குதல்களில் அவர்கள், சிறிலங்கா ஆயுதப் படையினருக்குக் குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்துகிறார்கள் என்பது சிறிலங்காப் புலனாய்வுத் துறையின் தகவல் ஆகும். ஆனால், இது பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டதொன்று. இதனை எதிர்பார்த்துள்ள இராணுவ ஆய் வாளர்களும், நோக்குநர்களும் தவறான கணிப்பீட்டைக் கொண்டவர்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

> ஒரு கெரில்லா இயக்கத்துக்குப் பெருமெடுப்பிலான அழுத்தங் - களை மரபு வழிரீதியில் இராணுவம் ஏற்படுத்தும் போது, மறு புறத்தில் கெரில்லா இயக்கம் தமது வாய்ப்புக்கேற்ப போராட்டத்தை நடத்திச் செல்லும் என்பது எதிர்பார்க்-கப்பட வேண்டியதே.

ஏனெனில் ஒரு கெரில்லா இயக்கத்துக்குப் பெருமெடுப்பிலான அழுத்தங்களை மரபு வழி ரீதியில் இராணுவம் ஏற்படுத்தும் போது, மறுபுறத்தில் கெரில்லா இயக்கம் தமது வாய்ப்புக்கேற்ப போராட்டத்தை நடத்திச் செல்லும் என்பது எதிர் பார்க்கப்பட வேண்டியதே. அதிலும் யாழ். குடாநாட்டின் மீதான இராணுவப் படை யெடுப்பானது, பிரச்சாரத்திற்கும், வெற்றி கொண்டவர்களுக்கும், சந்திரிகா அரசுக்கும் பெரும் அளவில் உதவக் கூடியவைதான். ஆனால், இராணுவ ரீதியில் அதன் முதன்மையானது பெரும் சர்ச்சைக்கு உரியதொன்றே ஆகும்.

யாழ். குடாநாடு, தமிழ் மக்களின் கேந்திர நிலைகளில் முக்கியமானது என்பதில் கேள்விக்கே இடமில்லை. ஆனால், அதனைக் கைப்பற்றுவதன் மூலம், விடுதலைப் போராட்டமே தோற்கடிக் கப்பட்டுவிடும் என்ற சந்திரிகா அரசின் கணிப்பீடுகள் தப்பானவை. மாறாக யாழ். குடாநாட்டில் புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு, அவர்களைப் போராட்ட த்தைத் தீவிரப்படுத்த உதவியுள்ளது என்பதே உண்மையாகும். இதில் முக்கியமானது, யாழ். குடாநாட்டின் இழப்பு. இது, தமிழர் தாயகத்தின் முக்கிய நிலை ஒன்றைத் தாம் பறிகொடுத்து விட்டதாகிய உணர்வையே தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, "யாழ். குடாநாடு மீட்கப்பட்டே ஆக வேண்டும்" என்ற உறுதியை அவர்கள் மத்தியில் அது ஏற்படுத்தி யுள்ளது. இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய வலுவை உண்டு பண்ணியுள்ளது.

இரண்டாவது முக்கிய அம்சம், அரசின் பிரச்சார வெற்றிக்காகச் சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடம் செய்த முன்யோசனையில்லாத செயற்பாடு ஆகும். அதாவது, யாழ். குடாநாட்டில் படை யெடுப்பதற்கென பெருமளவு துருப்புக் களை முடக்கியமையாகும். யாழ். குடாநாடு அரசியல் பொருண்மிய ரீதியாகக் கேந்திர நிலையாக இருப்பினும், பூகோள ரீதியில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாகும். சுண்டிக்குளம் பகுதியும் ஒரு சிறு நிலப்பகுதியினால் அதுவும் ஒரு பருவ காலத்தில் மட்டும் பிரதான நிலப்பரப்புடன் இணைகின்றது. யாழ். குடாநாடு ஒரு தீவு போன்ற நிலையிலேயே உண்மையில் உள்ளது. இப்பகுதியில் முக்கியமான அம்சங்களுடன் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 50 மைல் நீளமும் சராசரியாக சுமார் 52 மைல் அகலமும் கொண்ட பெருநிலப்பரப்புப் பகுதிகள் ஊடாக மட்டுமல்ல, இராணுவ ரீதியாகவும் குடாநாட்டை – அங்குள்ள சிறிலங்கா இராணுவத்தைத் தனிமைப் படுத்தியுள்ளது. அத்தோடு, விமானப் படையும், கடற்படையும் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என்ற நிலையில், இத் தனிமைப்படுத்தலை மேலும் உறுதி செய்துள்ளது. மேலும், சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட குடாநாட்டின் மீதான படையெடுப்பு, அவர்கள் குறிக்கோளின் முக்கிய பகுதியான புலிகளை அழித்தல், பலவீனப்படுத்தல் என்ற அம்சத்தை நிறை வேற்றத் தவறியது. இந்த நிலையானது, யாழ். குடாநாட்டில் பெருமளவில் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகள், குடா நாட்டிற்கு வெளியே தமது நடவடிக் கைகளைப் பெரிதளவில் எடுத்துச் செல்லும் வாய்ப்பை உருவாக்கியது. இந்த வகையில் யாழ். குடாநாடு மீதான படை யெடுப்பு இராணுவத்தைத் தனிமைப்பட்ட இடத்தில் ஒதுக்கிவிட்டது. அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக் கைகளை வடக்கு – கிழக்கில் விஸ்தரிக்க வாய்ப்பை உருவாக்கியது எனலாம். இது சந்திரிகா அரசிற்குப் புதிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளதோடு, சிறிலங்கா இராணுவத்திற்குப் பொறியில் சிக்கியதொரு நிலமையை வாக்கியுள்ளது.

> சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட குடாநாட்டின் மீதான படையெடுப்பு, அவர்கள் குறிக்கோளின் முக்கிய பகுதியான புலிகளை அழித்தல், பலவீனப்படுத்தல் என்ற அம்சத்தை நிறைவேற்றத் தவறியது. இந்த நிலையானது, யாழ். குடாநாட்டில் பெருமளவில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகள், குடாநாட்டிற்கு வெளியே தமது நடவடிக்கைகளைப் பெரிதளவில் எடுத்துச் செல்லும் வாய்ப்பை உருவாக்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள இனவாதத்திற்கு ஒரு மறுப்பு

**அறிமுகம்.**

*ஈழத்தமிழரை ஒடுக்குவதற்கான ஆதார சுருதியாய், ஒரு பொய்யான கருத்துலகைச் சிங்கள ஆட்சியாளர் ஸ்தாபித்துள்ளனர். கற்பனை ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பொய்யான வரலாற்றிலிருந்தே, இவர்கள் தமது பொய்யான கருத்துலகத்தை, இலங்கைக்கு உள்ளும் புறமும் ஸ்தாபித்துள்ளனர். இந்தப் புனைகதையானது, இன அழிப்பிற்கான சித்தாந்தம் என்ற வகையில், இது ஒரு பாரதூரமான குற்றச்செயலாகும். இந்தப் பொய்யான கருத்துலகக் குற்றச்செயலில் இருந்துதான், தமிழருக்கு எதிரான அனைத்துக் குற்றச்செயல்களும் சுவாலைவிட்டு எழுகின்றன.*

*முற்றிலும் உண்மையான வரலாற்றிலிருந்து, தமிழ் மக்களுக்கான நியாயமும், அவர்கள் போராட நேர்ந்த அவசியமும் இங்கு சிங்கள ஒடுக்குமுறை கூறும் கருத்துக்களுக்கு எதிரான பதிலுரையாக எழுதப்பட்டுள்ளன.*

*இலங்கைத் தீவை முற்றிலும் சிங்கள மயமாக்குவதே சிங்கள இனவாதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். தமிழரை, சிங்களவராக இனமாற்றம் செய்வது (ASSIMILATION) அல்லது தமிழரை ஒழிப்பது என்பதே சிங்கள இனவாதத்தின் பண்பாகும். "சுதந்திரத்தை" த் தொடர்ந்து, சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரும் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் சிங்களமயமாக்கலை இலக்காகக் கொண்டே அமைந்தன.*

*சிங்கள ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா "சமாதானம்", "போர்" எனும் இரு பதங்களையும் பிரயோகித்து வருகிறார். இதில் "சமாதானம்" என்பதன் அர்த்தம், தமிழர் சரணடைந்து சிங்களமயமாக்கலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதனை ஏற்க மறுக்குமிடத்து போர்மூலம் இன ஒழிப்பிற்கான முன் நிபந்தனையைத் தோற்றுவித்தல் என்பதே "போர்" என்பதன் அர்த்தமாகும்.*

"இந்து சமுத்திரத்தின் முத்து" என்றும், "தீவுகளின் இராஜகுமாரி" என்றும், "சொர்க்க புரி"என்றும் வரலாற்றறிஞர்களால் வர்ணிக் கப்பட்ட இலங்கைத் தீவு இன்று, "இந்து சமுத்திரத்தின் இரத்தத் துளிகளாய்" மாறியுள்ளது.

சிங்கள அரசு, தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து ஈழத்தமிழினத்தை ஒடுக்கி வருகின்றது. அரச பலத்தையும் மற்றும் சகல உள்நாட்டு வளங்களையும் தமிழருக்கெதிராகச் சிங்கள அரசு ஒன்று திரட்டிப் பிரயோகிப்பது மட்டுமன்றி, அவற்றிற்கு அப்பால் அந்நிய தேசங்களிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருளாதார–இராணுவ உதவிகளைப்பெற்றும் தமிழினத்தை ஒடுக்கி வருகின்றது. தமிழினத்திற்கு எதிரான கருத்துலகைப் பாமரச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி–அதனைச் சகல வகைகளிலும் பரப்புவதுடன், சர்வதேசரீதியாகவும் பெரும் பிரச்சார யுத்தத்தைச் சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டு, தமிழினத்தைச் சட்டங்களாலும், அரசியற் பொருளாதாரத் திட்டங்களினாலும், ஆயுதங்களினாலும், நிர்வாக நடைமுறைகளினாலும் மொத்தமாய் ஒடுக்கி வருகின்றது.

***புத்தபகவான் அகிம்சையைப் போதித்தார்: ஆனால் சிங்கள பௌத்தரோ, வாளேந்திய சிங்கமாய் தமிழின எதிர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். புத்தபகவான் அரசமர நிழலில் தவமிருந்தார். ஆனால் சிங்கள இனவாதிகளோ தமிழரின் இரத்த ஆற்றில் நீந்தி விளையாடுகின்றனர்.***

புத்தபகவான் அகிம்சையைப் போதித்தார்: ஆனால் சிங்கள பௌத்தரோ, வாளேந்திய சிங்கமாய் தமிழின எதிர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். புத்தபகவான் அரசமர நிழலில் தவமிருந்தார். ஆனால் சிங்கள இனவாதிகளோ தமிழரின் இரத்த ஆற்றில் நீந்தி விளையாடுகின்றனர்.

இதுவரை காலமும் சிங்கள இனவாதத்திற்குத் தலைமைதாங்கிய சிங்களத் தலைவர்களிலிருந்து, சந்திரிகா ஒரு வகையில் வேறுபடுகின்றார். பழைய பாணியில் இனவாதத்திற்குத் தலைமைதாங்க முடியாது என்பதே இதன் உண்மையாகும். சாத்தான் வேதம் ஓதுவதுபோல், சந்திரிகா சமாதானம்பேசி இனவாதத்தை அரங்கேற்றுகிறார். அந்த வகையில் சந்திரிகா 'நவ இனவாதி' யாக (Neo Chauvinist) காணப்படுகின்றார்.

சிங்கள இனவாதம் விருப்பு வெறுப்புக்களைக் கடந்து நிறுவனமயப்பட்டுள்ளது. எந்த ஒரு மனிதனின் நல்லெண்ணத்தினாலும் தணிக்கப்படக்கூடிய நிலையில், சிங்கள இனவாதம் இன்றில்லை. அத்துடன் சந்திரிகா, இனவாதத்தைத் தணிப்பதற்கான பாத்திரம் வகிப்பவருமல்லர்: மாறாக, சிங்கள இனவாதத்தின் பழைய பாதை இன்றைய சூழலில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், நெருக்கடியிலிருந்து இனவாதத்தைப் புதிய சூழலுக்கேற்ப முன் எடுப்பவராய் உள்ளார். எனவே சமாதானத்திற்கான ஒரே வழி, தமிழர் பிரிந்து செல்வது மட்டுமே என்பதைச் சமாதான விரும்பிகளும், சிங்களவர்களும் உணர்வார்களா?

இங்கு, பிரச்சினை சிங்கள ஒடுக்குமுறையே தவிர, போராட்டமல்ல. ஒடுக்குவோர் பக்கத்திலிருந்துதான் சமாதானம் வரவேண்டுமே தவிர, ஒடுக்கப்படுவோர் பக்கமிருந்தல்ல: ஒடுக்குமுறை தீர்ந்தால் சமாதானம் பிறக்கும்.

தமிழரின் பிரச்சினை, வெறும் சட்டப் பிரச்சனை என்ற எல்லையை இப்போது கடந்து விட்டது. தமிழரின் பிரச்சினை வெறும் தனி மனித உரிமைப் (Individual rights) பிரச்சினை அல்ல: தேசிய இனம் என்ற வகையிலான கூட்டுரிமை (Collective rights) ப் பிரச்சினையாகும். அது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாகும். தொடர்ச்சியான நீண்டகால ஒடுக்குமுறையின் விளைவால், இணைந்துவாழ முடியாத அளவிற்கு மனம் பிளவுபட்டிருக்கும் பிரச்சினையாகும்.

இலங்கைத் தீவில் தமிழரும் சிங்களவரும் இருவேறு தேசிய இனங்களாய் வளர்ந்துள்ளனர். காலனித்துவ ஆதிக்கத்தின் பொருட்டு தமிழ், சிங்கள இனங்களை ஆங்கிலேயர் ஒரே அரசியல் நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவந்தனர். இதன்பின் எண்ணிக்கையில் பெரிய இனமான சிங்களவருடன் இணைந்து, ஐக்கிய இலங்கையில் தமது தனித்துவங்களைப் பேணிக் கொண்டு அந்நியோன்னியமாய் வாழத் தமிழர் முற்பட்டனர். ஆனால் சிங்கள பௌத்தரோ, பிழையான ஐதீகத்தின் அடிப்படையில், ஓரினத் தன்மைக்குரிய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வற்புறுத்தியும், திணித்தும் வந்தனர். இதன்விளைவாக நவீன வரலாற்றில் சிங்கள–தமிழ் இன

***பிரச்சினை சிங்கள ஒடுக்குமுறையே தவிர, போராட்டமல்ல. ஒடுக்குவோர் பக்கத்திலிருந்துதான் சமாதானம் வரவேண்டுமே தவிர, ஒடுக்கப்படுவோர் பக்கமிருந்தல்ல: ஒடுக்குமுறை தீர்ந்தால் சமாதானம் பிறக்கும்.***

முரண்பாடு வளர்ந்து, கூர்மை பெறத் தொடங்கியது.

தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் பலர் விளங்கியும், ஏற்றும், வாக்குறுதிகளை அளித்தும், அவற்றிற்காக வக்காலத்து வாங்கியும் வந்தனர். இவற்றிற்கான சில உதாரணங்களாவன:

1) சமஸ்டி அரசியல் அமைப்பு முறைதான் பல்லினத் தன்மை வாய்ந்த இலங்கைக்குச் சிறந்த தீர்வாகும் என, 1926ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா வற்புறுத்தினார்.

2) தமிழ்மொழி ஒரு செழிப்பான இலக்கிய வளம்மிக்க மொழியென்றும், அதனையும் உத்தியோக மொழியாக்குவதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், எனவே தமிழ் மொழியையும் உத்தியோக மொழியாக்க வேண்டும் என்றும், 1944ஆம் ஆண்டு அரசாங்க சபையில் பண்டாரநாயக்கா வற்புறுத்தி விவாதித்ததுடன், அது அரசாங்க சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3)நவீன ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பவேண்டிய பணி, ஒரு மொழியாலன்றி இரு மொழிகளினாலுமே (தமிழ், சிங்களம்) ஆகும் என்று 1951 ஆம் ஆண்டு, டி.எஸ். சேனநாயக்கா அழுத்தம் திருத்தமாய்க் கூறினார்.

4) தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனத்தவர் என்றும், அவர்கள் பிரிந்து செல்லும் சுய நிர்ணய உரிமையை உடையவர்கள் என்றும், 1944ஆம் ஆண்டு கலாநிதி விக்கிரமசிங்கா தலைமையிலான இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது.

5) தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை 1955ஆம் ஆண்டு கலாநிதி என்.எம். பெரேரா நாடாளுமன்றில் சமர்ப்பித்து வாதிட்டதுடன், அதற்காக அவரும் அவரது சமசமாஜக்கட்சியினரும் தீவளாவிய பெரும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டுவந்தனர்.

6) தமிழையும் உத்தியோக மொழியாக்கத் தவறினால், தீவு இரத்தப்பிழம்பாக எதிர்காலத்தில் மாறும் என்றும், தீவு இரண்டாகப் பிரிய நேரும் என்றும் சமசமாஜக்கட்சித் தலைவர்களான கலாநிதிகள் என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா போன்றோரும் கொம்யூனிஸ்ற் கட்சித் தலைவர்களான கலாநிதி விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன் போன்றோரும் 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 'தனிச சிங்கள மசோதா' வை எதிர்த்தனர்.

மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றும் இருபெரும் சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற கொள்கையையே கொண்டிருந்தன. ஆனால், இவ்விரு சிங்களப் பெரும் கட்சிகளும் 1955ஆம் ஆண்டு, தமது கொள்கையையும், கருத்தையும் வாக்குறுதிகளையும் நேர் எதிர் மாறாய் மாற்றிக்கொண்டன.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த வேளை, தமிழ் மண்ணில் டி.எஸ். சேனநாயக்காவால் குடியேற்றப் பட்டிருந்த சிங்களக் குடியேற்ற வாசிகள், தமிழ்க் குடியானவர் 156 பேரை கல்லோயாவில் வெட்டிப் படுகொலை புரிந்தனர். பிரதமர் பண்டாரநாயக்கா இதற்கு எதிராய் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதிருந்தார். இப்படுகொலையும், தனிச் சிங்களச் சட்டம் நிறை வேற்றப்பட்டமையும், 1958ஆம் ஆண்டு பாரிய இனப்படுகொலையும் பிரதமர் பண்டாரநாயக்கா, சமஸ்டிக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்துடன் 1957ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தை, 1958ஆம் ஆண்டு ஒருதலைப்பட்சமாகக் கைவிட்டமையும் போன்ற அம்சங்கள் அனைத்தும் இணைந்து, தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின. இதனைத் தொடர்ந்து சிங்களவருடன் இணைந்து வாழமுடியாது என்ற உணர்விற்குத் தமிழர் தள்ளப் படலாயினர்.

1958ஆம் ஆண்டு தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப் பட்ட பாரிய இனப்படுகொலைபற்றி, சிங்களவரான பிரபல பத்திரிகையாளர் தார்சி வித்தாச்சி, தான் எழுதிய 'அவசரகாலம்–58' (Emergency-58) என்ற நூலின் முடிவில், "தமிழர் சிங்களவர் ஆகிய இரு இனங்களும் பிரிந்து செல்லும் நிலைக்கு வந்துவிட்டனவா?" என்ற வினாவை எழுப்பியிருந்தார். தமிழர், சிங்களவருடன் இனியும் இணைந்து ஐக்கியமாய் வாழ முடியாது என்பதை, 1955ஆம் ஆண்டிற்கும் 1958ஆம்

- மு. திருநாவுக்கரசு -

தொடர்ச்சி 16 ம் பக்கம்...

www.tamilarangam.net



# தென்தமிழீழத்தின் கதை கண்ணீரிலும் இரத்தத்திலும் எழுதப்படுகிறது

# வாழ்வு!

என்ர மகள்.... என்ர மகள்..... உன்ன இந்த நிலையில பாப்பம் எண்டு நான் நினைக்கயில்லையே...... உன்ன மணக்கோலத்தில பாப்பன் எண்டெல்லோ நான் கனவு கண்டன். காலையில நீ எப்படிச் சிரிச்சுக் கொண்டு போனாய். இப்ப இப்படிக் கிடக்கிறியே...... என்ர மகள் என்ர... மகள்..... – என்ர சுமதி.....

என்ற அழுகுரல் அந்த வீட்டிலிருந்து இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தது. பட்டுப்புடவை கட்டி, நெற்றித் திலகம் சிரிக்க, முகத்தில் மெல்லிய வேதனை கோடிட மலர் மாலைகளுக்குள் புன்னகையோடு, அமைதியாக நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் சுமதி. தலைமாட்டிற் சாம்பிராணி புகைந்து கொண்டிருக்க இரண்டு குத்துவிளக்குகள் மின்னி மின்னி ஒளிவீசிக்கொண்டிருந்தன. சூழ இருந்தவர்களின் முகங்களில் கலவரமும் பீதியும் குடி கொண்டிருந்ததை அந்த மங்கிய ஒளியிலும் காணக்கூடியதாக இருந்தது. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயம். இந்த இரவு எப்படிக் கழியுமோ என்ற ஏக்கம். எங்கும் ஒரே அமைதி. அம்மாவின் மெல்லிய அழுகுரலைத் தவிர, எந்தச் சத்தமும் இல்லை. காலையில் கலகலப்பாக இருந்த வீடு, இப்போது மயான அமைதியில் மூழ்கிக் கிடந்தது.

கும்புறுமுனை.

மீனவக் குடும்பங்களைக் கொண்ட ஒரு அழகிய தென் தமிழீழக் கிராமம். அயற் கிராமங்களில் இராணுவத்தினர் புகுந்து நடத்தும் வெறியாட்டங்கள் போல் இங்கு நடக்காவிட்டாலும், இராணுவத்தின் எறிகணை வீச்சிலிருந்து இந்தக் கிராமமும் தப்பவில்லை. ஆழ் கடற் தொழில் தடைப்பட்டதால் இக்கிராம மக்கள் வேறு வேறு தொழில்களைச் செய்து தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர். சுமதியின் தந்தை இப்போது கட்டிட வேலை செய்யும் கூலியில் அந்தக் குடும்பம் ஓடிக் கொண்டிருக்கிறது.

என்றும் போல அன்றும் அமைதியாக விடிந்தது. தாய்க்குக் காலைச் சமையலுக்கு உதவி செய்துகொடுத்துவிட்டு, அவசர அவசரமாகத் தன்னை அலங்கரிக்கத் தொடங்கினாள். அவளின் நீண்டநாட் கனவு நாளை நனவாகப் போகிறது. பெற்றோரை, சகோதரர்களை, தன் சொந்த மண்ணைப் பிரிந்து போவது கவலைதான் என்றாலும், இந்த நாசமாப் போவாங்களுக்கு இடையிலிருந்து ஆக்கினைப்படுவதைக் காட்டிலும் தன் மனதிற்குப் பிடித்தவனுடன் நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணத்தோடு துரிதகதியில் ஆயத்தமானாள். தனது ஒன்றுவிட்ட சகோதரியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

"முதலில் வாழைச்சேனைக்குப் போய் தோழிகளுடன் படம்பிடித்துவிட்டு, அவர்களுக்கு ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்து, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, நேரத்தோடு திரும்பினால் தான் ஊரிலுள்ள உறவினர்களுக்கும் போய்ப் பயணம் சொல்லி முடிக்கலாம்."

மனதில் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு, அக்காவும் தங்கையுமாக பேரூந்து தரிப்பு நிலையத்திற்குச் சென்றனர். சுமதியின் வீட்டிலிருந்து அரைமைல் தொலைவில் கும்புறுமுனை இராணுவ முகாம். முகாமுக்கு முன் நின்றுதான் வாழைச்சேனைக்குப் பேரூந்து ஏற வேண்டும். பேரூந்துக்காக வரும் யாருமே இராணுவத்தினரின் ஓநாய்ப் பார்வையிலிருந்து தப்ப முடியாது, குறிப்பாகப் பெண்கள், அதிலும் அழகான பெண்கள் என்றால் சொல்லத் தேவை இல்லை. ஒரு பெண்ணில் குறிவைத்தார்கள் என்றால், அவளிடம் தமது காமவெறியைத் தீர்க்காது விடமாட்டார்கள்.

இப்படித்தான் நீண்ட நாட்களாகவே ஒருவனுக்குச் சுமதியின் மீது கண். அவளை அடைந்து தனது வெறியைத் தீர்க்க வேண்டும் என்ற வெறி அவனுக்கு. அந்தச் சந்தர்ப்பம் இன்று அவனுக்குக் கிடைத்தது. அசடு வழிந்தபடி அவன் சுமதியிடம் கடிதமொன்றை நீட்டினான். தனது கைக்கு வந்த கடிதத்தைப் படித்த சுமதி, சீற்றம் கொண்ட புலியானாள். கோபம் தலைக்கேறி, முகம் சிவக்க, "தூ...... நாயே........ " என்று காறி உமிழ்ந்தவள் கடிதத்தைக் கிழித்து எறிந்துவிட்டு வந்த பேரூந்திலேயே ஏறி வாழைச்சேனைக்குச் சென்றுவிட்டாள்.

ஒருசில நிமிட நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. இனி என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ?

"கட்டாயம் என்னில அவனுக்குச் சரியான கோவமாக இருக்கும். திரும்பிப் போக என்ன செய்யிறானோ தெரியாது. என்ர அவசரப் புத்தியாலதான் எல்லாம் வந்தது. பேசாமக் கடிதத்தை வாங்கிப்போட்டு இங்கால வந்து கிழிச்சுப் போட்டிருக்கலாம். இனி என்ன செய்யிறது? நடந்தது நடந்துபோச்சு"

பயத்தோடும் மனக்கொந்தளிப்போடும் தோழிகளிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு கும்புறுமுனைக்குப் பேரூந்தேறினாள். தரிப்பில் அவள் எண்ணியபடியே விளைவுகள் காத்திருந்தன.

சுமதியின் செய்கையால் ஆத்திரமும், அவமானமும் கொண்ட இராணுவத்தினன், வால்பிடிகளோடு அவளின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த நீண்ட வயர்த்துண்டு சுமதியைப் பதம்பார்த்தது. அவளின் வெண்ணிறத்தோல் சிவப்பாகி...... வரிவரியாகி....... உடம்பெங்கும் காயங்கள். சுருண்டு விழுந்த சுமதி சமாளித்துக் கொண்டு எழும்பி வீட்டை நோக்கி நடந்தாள். இதைவிடப் பெரிய விபரீதம் ஒன்று நடக்கப்போகிறது என்பதை இவள் அறியவில்லை.

சுமதி வீட்டை அண்மித்துவிட்டாள். குண்டுகளைக் கக்கியவாறு இராணுவ ஜீப் ஒன்று வந்துகொண்டிருந்தது. எல்லோரும் வீடுகளுக்குள் தஞ்சம் புகுந்து கொண்டனர். சுமதி தாயுடனும் சுகோதரர்களுடனும், தாத்தாவுடனும் வீட்டின் ஒரு மூலைக்குள் பதுங்கிக் கொண்டாள். வந்த ஜீப் வீட்டு வாசலில் குலுங்கி நின்றது. கண்மூடித் திறப்பதற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. சுவர் மூலையில் மார்புக்குக் குறுக்கே கைகோர்த்தபடி பதுங்கியிருந்த சுமதியை நோக்கி அந்த இராணுவத்தினனின் துப்பாக்கி வெடித்தது.

முப்பத்தாறு - ரவைகள் சுமதியின் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு சென்றன. அவளின் பெருவிரல் ஒன்று, ரவை ஏற்படுத்திய துவாரத்தினுள் புதைந்து, கழுத்தில் கிடந்த சங்கிலியின் தொங்கட்டானிற் குத்திட்டபடி, தாயின் மடியிற் சரிந்தாள் சுமதி.

குத்துவிளக்கின் மங்கிய ஒளியுடன் சேர்ந்தாற்போல் ஒரு குரல்:

என்ர மகள்.....

என்ர மகள்....

என்ர சுமதி....

தென் தமிழீழத் தாய்மாரின் ஒருமித்த குரலாய் அது
எழுந்து...... தேய்ந்து.......

(உண்மைச் சம்பவம்)

- உலக மங்கை -

# இன்னுமொரு அச்சுறுத்தல்

தொழிலாளர்களின் உரிமைகோரிப் போராடுபவர்களை, அரசின் கொள்கைக்கு எதிரானவர்களெனக் குற்றம்சாட்டி, பழிதீர்க்கும் நடவடிக்கைகளைச் சந்திரிகா அரசு தொடங்கியுள்ளது. அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்திவரும் அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் வேலையிலிருந்து நீக்கவேண்டிய காலம் வந்துவிட்டதென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவின் அறிவிப்பும், இது தொடர்பாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தும் ஒரு நடவடிக்கையே.

ஆனால், இவ் அச்சுறுத்தலானது தெரிவிக்கப்பட்டு ஓரிரு தினங்களேயாயினும், தொழிலாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையைச் சந்திரிகா அரசு மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தின்போது தொடங்கிவிட்டது. வேலை நிறுத்தத்தில் திரும்பியவர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்ட அமைத்துள்ள 5 பேர் கொண்ட விசாரணைக் குழுவும், தொழிலாளர் சங்க அதிகாரிகள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இரகசியப் பொலிசார் விசாரணையும் ஆகும். சேகரிக்கும் தகவல்களைக் கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மின்சாரசபை ஊழியர்கள் மட்டும் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகவில்லை. எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கும் சகலருமே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவர் என்றே கூறலாம். இந்த வகையிலே இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவரை பொலிசார் கைது செய்தது குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா அரசின் இந்த நடவடிக்கையானது, தொழிற்சங்கங்களின் அடிப்படை உரிமைகளை மீறுவது மட்டுமல்ல, சந்திரிகா அரசின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு முற்றிலும் விரோதமானதோடு, அதன் தற்போதைய கூற்றுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் விரோதமானதும் ஆகும். பொதுவாகவே, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமது ஆதரவாளர்களுக்கு மட்டுமே, அரச மற்றும் இடங்களில் வேலை வாய்ப்புக்களை வழங்கி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இந்த நிலையில் தமது கொள்கைக்கு இசையாதவர்களைப் பதவி நீக்கம் செய்ய முற்படுவதும் அல்லது எச்சரிக்கை

> *இன்று அதே அதிகாரங்களைப் பயன்படுத்தி சர்வ வல்லமை பொருந்தியவராகவும் எதேச்சாதிகாரத்தின் சின்னமாகவும் அவர் மாறிவருகின்றார். சேலை கட்டிய பிரேமதாச என விமர்சிக்கப்படும் நிலைக்கு அவர் விரைந்து முன்னேறிக்கொண்டு இருக்கின்றார். இதன் ஒரு அம்சமாகவே தொழிற்சங்க ஆட்களையும் அவர்களின் ஜனநாயகபூர்வ போராட்டத்தையும் ஆயுதமுனையில் அடக்க எடுக்கும் முயற்சிகளையும் சொல்லமுடியும்.*

ஈடுபட்டவர்களைக் கைது செய்தமையும் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்ற எச்சரிக்கையும், இதன் முதல் வெளிப்பாடு ஆகும். ஆனால், இவை யாவற்றிற்கும் உச்சமாக இருப்பது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, மின்சார சபை ஊழியர் வேலை நிறுத்தம் தொடர்பாகவும் அரசு விதித்த காலக்கெடுவுக்குப் பின்னர் வேலைக்குத் செய்வதும் சந்திரிகா குமாரணதுங்கா அரசு முற்றிலும் கட்சிக்காக அரசியல் நடத்த முற்படுவதாகவும் அரசியல் பழி வாங்கல்களை நடத்துவதற்கு முற்படுவதாகவுமே கருத இடமுண்டு. மேலும், அரசு கடந்த கால ஐ.தே.கட்சியின் ஆட்சியின்போது அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டதாகப் பலருக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது. அதில் ஐ.தே.கட்சிக் காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களும் பதவிகளை ராஜினாமா செய்தவர்களும் அடங்குவர். இந்த நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை அரசியல் சாயம் பூசி வெளியேற்ற முற்படுவது, அரசியல் பழிவாங்கல் என்று அமையாமல், வேறு எப்படி அமைய முடியும்? ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் தேர்தல் வாக்குறுதிகளில்,

"ஜனாதிபதி ஆட்சிமுறையினை ஒழிப்போம்" என்பதும் ஒன்றாகும். ஏனெனில் கடந்த காலத்தில் சிறிலங்காவில் இடம்பெற்ற ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் ஜனநாயக மீறல் நடவடிக்கைகளுக்கு ஒப்பாகும். இவ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையே இதற்கு காரணம் என அவர் தெரிவித்திருந்தார். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக்கு வந்த பின்னர் அவ்வாக்குறுதிகளை முற்றாகவே மறந்துவிட்டார்போல் தெரிகின்றது. ஏனைய தேர்தல் வாக்குறுதியும் அவரால் மறக்கப்பட்டதுதான். எனினும் வாக்குறுதிகளை அவர் ஞாபகப்படுத்தவேயில்லை. அதாவது இனப் பிரச்சினை போன்றவற்றிற்கான வாக்குறுதிகளுக்கு வேறு விளக்கங்களும் காரணங்களும் கூற அவர் முயல்கின்றபோதும் இவ்விடயம் குறித்துப் பேசுவதேயில்லை.

> இது இன்று ஆட்சியைத் தொடர்வதற்குச் சந்திரிகாவுக்கு உதவுவதாக இருக்கலாம். ஆனால் மீண்டும் ஒருமுறை மக்களைச் சந்தித்து ஆட்சிப்பீடம் ஏற உதவப்போவதில்லை. மாறாக ஆட்சியில் இருந்து மக்களால் துரத்தப்படவே வழிவகுக்கும்.

மாறாக, இன்று அதே அதிகாரங்களைப் பயன்படுத்தி சர்வ வல்லமை பொருந்திய வராகவும் எதேச்சாதிகாரத்தின் சின்னமாகவும் அவர் மாறிவருகின்றார். சேலை கட்டிய பிரேமதாச என விமர்சிக்கப்படும் நிலைக்கு அவர் விரைந்து முன்னேறிக்கொண்டு இருக்கின்றார். இதன் ஒரு அம்சமாகவே தொழிற்சங்க ஆட்களையும் அவர்களின் ஜனநாயகபூர்வ போராட்டத்தையும் ஆயுத முனையில் அடக்க எடுக்கும் முயற்சி களையும் சொல்லமுடியும். ஜனாதிபதி சந்திரிகா அரசின் இந்த நடவடிக் கையானது, ஏற்கனவே பல்வேறு வழி களிலும் நெருக்கடியில் உள்ள சிறிலங் காவை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக் குவதாகவே அமையும். இது இன்று ஆட்சியைத் தொடர்வதற்குச் சந்திரிகாவுக்கு உதவுவதாக இருக்கலாம். ஆனால் மீண்டும் ஒருமுறை மக்களைச் சந்தித்து ஆட்சிப்பீடம் ஏற உதவப்போவதில்லை. மாறாக ஆட்சியில் இருந்து மக்களால் துரத்தப்படவே வழிவகுக்கும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




## கப்டன் தேன்மொழி



**1990**ம் ஆண்டின் ஆரம்பத்தில், மட்டுநகரிலிருந்து கடல் கடந்து யாழ்ப்பாணம் வந்து, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஒன்பதாவது பயிற்சிப் பாசறையில் அவள் பயிற்சி எடுத்தாள்.

அவள் சரியான துடியாட்டம். குழந்தைத்தனம் மாறாத குழப்ப டியும் கூட. சண்டையென்றால் துள்ளிக் கொண்டு திரியும் அவளின் ஆசை போல, நிறையக் களங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது.

மாங்குளத்தின் வெற்றியிலும் ஆனையிறவுச் சண்டை உலகுக்கு உணர்த்திய போர்முறையிலும், இன்னும் 'பின்னல்' சிலாவத்துறை, பத்தைமேனி, கட்டைக்காடு, என நீண்டு கொண்டே போகும் கள வரலாற்றிலும் அவளது சுவடுகள் ஆழப் பதிந்திருக்கின்றன. நீண்ட வெற்றிகளுக்குப் பின்னால் – ஆழமான படிப்பினைகளுக்குப் பின்னால், அவற்றையெல்லாம் எமக்குத் தந்துவிட்டுச் சென்ற மாவீரர்களின் வரலாறும் அவர்க ளின் உறுதியும்.......

அவர்களில் எங்கள் தேன்மொழியும்......

அவளது கதை பெரியது. யாரிடமும் தேடிப் பொறுக்கி எடுத்தால் அது நீண்டவரலாறு. மட்டக்களப்பில் எழுந்த புயல். 1995. 07.28 அன்று கொக்குத்தொடு வாயின் மறக்க முடியாத கள வரலாற்றில் உறங்கிப் போன கடைசி நிமிடம் வரை அவளது கதையும் கனவும் நீண்டவை. புலோப்பளையில் 'யாழ்தேவி' புரண்ட வரலாற்றிலும், மண்கிண்டி மலை எம்வசம் ஆன கதையிலும் இன்னும் பூநகரிக்கடல், தரைகள் 'புலிகளினது' என பெயர் பொறிக்கப்பட்ட களங்களிலும் அவளது துப்பாக்கி, ரவைகளைப் பொழிந்தன.

சண்டையில் திறமையாகச் செயற்பட்டதற்காகப் பாராட்டு க்களையும் திறமைப் பரிசையும் பெற்றாள். ஆனையிறவு, இயக்க ச்சிப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த போது, அணித்தலைவிகளுக்குப் பயிற்சிக ளும் வகுப்புகளும் நடாத்தப்பட்டன. அதில் தேன்மொழியும் கலந்து கொண்டாள். அங்கு நடந்த சண்டையில் வேவுப் புலியாக நின்று திறமையாகச் செயற்பட்டு, தனது அணிக்கு எதிரியின் முகாமை எப்படி அழிக்கவேண்டும் என்று தெளிவாக விளக்கி, அவர்களைச் சண்டைக்குக் கூட்டிச் சென்றாள். அணியை மீண்டும் உரிய இடத்துக்குச் சரியாகக் கொண்டு போய்ச் சேர்த்தாள்.

சில நாட்களுக்குப் பின் மீண்டும் பயிற்சிகள் நடைபெற்றன. அப்போது பெண் போராளிகளுக்கும் ஆண் போராளிகளுக்கும் இடையில் போட்டிகள் வைக்கப்பட்டன. திசைகாட்டி மூலம் வேறு முகாம் செல்லும் போட்டியில் முதலாவதாக வந்து சேர்ந்தாள். அவளின் பலதரப்பட்ட திறமைகளையும் கண்ட தளபதி அவளைப் பயிற்சி ஆசிரியராக நியமித்தார். குழப்படி க்காரியாக இருந்த தேன்மொழி, இதன் பின்னர் அமைதியானவளாக மாறிவிட்டாள்.

அவளது வீட்டிலிருந்து அவளை விட, அவளது அக்காவும் போராளி. பாச உறவுகளை இயக்கக் கடமைகள் நீண்ட தூரம் பார்க்கமுடியாதவாறு பிரித்தது.

"என்னை நான் பெரிசெண்டு நினைக்கவில்லை" என்ரை அக்கா இயக்கத்தின் வேறு பிரிவில் இருப்பதால் நான் பார்க்கவில்லை. என் அக்காவின் முகம் எனக்கு நினைவில் இல்லை. அதை நான் பெரிசுபடுத்தவில்லை. என்ர அக்கா போராட்டத்துக்கு வந்த பின்னர் செய்தது எனக்குத் தெரியாது. ஆனால் என்ரை ஒவ்வொரு செயலும் அவளுக்குத் தெரியும், அவளைக் கண்டால் சொல்லுங்கள்"

என்று புலோப்பளைச் சண்டைக்குச் சென்றபோது சொல்லிவிட்டுப் போனாள்.

இறுதியாகக் கொக்குத்தொடுவாய்ச் சண்டையின் போது இறுதிவரை நின்று சண்டை பிடித்தாள். தனது அணியைப் பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்திக் கொண்டி ருந்த போது, அவளது கையில் எதிரியின் ரவை தாக்கியது. எறிகணைகள் மழை போல் வீழ்ந்தன. ஒற்றைக் கையோடு நின்று,

"என்னைக் கவனிக்க வேண்டாம். எல்லோரும் போங்கோ......"

என்று சொல்லிக்கொண்டிருந்த போது மீண்டும் எதிரியின் எறிகணைகள் விழுந்தன. அந்தச் சண்டையில் நாங்கள் ஏராளமான போராளிகளை இழந்தோம். தேன்மொழி உட்பட.

"அம்மா!

நம் தேசத்தின் எல்லைக் கோடுகள் இரத்த வரிகளால் கோடிடப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நீ மட்டும் ஏனம்மா கண்ணீர் வரிகளால் உன் கன்னங்களைக் கோலமிடுகிறாய்."

இது, தேன்மொழியின் நாட்குறிப் பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வரி.

## லெப்.நாமகள் (மிருணா)



**அ**து நேற்றுப்போல் இருக்கிறது. காலச் சுழற்சியில் அள்ளுண்டு போகாத நினைவுகளாக மீண்டும் மீண்டும் நினைவுத் திரையில் ஓடிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள். எழுதுகின்ற வரிகள் தெளிவின்றி, விழியில் நீர்த்திரை படிய எதை எழுத? எல்லாமே வார்த்தைக ளின்றித் தோற்றுப் போகும்.

வலிகாமத்தின் காற்று, துயரம் சுமந்தபடி மோதி உடையும், தனிமையில் மௌனமாக இருக்கின்ற வீடுகளில் உனது மூச்சும் கலந்தபடி......

"நாமகள்"

உன்னை நினைக்கும் போது அந்தக் குழந்தைத்தனம் மாறாத குழப்படி நினைவுக்கு வரும். நீ குழந்தைதான். வயதுக்கும் உருவத்திற்கும் எதுவித சம்ப ந்தமும் அற்ற குழந்தை. அதுவும் உனது கடைசிப் பொழுதுகளில் உனது உயரமும் அசாதாரண வளர்ச்சியும் கண்டவர்களை விய ப்பிலாழ்த்தியபடி......... எப்படி மிருந்தாய்? உனக்குப் பதினாறு வயதென்றால் யார் நம்புவார்?

"நீ இயக்கத்துக்கு வந்தபொழுது குழந்தை"

"இந்த வயதில் ஒருவரையும் இயக்கத்துக்கு எடுக்கிறதில்லை. திரும்பி வீட்டுக்குப் போங்கோ" என்று கூறிய போது நீ அடம் பிடித்தாய்.

"போராட்டத்துக்கு வயதெல்லை இல்லை"

கடைசியில் உனது நியாயமான கேள்வியும் பிடிவாதமுமே வென்றது. அந்தப் பயிற்சிமுகாமில் உனது திறமையால் எப்போதும் உன்னை இனங்காட்டினாய். உன க்கும் லெப். சுபானந்தினிக்கும்தான் அங்கு போட்டி. யார் யாரை முந்துவது? இருவருமே திற மைசாலிகள். எதில் எவர் கெட்டிக்காரர் எனப் பிரித்தறிய முடியாதவாறு இருந்தீர்கள்.

அதன் பிறகு எங்கள் தலைவரின் கனவுகளின் ஒன்றான படைத்து றைப்பள்ளியில் உனது போராட்டப் பாதை தொடர்ந்தது. அங்கு உனது குழந்தைத்தனங்களும் குறும்புகளும் சொல்லி மாளாது. அங்கு உனது எல்லாத் திறமைகளையும் மீறி இவற்றிலே பேர் போனவளாக இருந்தாய்.

அங்கிருந்தபடியே நீ, "நான் சண்டைக்குப் போறன்" என்று பொறுப்பாளரை நச்சரித்து நச்சரித்து வெளியில் வந்தாய். உனது முதற்களம் பூநகரித் தாக்குதலாக இருந்தது. பூநகரிச் சண்டைக்கு பூரிப்போடு போய் வந்தாய். நீண்ட நாட்கள் உனது முகத்தில் அந்தச் சண்டைக்குப் போய் வந்த சந்தோசமும் திருப்தியும் இருந்தது.

பின்னர் நீ கலை பண்பாட்டு க்கழகத்தில் உனது திறமை களைக்காட்டினாய். இயல்பாகவே உன்னிடமிருந்த கலையார்வம் நடனத்திலும் பாட்டிலும் வெளிப்ப ட்டது. எப்போதுமே அபிநயம் பிடித்தபடி முகாமில் நடமாடுவாய். எங்கேனும் கலை நிகழ்ச்சிகள் பார்த்து விட்டு வந்தால் அன்று இரவு நிச்சயமாக நீ முகாமில் ஆடிக்காட்டுவாய். அல்லது பாடலையாவது பாடிக் காட்டுவாய். பாட்டு எப்படியிருப்பினும் உனது குரலின் கம்பீரமும் பாட்டின் குழைவுகளும் உனது பாட்டை இன்னொருமுறை கேட்கத் தூண்டும். முகாமில் எந்த நிகழ்வு நடந்தாலும் உனது நிகழ்ச்சி ஒன்று கட்டாயம் இருக்கும். அநேகமாக அது களத்தில் காத்தானாக இருக்கும். அதில் நீ காத்தானாக வருவாய். முல்லை மண்ணின் பாரம்பரியக் கலை மரபில் ஊறிப்போனவள் நீ – அதனாலோ என்னவோ அவற்றை நீ நடிக்கும் போது இயல்பாகப் பாத்திரத்தோடு ஒன்றிப்போய் இருக்கும்.

மேடையில் எங்கள் நாமகளா? எப்படிக் கம்பீரமாக.

இன்னும் ஜீரணிக்கமுடியாத உனது மறைவுக்குப் பின் எல்லாம் நினைவுகளாக உனது பாடல் வரிகள் மெல்லக் காற்றில் தேய்ந்தபடி......

அவை உனது கடைசிக் காலங்கள். அது உனது கடைசிச் சண்டையுங் கூட. அந்த விடிகாலைப் பொழுது இராணு வத்தின் யுத்த டாங்கிகளின் இரைச்சலோடும் எறிகணைகளின் பெரும் ஓசையோடும் விடிந்த போது, கோப்பாயின் வாழைத் தோட்டங்களில் எமது நிலைகளில் நீ நின்றாய். அச்சண்டை உக்கிரமாக இருந்தது. அதற்குள்ளும் நீ நின்ற இடம் எப்போதும் போல் கலகலத்தபடி இருந்தது. செம்மண் மேலும் சிவப்பேறி எமது விழிகளைப் போல் சிவந்த போது நீ இல்லை. பெருத்த ஓசையோடு எறிகணை யொன்றின் தழுவலுக்குள் நீ துடிப்படங்கிப் போனாய்.

"நிறையச் சண்டைக்குப் போகவேணும் நல்லா அடிபட வேணும்" என்று சொல்லிப் போனவள் 1995–10–20 க்குப் பின் வரவேயில்லை.

"வைதேகியைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு லீவிலை வருவன் அம்மா"

என்று போனவள் வரவேயில்லை. அவளோடு வைதேகியும். அவர்கள் அமைதியாக உறங்கட்டும்.

## லெப். மாங்கனி

**இ**வள் ஒரு சிறந்த நடிகை. பாடகி. ரசிகை. பேசும்போது வாய்மட்டுமல்ல கண், மூக்கு எல்லாமே பேசும். கைகள் அபிநயம் பிடிக்கும்.

இனிமையான குரலாலும், திறமான நடிப்பாற்றலாலும் ஏனை ய பிள்ளைகளைக் கவர்ந்து கொண்டாள். பயிற்சிப்



லெப். மாங்கனி

பாசறையில் இரவு வேளைகளில் ஒரு மூலையில் மாங்கனியின் பாட்டுக் கச்சேரி நடக்கும். அவளைச் சுற்றி ஒரு கூட்டம் இவளின் பாடல்களைக் கேட்டு ரசிக்கும். பாட்டைக் கேட்டபடியே அவர்கள் உறங்கிவிடுவார்கள். நிலைமைகள் எப்படியாயிருந்தாலும், பயிற்சி எடுத்த களைப்பை நீக்கிவிடும் மாங்கனியின் பாடல்கள்.

"அம்மாவே தெய்வம். ஆகாயதீபம்"

என்ற பாடலை ஒரு நாளில் ஒரு முறை என்றாலும் இவள் பாடாமல் விடமாட்டாள். அந்தப் பாடல் இவளது குரலுக்குள் இழைந்து வரும் போது நெஞ்சைத் தொடும்.

இவளது முதற் சண்டை பின்னல் தாக்குதலாக இருந்தது. அதற்கு அவள் விநியோகக் குழுவாகச் சென்றாள். அது நல்லதொரு சண்டை. எதிரியின் 'சகடைகள்' பீப்பாக் குண்டுகளை உருட்டித் தள்ளும். மரங்கள் முறிந்து எந்தப் போராளியின் தலையிலாவது விழும். எங்கு குண்டுகளை வீசுகிறான், எந்த இடத்தைக் குறி வைக்கிறான் என்று எதுவுமே அறியமுடி யாதவாறு, காடு குடை பிடித்து மறைக்கும். அந்த இடத்தில் அவளுக்கு விநியோக வேலை. சண்டையில் நிற்கும் போராளிக ளுக்கான வெடி பொருட்கள், உணவுகளை முன்னணி நிலைக ளுக்குக் கொண்டு சென்று கொடுப்பது, காயமடைந்த, வீரச் சாவடைந்த போராளிகளைத் தூக்கி பின்னால் உரிய இடத்தில் சேர்ப்பது என மாங்கனி சோர்வடையாமல் வேலை செய்தாள்.

அடுத்த சண்டை 'பலவேகய'–2. இயக்கச்சிச் சண்டை அவளது எதிர்பார்ப்புக்கும் ஆவலுக்கும் ஏற்ப, சண்டையணியில் விட ப்பட்டாள். சண்டைக் களத்திலேயே சண்டைக்கான பயிற்சி, இரவு பகலாக ஓயாத பயிற்சி. மாங்கனிக்குக் காய்ச்சல் வந்து விட்டது. உடலை அசைக்க முடியாமல் முறித்து எடுத்தது. ஆனாலும் மாங்கனி களத்தைவிட்டு வெளியேறவில்லை. பதுங்குகுழி ஒன்றினுள் படுத்தபடி மருந்துகள் சாப்பிட்டாள். காய்ச்சலும் விட்ட பாடாகஇல்லை. கட்டாயமாக மருத்துவமனைக்கு அனுப்பிவை க்கப்பட்டாள். காய்ச்சலின் விளை வாக எப்போதும் அபிநயம் பிடிக்கும் அவளின் கைவிரல்கள் பாதிப்படைந்தன. சில விரல்கள் மடக்கி நிமிர்த்த முடியாமல் ஆயின. அதற்குரிய வைத்திய ங்களைச் செய்த மாங்கனி கலைபண்பாட்டுக் கழகத்துக்கு வந்து சேர்ந்தாள்.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்தைத் ...

அங்கு இவளின் கலைத் திறன்கள் வளர்ந்தன. சங்கீதம், நடனம் என்பவற்றை இவள் பயின்றாள். வாத்தியக் கருவிகளைக் கற்றாள். எமது முகாம்களில் நடக்கும் ஒவ்வொரு கலை நிகழ்ச்சிகளிலும் நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று நடித்தாள். இன்னும் இன்னும் தான் நிறையச் செய்யவேண்டும், சாதிக்கவேண்டும் என்று அயராது உழைத்தாள்.

இவளின் இனிமையான குரலில் உருவாக்கம் பெற்றதுதான் 'மண்ணாய் போகும் உடலே ஈழ மண்ணுக்காகட்டும்' என்ற பாடல்.

இவளது அன்பான பண்பான செயற்பாடுகள் வலிகாமத்தில் பல கலைஞர்களைக் கவர்ந்தது.

வலிகாமத்தில் 'சூரியக்கதிர்' இராணுவநடவடிக்கை ஆரம்பமானது. மாங்கனியைக் காண்பது இதுதான் கடைசி என்பதை அறியாத அந்த முகாம் அவளைச் சண்டைக்கு வழியனுப்பி வைத்தது. 'நாங்கள் ஓடித்திரிந்த மண்ணை எதிரியிடம் விடமாட்டோம்' என்ற உக்கிரத்துடன் போராளிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தியாக மாங்கனியும். எதிரியின் எறிகணை மழை எம்மவர்களின் உயிர்களைக் குடித்துக் கொண்டிருந்தது. ஒரு எறிகணை மாங்கனியை......... 1995. 10. 30 அன்று அவள் அமைதியானாள்.

மாங்கனி ஓடித் திரிந்த வீதிகள், அவள் கைபட்டு வளர்ந்த வாழை மரங்கள், அவள் இருந்து படிக்க நிழல் பரப்பிய பலாமரங்கள், அவள் ஆசையாக வளர்த்த பூமரங்கள் எல்லாம் ஒரு நாள் மாங்கனி வருவாள் என்று எதிர்பார்த்தபடி வலிகாமத்தில் காத்திருக்கின்றன.

## மேஜர் அலைமகள்

அந்த உயரமான அவளது



உருவத்துக்கும் கதைக்கும் பொருத்தமில்லை. பயிற்சிப் பாசறையில் நீள நீள வைத்தபடி ஓடுகின்ற கால்கள். கனரக ஆயுதத்தைத் தூக்கியபடி ஓடும் போது இவளுக்கு எவ்வளவு கம்பீரம். கண் கொட்டாமல் அவளையே பார்த்தபடி.........

அந்த உருவமும் கம்பீரமும் கண்களைவிட்டு மறைந்து விட்டனவா? அகக் கண்களில் அவள் நிழலை நினைத்தபடி நாங்கள்.

பயிற்சிப் பாசறைக்கு ஒருமுறை மனம் சென்று திரும்பும் பதட்டம் என்பதே துளியளவும் கிடையாத அவளின் கதைகள், ஒரு குழந்தையினுடையதைப் போலவே ஆறுதலாக நீண்டு வரும். சிணுங்களுடன் முடிவடையும்.

உருவத்திற்கும் கதைக்கும் பொருத்தமேயில்லை.

ஆனையிறவின் உப்பளக் காற்றும் இயக்கச்சியின் தென்னந்தோட்டங்களும் இன்னும் பலாலியின் கரிய பனைவெளிகளும் அவளுக்குப் பரிச்சயமானவை. அவளது வியர்வைத்துளிகளை அவை உறிஞ்சியிருக்கும். இரவில் ஊர்ந்து நகரும்போது, அவளது உடலில் சிராய்ப்புக் காயங்களிலிருந்து வெளிவந்த குருதி அதில் காய்ந்திருக்கும்.

பயிற்சியில் காட்டிய திறமையும் அவளின் கம்பீரமான உருவமும் அவளை ஐம்பது கலிபர் கனரக ஆயுதப் பிரிவுக்குப் பயிற்சி ஆசானாக்கியது. அதில் இருந்தபடியே இளைய போராளிகளை இந்த மண்ணுக்காகத் தந்தாள்.

அவள் ஒரு வாகனச் சாரதியும் கூட. முழுமையாக வாகனம் ஓட்டுவதில் பயிற்சி பெற்று திறமையாகச் செயற்பட்ட போது அவளுக்குத் தலைவரின் பரிசு கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பம் என்றுமில்லாத மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுத்தது. அதுவே அவளது செயற்பாடுகளுள் தீவிரத்தை ஏற்படுத்தியிருந்தது.

'சூரியக்கதிர்' வலிகாமச் சமர் அவளின் கடைசிச் சண்டை. ஆண் போராளிகளின் ஒரு பகுதிக்கு அவளது குழு பின்னணி வேலைகளில் ஈடுபட்டது. இருள் மூடியிருந்த இரவுகளில் பதுங்கு குழி வெட்டி மண் மூட்டை அடுக்கி பாதுகாப்பு அரண் அமைத்து எத்தனையோ பொழுதுகள் சாப்பாடின்றிக் கழியும். வயிற்றைப் பசி கிள்ள, நித்திரையின்றிய இரவுகளில் அவள் தனது ரீ எண்பத்திரண்டு ரகத் துப்பாக்கியுடன் நடப்பாள். தலை நிமிர்த்த இயலாத ரவை மழை, அடுக்கடுக்காக வந்து விழும் எறிகணை மழை பட்டு கட்டிடங்களும் வீடுகளும் சிதையும் – உடல்களும் சிதறும். அந்த இடங்களில் அவள் ஓடி ஓடி பதுங்கு குழி அமைத்தாள்.

அன்றைய நாளும் அப்படித்தான், அந்தச் சண்டை உக்கிரமானதாகத்தான் இருந்தது. அரியாலைக்குள் புகுந்து ஊடுருவித் தாக்கிய எங்களணிக்குள் அவளும்.

எல்லாம் முடிவுற்று, எடுத்த ஆயுதங்களை அள்ளிக்கொண்டு நகர்ந்தபோது அவள் வரவில்லை. 'செஞ்சோலையின்' பக்கத்து கடையில் விழுந்த எறிகணை ஒன்றில் காயப்பட்டு.......... அவள் வரவேயில்லை.

நீண்ட கம்பீரமான எங்கள் அலைமகளின் உடலை மட்டும் நாங்கள் சுமந்து வந்தோம். அவளுக்கு விருப்பமான அந்தப் பழைய பாட்டுகளைக் காற்றள்ளி வந்தன. அவளது உயிர், மூச்சுமட்டும் வலிகாமத்தின் பாரம் சுமந்த காற்றோடு. 1995. 11. 15 இன் பூக்கள் உதிர்ந்த மாலைப் பொழுதில் நெஞ்சில் சோகம் கவிந்தது.

## கப்டன் இளையவள்

கப்டன் செவ்வானமும் அவளும் தோழிகள். தான் கரும்புலியாகப் போனபோது தனது குப்பியை இவளிடம்தான் செவ்வானம் கொடுத்துச் சென்றிருந்தாள். இறுதிவரை அந்தக் குப்பியை இளையவள் வைத்திருந்தாள். அவளுக்குக் குப்பி

**கப்டன் இளையவள்**



தேவையில்லைத்தான், ஆனாலும் செவ்வானத்தினுடையது என்று வைத்திருப்பதில் தோழமை.......... நட்பு........ அந்தக் கடல்மடியில் விட்டுச்சென்ற நீங்காத நினைவுகள்......... அவை ஓயப்போவதில்லை, ஆர்ப்பரித்துச் செல்லும் கடலலைகளைப்போல.

அப்போது அவள் ஓரளவுதான் நீந்துவாள். ஆழமான கடற்சுழிகள், கொந்தளிப்பு எதற்கும் எதிர்நீச்சல்போடும் திறனற்ற 'கற்றுக்குட்டி' நீச்சல்காரி. அன்றைய கடற்பயணம் கலகலப்பானதாக இருந்தது. ஆனாலும் கடல்நிலைமை அவ்வளவு சரியில்லை. அமைதியாக இருக்கின்ற கடலில் திடீரென அலைகள் உயரக்கிளம்பலாம், காற்றுத் திசைமாறலாம்.

ஒரு பெரிய அலைவந்து படகு தடுமாறி அவள் விழுந்தேவிட்டாள். அவளோடு இன்னும் இருவர். அவள் ஒருமாதிரி தட்டுத் தடுமாறி மூச்சுத் திணற, மற்றவரின் கழுத்தைப்பிடித்து ஆதரவு தேட, இருவரையும் தூக்கிப் பயணம் முடிந்து திரும்பினர்.

லெப்.கேணல் மாதவியக்காவிற்கு இந்தக் கதைபோய்விட்டது.

"இளையவள் நீந்தத் தெரியாமல்தானே அப்படிச் செய்தனி?" என்று கேட்க,

"இல்லையக்கா, நான் அவையளுக்கு நீந்தத் தெரியுமோ எண்டு பாக்கிறதுக்குத்தான் அப்பிடிச் செய்தனான்"

என்று சிரிக்காமல் கூறி, நடந்ததை அப்படியே தடம்புரட்டிவிட எல்லோருக்கும் ஒரே சிரிப்பு.

கடைசிக் காலங்கள் எல்லோரையும் குடல் அதிரச் சிரிக்கவைத்த கணப்பொழுதுகள்......... அவளுக்கு முதற் சண்டையும், கடைசிச் சண்டையும் அதுதான். அவளது சாவுக்கான நாள் குறித்தாயிற்று. அந்த நாளில்தான் அவளது பாசமான அண்ணனுக்குத் திருமணவீடு. இவளது வீட்டுக்காரர் இவளை விடுமுறையில் விடுமாறு கேட்க, முதலில் மறுத்துவிட்டாள். 'நாள்' தாண்டிப்போனால் தன் வாய்ப்பு போய்விடுமே என்ற ஏக்கம் அவளுக்கு.

"இளையவள் நீங்கள் வீட்டை போங்கோ, இன்னொருதரம் போக வாய்ப்பு உங்களுக்கு வரும்தானே!"

என்றபோதும் ஒரேயடியாய் மறுத்து, பின் தன் தமையனுடன் போய் ஒரு நாள் நின்றுவிட்டு, கல்யாணத்திற்கு இல்லாமல் வந்துவிட்டாள்.

1996-03-30 அன்று இரவு கடலலைகள் அதிர்ந்து குலைய, எங்கள் இளையவள் கரைந்து போனாள். சுண்டிக்குளம் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான அதிவேகப் பீரங்கிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

அண்ணனின் திருமணத்திற்கென திருகோணமலையிலிருந்து வந்த அம்மா திரும்பிப்போக முன்னர், தான் போய்விட வேண்டும், இல்லாவிட்டால் அம்மா அலைக்கழிவார் என்ற அவளின் விருப்பப்படியே அவள் போனாள்.



இளையவள் தன் அண்ணனின் மகளைப் பார்த்து வரைந்த ஓவியம்.

# விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களினது....

தாக்குதல் ஆரம்பித்ததும் இறந்த, காயமடைந்த தமது சகாக்களைத் தூக்கிக் கொண்டு பொலிசார் ஓடித் தப்பித்துக் கொண்டனர். அங்கிருந்த ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை அப்புறப்படுத்திவிட்டு, பொலிஸ் நிலையக் கட்டிடங்களை முழுமையாகத் தகர்த்தனர். மகிந்தபுரம் இராணுவ முகாமில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட்டார். இதன்போதும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலின்போது கப்டன் கங்கா (செல்லப்பா கணேசமூர்த்தி, மூதூர்) வீரச்சாவடைந்தார்.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

19-06-96 அன்று மட்டக்களப்பு சித்தாண்டியிலும் வீதித் தடைச் சோதனைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைக்குண்டுகளும், ரவைக்கூடுகளும் கைப்பற்றப்பட்டன.

### அம்பாறை மாவட்டத்தில்

13-06-96 அன்று அம்பாறை மாவட்டம் பதினொராவது குடியிருப்புப் பகுதியில் வைத்து இராணுவ-பொலிஸ் கூட்டு காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட, ஏனையவர்கள் காயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். அங்கிருந்த ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதில் கப்டன் லக்ஸ்மனன், லெப். சுரேஸ்கரன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இவ்வாறாக, இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான திட்டமிட்ட கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருப்பது இராணுவத்தினர் மத்தியில் தாம் ஓர் பயங்கரமான சூழ்நிலையிலேயே காலத்தைக் கழிப்பதான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இது, அண்மையில் பலாலிக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் குழுவிடமும் சில செய்தியாளரிடமும் சிங்களச் சிப்பாய்கள் தெரிவித்த கருத்துக்களில் இருந்து வெளிப்பட்டுள்ளது. அதாவது, "எம்மால் எவ்வளவிற்கு அதி உச்சமாகச் செயற்பட முடியுமோ அவ்வாறு செயற்பட்டே யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியிருக்கிறோம். போர்ச் சூழ்நிலை தொடர்ந்து இருப்பதால் தம்மால் ஒழுங்காகக் கடமையாற்ற முடியாது. அரசியல்வாதிகள் இனியும் காலத்தைத் தாமதிக்காமல் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தி இச்சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும். அதனைச் செய்யாதவிடத்து நாம் செய்த முயற்சிகள் அனைத்துக்கும் அர்த்தமில்லாமல் போய்விடும்" என்று தமது மன உளைச்சலைக் கொட்டியுள்ளனர். படையினர் இவ்வாறு கோருவதைச் சிறிலங்காவின் நீதி, அரசியலமைப்பு அமைச்சர் பீரிசும் ஒத்துக் கொண்டுள்ளார்.

அதாவது, விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர இராணுவத்தீர்வே வழி என்று கூறிக்கொண்டு படைபலத்தைப் பிரயோகித்த சந்திரிகாவின் படையினர், விரைவாகத் தீர்வினைக் காணுமாறு அரசை நிர்ப்பந்திக்கத் தொடங்கிவிட்டமையை இது புலப்படுத்துகின்றது. ✷

# மத்திய கிழக்கு: சமாதானத்துக்கு...

இதனால் 30,000 பாலஸ்தீனியப் பாதுகாப்புப் படையினருக்கும், இஸ்ரேலிய இராணுவத்துக்கும் இடையே வேண்டத்தகாத மோதல்கள் ஏற்பட்டு, சமாதானப் பேச்சு வார்த்தைகள் மேலும் பின்னடைவுகளை எதிர்கொள்ளலாம்.

இதேவேளை நெட்டன்யாகுவும், பெரசும் யூன் 4ம் திகதி சந்தித்துக் கொண்டார்கள் என்றும் முக்கிய விடயங்களில் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள் என்றும் அறிய வருகிறது. மேலும், பெரசின் தொழிற் கட்சியைத் தனது அரசுடன் சேர்ந்து உழைக்கும்படி நெட்டன்யாகு கேட்டுக்கொள்வார் என்றும் வதந்திகள் நிலவுகின்றன. இக்கூட்டு சாத்தியமானால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னேறிச் செல்ல உதவியாகவிருக்கும் என பாலஸ்தீனிய அவதானிகள் கருதுகின்றனர்.

"தேர்தல் முடிவுகள் எதுவானாலும் நாம் தொடர்ந்து இஸ்ரேலிய மக்களுக்கு எமது ஆதரவை நல்குவோம்" என கிளிண்டன் தெரிவித்துள்ளார். மேலும் தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறுவது ஒன்று, ஆனால் ஆட்சிப் பீடமேறிய பிறகு செய்வது வேறொன்று" எனும் சித்தாந்தத்தின்படி, அடுத்து வரும் காலங்களில் நெட்டன்யாகு என்ன செய்யப்போகிறார் என்பதை ஒட்டியே, கிளிண்டனும் தனது காய்களை நகர்த்துவார். தனது பெயரைப் பாதுகாத்துக்கொள்ள, கிளிண்டன் திரைமறைவு அழுத்தங்களைப் பாவித்து, சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடரச்செய்வார் என எதிர்பார்க்கலாம். ✤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விடியலின் பாதையில்..

## இது ஒரு உண்மைச் சம்பவம்

**ரூபி**

அது ஓர் கடலோரப் பிரதேசம். யாழ் நகரிலேயே ஏன் இலங்கையிலேயே அந்த மண் பிரபல்யமானது, சிங்களத் தலைவர்களுக்கு அப்பெயர் சிம்ம சொப்பனம். கடலலைகள் ஆர்ப்பரிக்கும், உவர்க்காற்று சுதந்திரமாய் வீசும், கடலன்னை தாலாட்ட வள்ளங்கள் உலாப்போகும். ஆதவன் துயிலெழும் நேரம். கரை திரும்பும் படகுகளில் வெள்ளிக்காசுகள் துள்ளிக் குதிக்கும். ஆம்! அவை உயிருள்ள காசுகள்.

நிர்மலமான நீலக்கடல் இடையிடையே கலங்கும், உடனே பதிலும் கிடைக்கும். வெகு தூரத்தில் தோன்றும் கடற்படைப் படகுகள் கண்ணில் தெரியும். கடலன்னை மௌனமாகக் கதறுவாள். அவளுக்கல்லவா தெரியும் அவற்றின் அராஜகம்.

அதிகாலைப் பொழுது கனகப்பரும் அன்னம்மாவும் எழுந்துவிட்டனர். "என்னப்பா இந்தக் காகம் ஒரேயடியாய்க் கரையுது. ஆர்வரப்போகினம்? ஒருவேளை



பிள்ளை தான் வரப்போறானோ?"

"இருக்கும், கனநாளாய் அவன் வரேல்லையல்லோ!" கிணற்றடியில் பல்தேய்த்தவாறு மனைவிக்குப் பதில் கூறினார் கனகர். அவர்கள் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. அவன் வந்தான். தனயனைக் கண்டு தாயுள்ளம் தடுமாறியது. "வா மோனை கனநாளாய் வரேல்லை. நல்லா மெலிஞ்சு போனாய்."

"அம்மா பொய் சொல்லாதையுங்கோ, என்னை வடிவாய்ப் பாருங்கோ. மெலிஞ்ச மாதிரியே கிடக்கு?"

"ஓமடா ராசா! உன்னை நினைச்சு நினைச்சு அம்மா தான் மெலிஞ்சு போனா" கனகரும் உரையாடலில் கலந்து கொண்டார்.

அண்ணா, அண்ணா என்று தம்பியும் தங்கையும் காலைச் சுற்றினார்கள். குட்டித் தங்கையைத் தூக்கி மடியிலிருத்திக் கொண்டான். "அம்மா நான் பின்னேரம் போகவேணும்."

"ஏன்டா அவசரப்படுறாய். ரெண்டு நாள் நிண்டிட்டுப் போவன்" தாய் ஆதங்கப்பட்டாள்.

"இல்லை அம்மா, பின்னேரம் கட்டாயம் போக வேணும்."

"அண்ணா, அண்ணா அம்மா எனக்கு அண்டைக்கு அடிச்சுப்போட்டா, அம்மாவைச் சுடண்ணா" தங்கை முறைப்பாடு செய்தாள். "அம்மா தானே! இனி அடிக்க மாட்டா" அவன் சமாதானம் செய்தான். "அச்சா அண்ணன்" தங்கை புகழ்ந்தாள்.

தம்பி தங்கையுடன் தானும் ஒருவனாக விளையாடினான்.

∴ ∴ ∴

"பிள்ளையள் அண்ணாவைக் கூட்டிக் கொண்டு சாப்பிட வாங்கோ, நீங்களும் வாங்கோப்பா" அன்னம்மா சமையலறையில் இருந்து குரல் கொடுத்தாள். எல்லோருக்கும் சாப்பாட்டு மேசையிற் தட்டுகளை வைத்துப் பரிமாறினாள். இறைச்சிக் கறியின் வாசம் பசியைத் தூண்டியது. "அம்மா அண்ணா வந்தாத்தான் இறைச்சி செய்வா. நான் கேட்டாச் செய்து தரமாட்டா" குட்டித் தங்கை குறைப்பட்டாள்.

"அம்மா இனி அவளுக்கு நான் வராட்டியும் செய்து குடுங்கோ" அவன் புன்னகையுடன் கூறினான்.

"ஏன் மோனை சாப்பிடன், என்ன யோசிக்கிறாய்?"

"ஒண்டுமில்லை உங்கட கையால சாப்பிட்டு கனநாளாய்ப் போச்சு, நீங்கள் தீத்தி விடுறியளே" அவன் கூச்சத்துடன் கூறினான். ஆனந்தமாய் தாய் ஊட்ட அவன் நிறைவாக உண்டான்.

∴ ∴ ∴

மாலையாகியது. அவன் புறப்பட ஆயத்தமானான். தம்பி தங்கையை தூக்கிக் கொஞ்சினான். "விடு அண்ணா, உன்ர மீசை குத்திறது" தங்கை சிணுங்கினாள். "இனிக் குத்தாது" என்று கூறியவன் தாயைக் கட்டியணைத்துக் கொஞ்சினான். "விடடா மூச்சடைக்குது" செல்லமாகத் தட்டியவள் "இனி எப்ப வருவாய் மோனை?" என்றாள்.

இனி எப்பவும் உங்களை பார்த்தபடியே இருப்பன். நெஞ்சிலே நினைத்தவன் "பாப்பமணை" என்று மெதுவாகக் கூறினான். எல்லோரும் வாசல் வரை வந்து வழியனுப்பினர்.

மறுநாள் உச்சி வெயில் காலைச் சுட்டது. "அன்னமக்கா, அன்னமக்கா" அயல் வீட்டு ராசம் வேலியால் கூப்பிட்டாள். "இண்டைக்குப் பின்னேரம் ஒருதரையும் கடலுக்குப்போக வேண்டாமாம், பெடியள் சொல்லியிருக்கிறான்கள்."

"ஏனடி என்ன காரணம்?" "நான் நினைக்கிறன் எங்கயும் அடிக்கப்போறான்கள் போல கிடக்கு. அந்த ஆத்திரத்தை நேவிக்காரன் கடலுக்குப் போறாக்கள்ல தீர்த்துப்போடுவான் எண்டுதான் மறிச்சுப் போட்டாங்கள் போல கிடக்கு"

நீலவானிலே வைரங்களாக நட்சத்திரங்கள் கண்சிமிட்டின. கனகப்பரின் வீட்டுத் திண்ணையில் அவரின் வயதொத்தவர்கள் கூடியிருந்தனர். அவர்கள் பல விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர்.

திடீரென நெஞ்சை உலுக்கும் இடியோசை. வானம் பிளந்துவிட்டதா? இல்லை! போர்க் கப்பல் பிளந்துவிட்டது. கடலிலே தீப்பிளம்புகள் வான்நோக்கி எழுந்தன. இருளைப் பகலாக்கிய வண்ணம் தீ சுவாலைகள் கொழுந்துவிட்டெரிந்தன. அக்கினித் தேவன் கடலலையில் நர்த்தனமாடினான்.

அவர்களுக்குப் புரிந்துவிட்டது. கடற்படைக் கப்பல் மேல் கரும்புலி பாய்ந்துவிட்டது. "பெடியள் கப்பலை அடிச்சுப் போட்டாங்கள். அதுதான் கடலுக்குப் போக விடேலை" கந்தசாமி அமைதியைக் கலைத்தார்.

"ஆர் பெத்த பிள்ளையோ, கடலிலை எரியுது" கூறிய கனகப்பர் பெருமூச்சு விட்டார். மரணித்த வீரனுக்கு அஞ்சலி செய்வதுபோல அங்கு ஓர் இறுக்கமான அமைதி நிலவியது. எல்லோர் நெஞ்சங்களும் முகம் தெரியாத அந்த வீரனுக்காக ஊமையாய் அழுதன.

வழமைபோல் அன்றும் விடிந்தது. வீட்டு வாசலில் ஜீப் ஒன்றின் ஒலி கேட்டு அன்னம்மா வாசலுக்கு விரைந்தாள். வரிப்புலி உடையில் மூன்று, நான்கு பேர் நின்றார்கள். ஒருவன் தயங்கித் தயங்கி முன்னுக்கு வந்தான். "நீங்கள் நாதனின்ர அம்மாவே?" சொற்கள் குழறலாக வெளிவந்தன. அவளுக்கு ஏனோ வியர்த்தது. "ஓம் தம்பி என்ர பிள்ளைக்கு என்ன?" அவள் மென்று விழுங்கினாள். அதற்கிடையில் அந்தக் குடும்பமே வாசலிற் கூடிவிட்டது. "வந்து... .நேற்று....கடலில்....." அவன் தடுமாறினான். அவள் புரிந்து கொண்டாள். "என்ர ராசா" சொற்கள் தொண்டையில் சிக்கிக் கொள்ள அன்னம்மா மயங்கிச் சரிந்தாள். தம்பியும் தங்கையும், "அண்ணா, அண்ணா" என்று கதறினார்கள். கனகப்பர் விறைத்துப் போனார். கண்கள் கடலிலே குத்திட்டன. "ஆர் பெற்ற பிள்ளையோ....." கடலலைகள் ஓங்கி எதிரொலித்தன. ✲

# கூட்டுச் சதி

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கும் தமிழ் குழுக்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது, இனப்பிரச்சினை தீர்வு குறித்த விடயங்கள் ஆராயப்பட்டதாக அரசாங்கத் தரப்புச் செய்திகளும் தமிழ் குழுக்கள் தரப்புச் செய்திகளும் தெரிவித்துள்ளன. ஆனால், இது குறித்து அரசாங்கத் தரப்புச் செய்தி பெரிதாக எதுவும் வெளியிடவில்லை. ஆயினும், தமிழ் குழுக்களின் தகவல் தழுவிய பத்திரிகைகளின் செய்திப்படி, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிர்வாக அலகு குறித்துப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இப்பேச்சுவார்த்தையின் அம்சங்கள் குறித்து, பத்திரிகைகள் வெளியிடும் தகவல்களும் தமிழ் குழுக்களும் குறிப்பாக ஈ.பி.டி.பி குழுத்தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறிய தகவல்களும் தெளிவானவையாக இல்லை என்பது மட்டுமல்ல, முரண்பாடானவையாகவும் உள்ளன. இச்சந்திப்புக் குறித்து பி.பி.சி க்கு பேட்டியளித்த டக்ளஸ் தேவானந்தா வடமாகாணத்துடன் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை ஒன்றிணைத்தல், அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையாகச் சிங்களவர் வாழ்கின்ற பகுதிகளை ஊவா மாகாணத்துடன் இணைத்தல், எஞ்சியுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரும்பான்மை முஸ்லிம்களுக்குத் தனியான பகுதி அமைத்தல், திருமலையின் ஒரு பகுதியை வடக்குடன் இணைத்தல், ஏனைய பகுதிகளைக் கிழக்குடன் வைத்திருத்தல் எனப் பல யோசனைகள் குறித்துப் பேசப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஆனால், இதில் அவர் முக்கியமாகக் குறிப்பிட்ட மற்றொரு விடயம் என்னவெனில், இவ்வாறான யோசனைகளை அரசாங்கம் முன்வைத்ததுதான். அதாவது தம்மைச் சந்தித்த தமிழ்க் குழுக்களிடம் அரசாங்கம் முன்வைத்த யோசனைகள் இவை என்பதுதான். ஆனால், இது தொடர்பான சந்திப்புத் தொடர்பாகக் கொழும்புப் பத்திரிகைகளோ வெளியிடும் தகவல்கள் வேறுமாதிரியாக உள்ளது. அதாவது மேலே டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டதுபோன்று, பல யோசனைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து, தமிழ்க் குழுக்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் என்பதேயாகும்.

வீரகேசரிப் பத்திரிகை இது குறித்துத் தெரிவிக்கையில், பலரும் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை முன் வைத்திருப்பதால், இவற்றைப் பற்றி அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும் என்பதால், இதற்குத்

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முழுமையான இணைப்பு என்பதை அரசு ஏற்கமாட்டாது என்பது மட்டுமல்ல, அதற்குத் தான் பொறுப்பு ஏற்கத் தயாராக இல்லை என்பதுமாகும். இந்த நிலையில் அரசு, அதிகாரப் பரவலாக்கலிலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விலும் அக்கறையாக உள்ளது, கரிசனைகாட்டி வருகின்றது என்ற நிலையைத் தமிழ்க் கட்சிகள் உரமாக்குவதானது படுமோசமானதொரு துரோகத்தனமாகும்.

தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றும், எனவே தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி தீர்க்கமானதொரு நல்ல நிலைப்பாட்டிற்கு வரவேண்டும் என்றும் இச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது எனத்தெரிவிக்கின்றது. அதாவது, டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பதுபோல், அரசாங்கம் பல தீர்வு யோசனைகளை முன்வைத்து ஒன்றைத் தெரிவுசெய்யுமாறு கோரவில்லை. மாறாகப் பல யோசனைகள் பலர் மத்தியில் உள்ளது. அதில் ஒன்றைத் தமிழ்க் குழுக்கள் தெரிவு செய்வது நல்லது என்பது பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப்பட்ட விடயமாகும். இதன் பிரகாரம் அரசு தரப்பில் இந்த இரு விடயங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது, அதிக பட்சம் வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தில் ஒரு சில பகுதிகளை இணைத்தல் என்பது மட்டுமே ஆகும். முழுமையான வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்பது சாத்தியமாகப் போவதில்லை. இரண்டாவது, முக்கிய அம்சம் இவ்வாறான இணைப்புக் குறித்த விடயத்தில் கூட அரசாங்கம் தனது கொள்கைகளை எடுத்துக் கொண்டும் அதனை எளிதில் முன்வைக்கப்போவதில்லை. தமிழ் குழுக்களே அதனையும் முன் எடுத்துச் செல்லவேண்டும் என்பதாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், வடக்கு – கிழக்கு மாகாணங்களின் முழுமையான இணைப்பு என்பதை அரசு ஏற்கமாட்டாது என்பது மட்டுமல்ல, அதற்குத் தான் பொறுப்பு ஏற்கத் தயாராக இல்லை என்பதுமாகும். இந்த நிலையில் அரசு, அதிகாரப் பரவலாக்கலிலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விலும் அக்கறையாக உள்ளது, கரிசனைகாட்டி வருகின்றது என்ற நிலையைத் தமிழ்க் கட்சிகள் உரமாக்குவதானது படுமோசமானதொரு துரோகத்தனமாகும். சந்திரிகா அரசானது, அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்தும் வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்தும் தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வரையறை செய்யும்முன்னர், இணக்கத்துடன் இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படுகின்றது என்பதும் முக்கியமான விவகாரங்களில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது எனக்கூறுவதும், சந்திரிகா அரசுடன் சேர்ந்து தமிழ் குழுக்கள் தமிழினத்தையும் உலகையும் ஏமாற்றும் சதிச்செயலாகும். ✷

www.tamilarangam.net




நாவண்ணன்

## அத்தியாயம் 7 இன் தொடர்ச்சி

சம்பவங்களை இன்னும் முழுமையாக நாங்கள் அறியவில்லையாயினும், அந்த நிகழ்வு ஏதோ ஒரு விதத்தில் நெஞ்சை நெருடிக் கொண்டிருந்தது. "பாவம் அந்த நாலு பிள்ளையளும்" என்று, நாம் இன்னும் கண்டிராத அந்த இளசுகளுக்காக மனம் இரங்கியது.

"பெடியனுக்குப் பதினைஞ்சு வயசு என்றவை, அவன்தான் இனி அந்தப் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவர்களுக்காக இரங்கிக் கதைத்த டேவிட் திடீரென்று 'நாவண்ணன், அந்தப்பெடியன்ரை கையில ஒரு துவக்கையும் கொடுத்து, இவன் அனுருத்தாவையும், சந்திரிகாவையும் முன்னால கொண்டுவந்து விட்டால் என்ன நடக்கும் என்று கற்பனை பண்ணிப்பாருங்கோ" என்றார்.

கற்பனை வளம் கூடிய சிறந்த எழுத்தாளர் டேவிட்டின் கற்பனையை எண்ணிப்பார்க்க அபூர்வமாகத்தான் இருந்தது. என்ன நடக்கும் என்ற எனது கற்பனையை நான் பகிர்ந்துகொள்வதை விட, வாசகர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கற்பனையின் படி அந்த அனுபவத்தைப் பெற விட்டுவிடுகின்றேன்.

கோண்டாவில் சசிகுமாரன் வீதியில் பாலகிருஷ்ணனின் பிள்ளைகள் இருக்கும் வீட்டைக்கண்டு பிடிப்பது அவ்வளவு சிரமமாயிருக்கவில்லை. அவர்கள், பெரிய தந்தையான பாலசுப்பிரமணியத்துடன் உறவினர்கள் வீட்டில் இருந்தனர்.

அவர்களிடம் நாம் எம்மை அறிமுகம் செய்துகொண்டு, சங்குவேலியில் அவர்கள் வீட்டுக்குச் சென்றுவந்த விடயத்தையும் கூறினோம்.

பாலசுப்பிரமணியமும், பாலகிருஷ்ணனின் பிள்ளைகளும் நீண்ட நேரமாகத் தங்கள் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டனர். பாலகிருஷ்ணனின் தாயார் தொலைவில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

பாலகிருஷ்ணன்–ஸ்ரீகுமாரியின் திருமணம், காதல் திருமணம். அவர்களது அன்பு வாழ்க்கையின் அடையாளச் சின்னங்கள்தான் ஸ்ரீபாமினி, கிருஷ்ணானந்தி, முரளிதாசன், தயாளன் முறையே 18,17,15,13 என்று வயதுகள். பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தனர். முரளிதாசன் கொஞ்சம் முரண்டு, படிப்பில் அக்கறை இல்லை என்ற கவலை. முரளிதாசன் குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்தால் பெற்றவர்களுக்குக் கூடாது என்பது யாரோ சாத்திரியின் ஆரூடம். இதன் காரணத்தால் சிலகாலம் கிளிநொச்சியில் விட்டுப்படிப்பிக்க முயன்றும் சரிவரவில்லை. அவன் திரும்பி வந்துவிட்டான்.

பாலகிருஷ்ணன் யாழ். கச்சேரி உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் சிற்றூழியர். அந்த வருமானத்துடனேயே அவர்கள் குடும்பம் வாழ்ந்து வந்தது.

ஜூலை 9ம் திகதி 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கை ஆரம்பமானபோது சங்குவேலி, உடுவில் பக்கம் எறிகணைகள் வந்து விழுந்துகொண்டே இருந்தன. வரவர நிலைமை மோசமடைவதைக் கண்ட பாலகிருஷ்ணனும் மனைவியும், பிள்ளைகள் நால்வரையும் சற்றுத்தொலைவில் இருக்கும் பெரியப்பா பாலசுப்பிரமணியத்தின் வீட்டுக்குப் போகும்படியும், தாங்கள் பின்னே வருவதாகவும் சொல்லி அனுப்பி வைத்தனர். தாமும் அவர்களைத் தொடர்ந்து வெளியேறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

பிள்ளைகள் பெரியப்பா வீட்டை அடைந்த போது அவர்களும் அங்கிருந்து உடுவிலுக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். பாலகிருஷ்ணனும் மனைவியும் வருவதற்குத் தாமதமாகவே பெரியப்பா பாலசுப்பிரமணியம், தனது குடும்பத்தவருடன் தம்பி பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு உடுவிலுக்குப் புறப்பட்டார். அப்பொழுது நேரம் காலை 10.30 இருக்கும். அவர்கள் உடுவிலுக்குப் போய்க்கொண்டிருக்கும் போதுதான், அந்தப் பாரிய இடிபோன்ற 'ஷெல்' சத்தம் வெகு அண்மையில் கேட்டது. எனினும் அந்த இடி பாலகிருஷ்ணனின் குடும்பத்தின் தலையில்தான் விழுந்தது என்பது அப்போது ஒருவருக்கும் தெரியாது.

உடுவிலுக்கு வந்தபோதும் 'ஷெல்' சத்தங்கள் பயங்கரமாக இருந்தன. அங்கிருக்க அஞ்சி, சுதுமலைக்கு வந்தனர். பின்னர் சுதுமலையிலும் 'ஷெல்' சத்தம். 'ஷெல்' ஒன்று அவர்கள் நின்ற வீட்டுக்கு அண்மையிலேயே விழுந்து வெடித்தது. எனவே அங்கிருந்தும் புறப்பட்டு, கோண்டாவில் சசிகுமாரன் வீதிக்கு வந்துசேர்ந்தனர்.

இத்தனைக்கும் பாலகிருஷ்ணனும் மனைவியும் வந்து சேராததைப்பற்றி யாரும் நினைக்காமல் இல்லை. அவர்கள் ஒருவேளை மாமனார் வீட்டுக்குப் போயிருப்பார்கள், அல்லது தாம் இடம்மாறி இடம் வந்து கொண்டிருப்பதால் தங்களோடு இன்னும் வந்து சேரமுடியாதிருக்கிறது என்று தமக்குள்

# வித்துக்கள்

சமாதானம் கூறிக்கொண்டனர்.

ஆனால் மறுநாள் 10ஆம் திகதியும் பாலகிருஷ்ணன் கச்சேரிக்கு வேலைக்குப் போகவில்லையாம் என்பதைக் கேள்விப்பட்டபோதுதான், இவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் தங்கி நிற்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்று பார்த்ததும், அவர்கள் அங்கெல்லாம் வரவில்லை என்பது கவலையைக் கொடுக்கத் தொடங்கியது. எனவேதான் சங்குவேலி வீட்டை அவர்கள் நிற்கின்றார்களோ என்று பார்த்துவர அன்று காலை, நம்பிக்கையான ஒருவரை அனுப்பிவைத்தனர். அவர் சென்று வந்துதான் முற்றத்தில் மாமரம் விழுந்து மூடிக்கிடக்கின்ற தகவலைச் சொன்னார். எனவேதான் பாலசிங்கம் தனது மைத்துனனையும், தனது மகனையும், நிலைமையைப் பார்த்துவர அனுப்பி வைத்தார். அவர்கள் பிற்பகல் 4.00 மணியளவில் வந்து பாலகிருஷ்ணனும் ஸ்ரீகுமாரியும் இறந்துவிட்ட தகவலைத் தந்தனர்.



சைக்கிளுக்குக் கீழே ஸ்ரீகுமாரி, சைக்கிளின் மேலே பாலகிருஷ்ணன் ஹாண்டிலைப் பிடித்தபடி வீழ்ந்துகிடக்க, அவர்களின் மேலே மாமரம் முறிந்துகிடந்தது. எனவே, அவர்கள் எடுக்கவேண்டிய பொருட்களை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்ப ஆயத்தமானபோது ஷெல் வந்து மரத்தில் வீழ்ந்து இவர்களையும் தாக்க–மரமும் முறிந்து, இவர்களை மூடி, அழுத்திச் சாகடித்துவிட்டது! இவர்கள் உயிரோட இருந்தால்கூட அவர்களைக் காப்பாற்றுவதற்கு யாருமில்லாத நிலையில், இருவரும் ஒருவரையொருவர் அணைத்த நிலையில், குப்புறக் கிடந்தபடியே இறந்துபோனார்கள்!

அதன் பின்னரே அந்த இரு உடல்களையும் ஒரு வாகனம் ஒன்றைப்பிடித்து, வைத்தியசாலைக்குக் கொண்டுசொல்வதற்கு முயற்சி எடுத்தனர். அந்தப்பகுதிக்கு வாகனத்தைக்கொண்டு வருவதற்கு அனைவருமே மறுத்தனர். இறுதியில் ஒரு 'லாண்ட் மாஸ்ரரில்' அங்கு செல்ல முயற்சித்தபோது, மீண்டும் 'ஷெல்' அடி ஆரம்பமானது. எனவே நாளைக் காலை செல்வோம் என்று முடிவெடுத்தனர்.

இத்தனைக்கும் பாலகிருஷ்ணனின் தாயாருக்கோ, பிள்ளைகளுக்கோ இவர்கள் இறந்த செய்தியை வெளியிடவில்லை. தாயார் உடுவிலில் இருந்தார். அந்தச் சின்னன்களுக்குப் பெற்றோர் இறந்த செய்தியைக் கூறாது, பெரியவர்கள் அன்று இரவு பூராவும் தமக்குள்ளே தாமே இரகசியமாக அழுதுகொண்டு இருந்தனர். அம்மாவும் அப்பாவும் இறந்த கொடுமையை அவர்களால் தாங்கமுடியுமா?

மறுநாள் விடிந்தது. இருவரையும் எடுத்து அடக்கம் செய்வதற்குப் பெட்டி எடுத்துவரும்படி சுன்னாகத்துக்கு 'லாண்ட்மாஸ்ரரை' அனுப்பிவிட்டு, பின்னர் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு உடுவிலுக்கு வரும்படி சொல்லிவிட்டு, மற்றவர்கள் சைக்கிளில் சங்குவேலி நோக்கிப்புறப்பட்டனர். அவர்கள் வில்லியம் மேதர் இல்லத்திற்கு அருகில் சென்றபோது, மீண்டும் 'ஷெல்' அடி ஆரம்பித்துவிட்டது. அப்படியிருந்தும் உடுவில் மகளிர் கல்லூரி மட்டும் போயினர். அதற்கு மேல் போகமுடியவில்லை. எனவே 'லாண்ட்மாஸ்ரரில்' உடல்களைக் கொண்டுவரும் திட்டத்தைக் கைவிட்டு, பெட்டி எடுக்கவேண்டாம் என்று அறிவித்தனர். பிள்ள்ளைகளையும் உடுவிலுக்குக் கொண்டுவரும் திட்டம் கைவிடப்பட்டது. அப்பொழுதுதான் பிள்ளைகளுக்கு விபரம் தெரியவந்தது.

அங்கிருந்து மல்வம் சென்று, அவர்கள் பகுதிக்குத் தற்காலிக கிராம உத்தியோகத்தராக இருந்த சந்திரவதனிடம் அறிவித்துவிட்டு, பேக்கரி பாலாவிடம் நான்கு சாக்குகள் வாங்கிக்கொண்டு மல்வம் ஊடாக ஆலடிக்குச்சென்றபோது, மீண்டும் 'ஷெல்கள்' வந்து வீழ்ந்தன. எனவே திரும்பவும் மகளிர் கல்லூரியடிக்குத் திரும்பிவரவேண்டியதாயிற்று. வட்டவைக்குச் சென்று நிலைமை அறிவிக்கப்பட்டது. 'ஷெல்' தாக்குதல் நடந்துகொண்டே இருந்தது.

இறுதியில் பாலசிங்கத்தின் பெறாமகன் ஒருவரும், தம்பியார் முறையான இன்னொருவரும், ஒருவாறாகச் சைக்கிளில் போய்ச் சேர்ந்தனர். கூடவே அவர்கள் மண்ணெய் கொண்டு போனதால், அப்படியே அவர்களுக்குத் தீமூட்டிவிட முயற்சித்தனர். ஆனால் அம்முயற்சியும் கைகூடவில்லை. சற்றுத் தள்ளி நின்ற போராளிகள் "நெருப்பெரிக்க வேண்டாம், இப்பொழுது நெருப்பெரித்தால் புகையைக் கண்டு எதிரி இந்த

www.tamilarangam.net




# வீழ்ந்தன

இடத்துக்கு 'ஷெல்' அடிக்கக்கூடும், நீங்கள் விட்டுவிட்டுப் போங்கள் நாங்கள் பிறகு எரித்துவிடுகின்றோம்' என்று தடுத்து அனுப்பிவிட்டனர்.

இவர்கள் சைக்கிளை மட்டும் எடுத்துக்கொண்டு திரும்பினர். இத்தனைக்கும் சைக்கிளில் ஒரு சேதமுமில்லை: அது ஓடிவரக்கூடிய நிலைமையிலேயே இருந்தது!

இவர்கள் வந்து போனது தெரியாத நிலையில், வேறு பாதையால் ஸ்ரீகுமாரியின் தம்பி பிரேம்குமாரும், மாமனும் அங்கு சென்றனர். இறந்து மூன்று நாட்களாகியும் அவர்களின் உடல்கள் பாதுகாப்பு அற்றநிலையில், அவ்விடத்தில் கிடப்பதைச் சகிக்கமுடியாமையினாலும், இனியும் அப்படியே விட்டால் துர்நாற்றம் அதிகமாவதுடன்...... நாய்கள், காகங்கள் அவற்றை அசிங்கப்படுத்தலாம் என்ற எண்ணத்துடனும், அவசரமாக ஒரு குழியை வெட்டி, அதனுள் இரண்டு சடலங்களையும் போட்டு மூடினர். குழி அவ்வளவு ஆழமற்றதாக இருந்தது. எனவே மேலே மண்ணைக்கூடுதலாக அணைத்து விட்டனர். போராளிகள் அன்று செய்யவிருந்த கடமையை உறவினரே செய்து முடித்து வெளியேறினர். அது ஒருவிதத்தில் அன்று போராளிகள் செய்யவிருந்த கடமைக்குத் துணையாகவும், அவர்கள் சிரமத்தைக் குறைப்பதாகவும் இருந்தது.

அப்படி இருந்தும்கூட, அக்குழி பாதுகாப்பானதாக இருக்கவில்லை. ஏனெனில் நாய்கள் குழியைச் சேதப்படுத்தத் தொடங்கின. இதனால் தினமும் யாராவது சென்று குழியைச் செப்பனிட்டு, மேலே மண்போட்டுக்கொண்டே வந்தனர். இந்த நிலைமை போராளிகள் 'புலிப்பாய்ச்சலை' தொடங்கும்வரை தொடர்ந்து வந்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை 16ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சிலரைக் கூலிக்குப் பிடித்துச்சென்று, அவர்களின் உதவியுடன் பிணங்கள் இரண்டையும் மேலே எடுத்தனர். அந்த மாமரத்தின் கெட்டுக்களைத் துண்டு போட்டும், அயலெல்லாம் விறகுகள் சேகரித்தும் ஒரே சிதையில் இருவரது உடலையும் வைத்து எரித்தனர்.

காதலித்துத் திருமணம் செய்த அந்தத் தம்பதியினர் வாழ்க்கையில் ஒன்றிணைந்து வாழ்ந்தது மட்டுமல்ல– மரணத்திலும் ஒன்றிணைந்தனர். ஒரே புதைகுழியில், சில நாட்கள் ஊனோட ஊன்கலந்து–பின்னர் ஒரே சிதையில் சாம்பலோடு சாம்பல் கலந்தனர்—

மறுநாள் பாலசிங்கத்தின் மூத்தமகன் உதயகுமார், உடலின் எரியாத பகுதியைக் கூட்டி எரித்தான்.

19ஆம் திகதி புதன் அன்று, காக்கைத்தீவுக் கடலுடன் அக்காதல் தம்பதியரின் சாம்பல் சங்கமித்தது...

நடந்த நிகழ்வுகளை அவர்கள் கூறிமுடித்தபோது, அங்கு ஒரு பூரண அமைதி நிலவியது... அந்த அன்பான குடும்பத்தின் எச்சங்களான பிள்ளைகளின் உருவங்கள் மனதை என்னவோ செய்தன. முரளிதாசனுக்கு வயது பதினைந்துதான் என்றாலும், வயதுக்கேற்ற வளர்ச்சியற்ற சிறுவனாகவே காட்சியளித்தான். வயதான பெரியதந்தைக்குத் துணையாக நின்று, தன்னிலும் வயதில் மூத்த சகோதரிகளையும், தம்பியையும் இவன் எப்படிக் காப்பாற்றப் போகிறான்? 'குருவி தலையில் பனம்பழமா?' என்ற வினா எமக்குள் எழத்தான் செய்தது.

மோட்டார் சைக்கிளில் வரும்போதும் டேவிட் சொன்னார், "பாவம் நாவண்ணன், அந்தப் பொம்பிளைப் பிள்ளைகளை மறக்க ஏலாது இருக்கு. இவன் எப்படிக் காப்பாற்றப்போகிறான்!"

பிள்ளைப் பாசத்தில் மெல்லுணர்வைக்கொண்டவர் டேவிட் என்பது எனக்குத் தெரியும். அவரது உணர்வுகளை அவர்கள் வெகுவாகப் பாதித்துவிட்டார்கள். அவரை மட்டுமல்ல என்னையும்தான்.... தனது பிள்ளைகளை நினைத்துக் கவலைப்படும் கோடீஸ்வரியான சந்திரிகா அம்மையார், தமிழீழத்தில் இது போன்ற எத்தனை அநாதைகளை இதுவரையில் உருவாக்கிவிட்டார். இன்னும் எத்தனை பேரை உருவாக்கப் போகிறாரோ? என்று எண்ணும்போது, பெருமூச்சு ஒன்றைத்தான் விடமுடிந்தது.

சசிகுமாரன் வீதியிலிருந்து புறப்பட்டு, பிறவுண்வீதியால் தொழில்நுட்பக் கல்லூரியை நோக்கிச் சென்றோம். கொக்குவில் கடலைக்கு எதிரில், பிறவுண் வீதிக் கரையில் தேநீர்க் கடை: அந்தக் கடையை ஒட்டி ஒரு ஓடைபோன்ற வாசல். அதில் மோட்டார் சைக்கிளை நிறுத்துகின்றோம். மோட்டார் சைக்கிள் நிற்பதைக் கண்டதும், முகத்திலே தாடிவளர்த்த திடகாத்திரமான இளவயதுக்காரர் ஒருவர் எம்மிடம் வருகிறார்.

'நிச்சாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த சிவகுமார் இங்கதானே இருக்கிறார்?' என்று கேட்டபோது, "ஓம், நான்தான் வாங்கோ" என்றார். அவர் நடந்துகொண்ட விதத்தில், எமது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது புலனாகியது.

"நாங்கள் உங்கட அண்ணன் உதயகுமார், உங்கட மகள் சுரேகா பற்றிய தகவல்களை எடுக்க வந்தனாங்கள்" என்று அறிமுகப்படுத்தும்போதே, 'ஓம் நீங்கள் நிச்சாமம் போனதாகச் ஸ்ரீ சொன்னவர்' என்றார் சிவகுமார்.

நான் மட்டும் ஒருமுறை நிச்சாமம் கோவிலடிக்குப் போய் இவர்களைப் பற்றி விசாரித்தபோது, சிவகுமாரின் மைத்துனன் சிறீதரன், அவர்கள் இந்த முகவரியில் இருப்பதாக எனக்குக் கூறியிருந்தார். நான் தேடிச்சென்ற விடயத்தையும் அவரிடம் கூறியிருந்தேன். அவரே சிவகுமாருக்குச் சொல்லியுள்ளபடியால், எமக்கு வெகு இலகுவாயிருந்தது.

சிவகுமார், சிவகுமாரின் மனைவி, உதயகுமாரின் மனைவி தெய்வநாயகி, பிள்ளைகள் இருவர், மற்றும் உதயகுமாரின் அக்கா இராசமணி, எல்லோரும் எம்மைச்சூழ இருந்தனர். சிவகுமார் நடந்த சம்பவங்களை வரிசைக் கிரமமாகச் சொல்லத் தொடங்கினார்.



உதயகுமார் ஒரு மீன்வியாபாரி. மோட்டார் சைக்கிளில் வியாபாரம் செய்பவர். 9ஆம் திகதி காலை எறிகணைத் தாக்குதல்கள் ஆரம்பமாகவே, உதயகுமார் நிச்சாமத்திலிருந்து தனது பெண்மக்கள் சுஜேந்தினி, ஜெனிற்றா இருவரையும் ஏற்றிக்கொண்டு நாவாந்துறையில் தெரிந்தவர் வீட்டில் இறக்கிவிட்டு, மீண்டும் திரும்பிவந்தார். இதற்கிடையில் சிவகுமார் குடும்பமும், உதயகுமாரின் மனைவி தெய்வநாயகியும், பிள்ளைகளும் நடந்து நவாலிவரை வந்தனர்.

நவாலி அரசடி வீதியில் உள்ள–சிவகுமாரின் மாமன் முறையானவரான– செபஸ்தியாம்பிள்ளை வீட்டினில் தங்கியிருந்தனர். உதயகுமார் மீண்டும் மோட்டார் சைக்கிளில் வந்தார். வந்த அவர் சிவகுமாரின் மகள் சுரேகாவை முன் 'கரியரிலிலும்' தாயார் நாகமுத்துவை மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையிலும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

உதயகுமாரின் பதின்மூன்று வயது மகன் சதீஸ்குமார், இவரைப் பின்தொடர்ந்து சைக்கிளில் தனது தங்கை உசாந்தினியை ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். முன்னும் பின்னுமாக மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் சென்று கொண்டிருந்தன. இவர்கள் புறப்பட்ட சில நிமிடங்களில்தான், 'புக்காரா' விமானம் ஆறுகுண்டுகளை ஒரே முறையில் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தைச் சுற்றி உமிழ்ந்தது.

உதயகுமார் சென்றதன் பின்னர், அவர் மனைவி தெய்வநாயகியும், மைத்துனி இராசமணியும், நாவாந்துறை நோக்கிப் புறப்பட்டனர். கோவிலடியில் குண்டு வீசப்பட்டு அங்கெல்லாம் குழப்பம். பாதையும் தடைப்பட்டுள்ள படியால், குறுக்கு வழியால் இறங்கி, அவர்கள் இருவரும் நாவாந்துறையை வந்தடைந்தனர். ஆனால் அங்கே உதயகுமாரின் மூத்த பெண்மக்களான சுஜேந்தினி, ஜெனிற்றாவும் மட்டும் இருந்தனர். மோட்டார் சைக்கிளில் தமக்கு முன்னே புறப்பட்ட உதயகுமாரோ, தாயாரோ அல்லது சைக்கிளில் தங்கை உசாந்தினியுடன் புறப்பட்ட சதீஸ்குமாரோ இன்னும் வந்து சேரவில்லை. அரசடியிலிருந்து அவர்கள் புறப்பட்ட சில நிமிடங்களில் குண்டு வீழ்ந்தது நினைவுக்கு வரவே, இவர்களுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. அழத்தொடங்கிவிட்டனர்.

சற்று நேரத்தில் சிவகுமார் சைக்கிளில் மனைவியுடன் வந்து சேர்ந்தார். அவர்கூட குறுக்குவழியால் வந்திருந்தாரே ஒழிய, குண்டு விழுந்த இடத்திற்குச் செல்லவில்லை. அண்ணன் உதயகுமாருடன் மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட தனது ஒரே மகள் சுரேகா இன்னும் நாவாந்துறை வந்து சேரவில்லையென்றதும் மனம் 'பகீர்' என்றது. அவளுக்கு ஏதேனும் ஆபத்து நிகழ்ந்திருக்குமோ என்று எண்ணிப்பார்க்கவும் முடியாதிருந்தது.

உடனே சைக்கிளை எடுத்துக்கொண்டு நவாலியை நோக்கி வேகமாக விரைந்தார். குண்டுவீச்சு நடந்த இடத்தை அடைந்தார்.

அங்கே உதயகுமாரை அடையாளங்காணுவது சிரமமாயிருக்கவில்லை. அவர் தனது மோட்டார் சைக்கிளுடனேயே விழுந்து கிடந்தார்..... அவரது முதுகு பிளந்திருந்தது.....

தொடரும்...

www.tamilarangam.net






# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஆறு

(தொடர்ச்சி)

பழைய நகரச் சுவர்களை நோக்கியபடி பாமாகுஸ்ராவின், ஆர்சினோஸ் வீதியில் இருந்த ஒரு ஆடம்பரமான மாளிகை, ஒரு கிரேக்க சைப்பிரஸ் வாசியான மாண்ட்றி (Mandrla) என்பவனுக்குச் சொந்தமானது. இவனுக்குச் சைப்பிரஸ் மத்தியதரைக் கடல் கப்பல் கம்பனி ஒன்று சொந்தமாயிருந்ததோடு, தீவில் அதிக எண்ணிக்கையில் அவனுக்குச் சொந்தமான ரக்சிகள் ஓடிக்கொண்டிருந்தன.

மாண்ட்றியாவும், டேவிட்பென் அமியும் நீந்திக் கரைக்கு வந்தபின் அரி பென் கானான் உடம்பைக் கழுவி, காய்ந்த உடுப்புகளை அணியும்வரை கவலையுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

ஏனெனில் அரிபென் கானான் தோற்றமளித்தால், மொசாட் அலியாபெற்றுக்காக ஏதோ உயர்மட்டப் பணியில் ஈடுபடப்போகிறான் என்பதுதான் கருத்தாகும் என்று அவர்களிருவருக்கும் மிக நன்றாகவே தெரியும். பலஸ்தீனத்துக்கான யூதக் குடியேற்றத்தை முற்றாகவே தவிர்த்தல், அல்லது முடிந்தவரை கட்டுப்படுத்தல் என்பதே பல வருடங்களாகப் பிரிட்டனின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கையை அமுல்படுத்த அவர்கள் றோயல் கடற்படையை (Royal Navy - றோயல் நேவி என்பது பிரிட்டிஸ் கடற்படையையே மட்டும் குறிக்கும்)ப் பயன்படுத்தினார்கள். மொசாட் அலியாபெற் என்பது, மற்றைய யூதர்களைப் பலஸ்தீனத்துக்கு இரகசியமாகக் கொண்டு செல்வதற்கு உதவுவதைக் கடமையாகக் கொண்டிருந்த பலஸ்தீனிய யூதர்களின் ஒரு அமைப்பாகும். ஆயினும், யூதர்களை ஏற்றிக்கொண்டு தடையை மீறிச்செல்ல முயலும் மொசாட் படகுகளைக் கடற்படை கைப்பற்றியதும், அவற்றிலிருந்து யூதர்கள் விரைவாக சைப்பிரஸ் தடுப்பு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அரி பென் கானான் புதிதாக மாற்றிய உடுப்புக்களுடன், அறைக்குள் வந்து, மண்ட்றியாவுக்கும் டேவிட் பென் அமிக்குமாகத் தலையை அசைத்தான். அந்தப் பலஸ்தீனியன் பெரிய உருவத்தைக் கொண்டிருந்தான். ஆறடிக்குமேல் உயரமிருக்கும். கட்டான தேகம், அவனும் பென் அமியும் நெருங்கிய நண்பர்களாயிருந்தாலும் தங்களுடைய அமைப்பைச் சாராத, வெறும் அனுதாபியான மாண்ட்றியா முன் சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்தார்கள்.

அரி ஒரு சிகரெட்டைப் பற்றிக்கொண்டு நேராக விடயத்துக்கு வந்தான், "தலைமையகம் இங்குள்ள அகதி முகாம்களிலிருந்து பெரும் தொகையில் ஆட்களைத் தப்ப வைக்க என்னை அனுப்பியிருக்கிறது. காரணங்கள் எங்கள் எல்லோருக்குமே தெளிவாகத் தெரியும். டேவிட் இதுபற்றி உமது கருத்து என்ன?

ஜெருசலேமிலிருந்து வந்திருந்த அந்த மெல்லிய மனிதன் அறையில் குறுக்கும் நெடுக்கும் சிந்தித்தபடி நடந்தான். பலஸ்தீனிய யூதர்களில் இரகசிய இராணுவப் பிரிவான பல்மாக் (Palmac) அவனை சில மாதங்களுக்கு முன்பே சைப்பிரசுக்கு அனுப்பியிருந்தது. அவனும் அவனைப்போன்ற டசின் கணக்கானவர்களும், பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரியாமல், அகதிகள் முகாம்களுக்குள் ஊடுருவி பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், யூத வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றை நிறுவி, சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, சிறிய ரகக் கைத்தொழில்களையும் செயற்பட வைத்தனர். பலஸ்தீனத்துக்குள் செல்ல விடாமல் திரும்பி அனுப்பபட்ட யூதர்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். யூத இராணுவத்தில் இருந்து வந்திருந்த பலஸ்தீனிய இளைஞர்களை கண்டமை, அவர்களுக்குப் புதிய எதிர்ப்புக்களையும், மன எழுச்சிகளையும் ஊட்டியது. டேவிட் பென் அமியும் மற்றைய பல்மாக் தொண்டர்களும், ஆயிரக்கணக்கான அகதி முகாம் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தடிகளைத் துப்பாக்கியாகவும், கற்களை எறிகுண்டாகவும் பாவித்து, இராணுவப் பயிற்சி அளித்தனர். இருபத்தியிரண்டு வயது மட்டுமே நிறைந்திருந்தாலும், டேவிட்டே சைப்பிரஸ் பல்மாக்கின் தலைவனாகச் செயற்பட்டான். பலஸ்தீனியர்கள் வந்திருப்பதைச் சில சமயங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகள் கேள்விப்பட்டாலும், அதைப்பற்றி அதிக சிரத்தை எடுக்கவில்லை. ஏனெனில், அவர்கள் காவல் வேலையை அதிகமாக வேலிக்கு வெளியேயிருந்தே செய்வதோடு, வெறுப்பு மண்டிக்கிடந்த அந்த வளாகங்களுக்குள் செல்ல எவ்வித விருப்பமும் அற்றவர்களாக இருந்தார்கள்.

"எவ்வளவு பேர் தப்பிச் செல்ல வேண்டுமென நீ விரும்புகிறாய்? டேவிட் கேட்டான்.

"முன்னூறு பேர் வரையில்."

டேவிட் முடியாதெனத் தலையாட்டியபடி சொன்னான், "நாங்கள் சில சுரங்கப்பாதைகளை வெட்டியிருந்தாலும், அவை கடல் பக்கமாகவே செல்கின்றன. இரவில் இங்கு எழும் அலைகள் மிகப் பயங்கரமானவை. திறமையான நீச்சல்காரருக்கே அது முடியும். இரண்டாவதாக நாங்கள் கழிவு தொட்டிகளூடாகவே உள்ளும், வெளியேயும் சென்று வருகிறோம். இந்த இடங்கள் குறைந்தளவு காவல்களைக்கொண்டவை. ஆனால் இவை கட்கூடாக இவ்வளவு தொகையான ஆட்களை இடம் மாற்றுவது சிரமம். மூன்றாவதாக, பிரிட்டிஸ் சீருடைகளும், போலி ஆவணங்களும்...... இதிலும் ஒரு சிலரையே ஒரே நேரத்தில் வெளி, உள்ளாக இடம்மாற்ற முடியும். கடைசியாக எமதாட்களைச் சாமான்கள் ஏற்றும் பெட்டிகளில் வைத்துத் துறைமுகத்துக்கு அனுப்புவோம். அங்கு கப்பல் கம்பெனிச் சொந்தக்கரனான இந்த திரு. மண்ட்றியாவும், அவரது துறைமுக உதவியாளர்களும் இவ்வகையான பெட்டிகளை எதிர்பார்த்திருப்பார்கள். இந்த நேரத்தில் ஒரு பெரும் தொகையானவர்களைத் தப்பவைக்க ஒரு வழியும் புலனாகவில்லை அரி."

> லொறிகள் எல்லாவற்றிலும், இத்தாலியிலிருந்து பலஸ்தீனத்துக்கு, பிரிட்டிஸ் தடையை மீறிச் செல்ல முற்பட்ட டோர் ஓவ்கோப் (Door of Hope - நம்பிக்கையின் கதவு) என்ற கப்பல், அதில் சென்ற அகதிகளால் நிரம்பி வழிந்தது. டோர் ஓவ் கோப் கப்பல், கடற்படை நாசகாரி ஒன்று குறுக்காக மோதியபின் கைபாவுக்கு (Haifa) இழுத்துச் செல்லப்பட்டு அதிலிருந்த அகதிகள் விரைவாக சைப்பிரசுக்கு மாற்றப்பட்டனர்.

"நாங்கள் ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிப்போம்". தீர்க்கமான குரலில் அரி சொல்லிவிட்டுத் தொடர்ந்தான். "ஆனால் இப்பணியைச் செய்வதற்கு எங்களுக்குச் சில கிழமைகளே இருக்கின்றன".

கிரேக்கரான மண்ட்றியா எழுந்து பெருமூச்சு விட்டபடி தலையை அசைத்தான். பின்பு "திரு.பென் கானான் அவர்களே, நீங்கள் இன்றிரவு இங்கே நீந்தி வந்துவிட்டு, இரு கிழமைகளில் இதைச் செய்யச் சொல்லுகிறீர்களே எனது மனம் இதைச் செய்யலாம் என்று சொல்கிறது என்று கூறித் தன் மார்பைத் தொட்டுக்காட்டினான். பின்தலையில் தட்டிக்காட்டி, "தலையோ இதைச் செய்ய முடியாதென்கிறது" என்று சொல்லிவிட்டுக் கையைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு அறையில் நடக்கத் தொடங்கினான். அவன் பென் கானானுக்காகத் திரும்பிச் சொன்னான். "என்னை நம்புங்கள் திரு.பென் கானான்" என்று சொன்ன அவன், கைகளை விரித்து வீரமாகச் சைகை செய்தபடி தொடர்ந்தான். பலமாக்கிலும், மொசாட்டிலும் இருக்கும் உங்களுக்குக் கடைசித்துளி இரத்தம் இருக்கும் வரை சைப்பிரசிலிருக்கும் கிரேக்கர்கள் பக்க பலமாயிருப்பார்கள் என்று நம்பலாம். நாங்கள் உங்களுக்காக, உங்களுடன், உங்களுக்குப் பின்னால் நிற்கின்றோம். ஆயினும் சைபிரஸ் எல்லாப்பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. பிரிட்டிஸ்காரரும் முட்டாள்களுமில்லை. தூங்கிக் கொண்டுமில்லை. நான் இந்த மாண்ட்றியா உங்களுக்காக முடிந்த அவ்வளவும் செய்வேன். ஆயினும் உங்களால் முந்நூறு பேரை கராலொலொஸ்சிலிருந்து வெளிக் கொணர முடியாது. பத்தடி உயரமான முட்கம்பி வேலிகள் இந்த வளாகங்களைச் சுற்றியிருக்கின்றன. காவலாளிகளும், ரைபிள்களுடன் திரிவார்கள். அவற்றில் குண்டுகளுமுண்டு.

பென் கானான் எழுந்து மற்றிருவருக்கும் முன்னால் துயரமாக நின்றான். மாண்ட்றியா அபிநயத்தோடு சொன்னவற்றில் ஏராளமானவற்றை அவன் கண்டு கொள்ளவேயில்லை. எழுந்துநின்ற அவன், "ஒரு பிரிட்டிஸ் சீருடையும், அடையாள ஆவணங்களும், ஒரு சாரதியும் காலையில் எனக்கு வேண்டும். மாண்ட்றியா நீங்கள் ஒரு படகைத் தேடத் தொடங்குங்கள். 100–200 தொன்களுக்கிடையில் ஏதாவதாக இருக்கட்டும். டேவிட் எங்களுக்கு ஒரு திறமையான போலி ஆவணங்கள் தயாரிப்போம்.

வளாகத்தில் சிறுவர்கள் பகுதியில் ஒரு சிறுவன் இருக்கிறான். நல்ல கலைஞன். ஆனால் வேலைசெய்ய மறுக்கிறான். எஞ்சியோர் அவ்வளவு திறமைசாலிகளல்ல."

"நான் நாளை கராலொலொஸ் போய் அவனுடன் கதைக்கிறேன். நாளை எப்படியும் முகாமைப்பார்க்க வேண்டும்."

மாண்ட்றியா புளகாங்கிதமடைந்தான். எப்படியான ஒரு செயல் வீரன் இந்த அரி பென் கானான். ஒரு கப்பலைக் கண்டுபிடி! ஒரு போலி ஆவணத் தயாரிப்பாளனைக் கண்டுபிடி!......... எனக்கு ஒரு சீருடையும், சாரதியையும் கண்டுபிடி!........ பால்மாக்கும், மொசாட்டும் சைப்பிரசுக்கு வந்ததிலிருந்து வாழ்க்கை மிக மகிழ்வூட்டுவதாக இருக்கிறது. மண்ட்றியாவும் பிரிட்டிசாருடனான இந்தப் பூனை – எலி விளையாட்டில் ஒரு அங்கமாக இருப்பது பற்றி, மகிழ்ச்சியடைந்தான். எழுந்து நின்று அரிபென் கானானின் கையை அழுத்தியபடி சொன்னான். "சைப்பிரசுக்காரர்களான நாங்கள், உங்களுடனேயே இருக்கிறோம்."

பென் கானான் மாண்ட்றியாவை எரிச்சலோடு பார்த்தபடி, "மிஸ்டர் மாண்ட்றியா உங்கள் நேரத்திற்கும், முயற்சிக்குமாக உங்களுக்கு நன்றாக வேதனமளிக்கப்படுகிறது."

ஒரு இறுக்கமான மௌனம் அறையில் படிந்தது. மாண்ட்றியா வெளிறிப்போனான். "நான்......... நான்........ அதாவது இந்த மண்ட்றியா, காசுக்காக இந்தக் காரியத்தைச் செய்வேன் என்று நம்புகிறீர்களா?, ஐயா! பத்து வருடச் சிறைத் தண்டனையையும், வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் அபாயத்தையும் பணத்துக்காக எதிர்கொள்வேனென்று நினைக்கிறீர்களா? பால்மாக்கிலுள்ள உங்களோடு வேலைசெய்யத் தொடங்கியதிலிருந்து எனக்கு ஐயாயிரம் பவுண்கள் வரையில் நட்டமாகிவிட்டது."

"நீ மாண்டறியாவிடம் மன்னிப்புக்

**லியோன் யூறிஸ்**

கோரவேண்டுமென நான் நினைக்கிறேன்." டேவிட் விரைவாகத் தலையிட்டான். "அவரும் அவருடைய ரக்சி சாரதிகளும், துறைமுக வேலையாட்களும் எல்லாவிதமாக அபாயங்களையும். எதிர்கொள்கிறார்கள். கிரேக்க மக்களின் உதவியின்றி எமது வேலையைச் செய்து முடிக்க முடியாதிருக்கும்.......

மாண்ட்றியா கதிரையொன்றில் வேதனையுடன் சாய்ந்துகொண்டான். "ஆம் மிஸ்டர் பென் கானான். நாங்கள் உங்களைக் கண்டு வியப்புறுகிறோம், நீங்கள் பலஸ்தீனத்திலிருந்து பிரிட்டிஸ்காரரை இப்போ விரட்ட முடியுமானால், சைப்பிரசில் என்றைக்காவது ஒருநாள், எங்களாலும் அதைச் செய்ய முடியுமென்று நினைக்கிறோம்."

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் மிஸ்டர் மாண்ட்றியா. நான் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன் போல் இருக்கிறது" மேலோட்டமாகச் சொற்களை உச்சரித்தான்.

சைரன்களின் வீரிட்ட ஓசை, அறையில் சம்பாசணைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மாண்ட்றியா மாடியிலிருந்த. பிரெஞ்சுக் கதவை (ஒருவகை மடிப்புக் கதவு) திறந்து வெளியே டேவிட்டோடு சென்றான். அரி அவர்களுக்குப் பின்னால் நின்றான்.

> பலஸ்தீனத்துக்கான யூதக் குடியேற்றத்தை முற்றாகவே தவிர்த்தல், அல்லது முடிந்தவரை கட்டுப்படுத்தல் என்பதே பல வருடங்களாகப் பிரிட்டனின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கையை அமுல்படுத்த அவர்கள் றோயல் கடற்படையை (Royal Navy - றோயல் நேவி என்பது பிரிட்டிஸ் கடற்படையையே மட்டும் குறிக்கும்)ப் பயன்படுத்தினார்கள். மொசாட் அலியாபெற் என்பது, மற்றைய யூதர்களைப் பலஸ்தீனத்துக்கு இரகசியமாகக் கொண்டு செல்வதற்கு உதவுவதைக் கடமையாகக் கொண்டிருந்த பலஸ்தீனிய யூதர்களின் ஒரு அமைப்பாகும்.

**தொடரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகள் மகளிர் படையணியினரின்

# சலனப்படங்கள் சொல்லும் செய்திகள்

தமிழீழத்தின் குறும்பட வரலாற்றில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி இதுவரையில் ஐந்து குறும்படங்களை வெளியிட்டுள்ளது. இக் குறும்படங்களின் மூலம் எமது மண்ணின் விடுதலைப் போராட்டத்தையும், சமூகப் பிரச்சினைகளையும், பெண்ணொடுக்கு முறையையும் எதிர்காலச் சந்ததியினருக்கும், வெளியுலகுக்கும் வெளிப்படுத்துவதோடு, சம்பவங்கள் ஆவணங்களாக்கப்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டே குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறும்பட வரலாற்றில் பெண் போராளிகள் கால் பதித்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான நிலையில் இவ் விமர்சனத்தை எழுதுகிறோம்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது குறும்படம் 'இனி.......' இப்படம் 1994ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ஒளிவீச்சில் வெளிவந்துள்ளது. இது நிதர்சனம் மகளிர் பிரிவின் தயாரிப்பில் அமலா, கலைமணி ஆகியோரின் நெறியாள்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவச் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு விடுதலையாகிவரும் பெண், தன் கணவரால் கைவிடப்படும் கதை. இதில் கதாநாயகியும் பிள்ளைகளும் கப்பலிலிருந்து இறங்கும்போது, மக்கள் துறைமுகத்தினுள் நிற்பது தெரிகிறது. ஆனால், பெண்ணும் பிள்ளைகளும் துறைமுகத் தளத்தில் நடந்து வரும்போது, பின்னணி மக்கள் யாருமற்று வெறுமையாகத் தெரிகிறது. இதை நெறிப்படுத்தியவர் சரியான முறையில் கவனிக்கவில்லை. இதேநேரம் துறைமுகத்தினுள் இருந்து இவர்களுடன் சேர்ந்து வரும் ஒரு வயோதிபப் பெண் திடீரென காணாமல் போகிறார். இவர் ஏன் காட்சியில் காட்டப்பட்டார் என்பதும், பின்னர் எதற்காகக் காட்சியிலிருந்து நகர்த்தப்பட்டார் என்பதும் புரியாமலே உள்ளது.

இதில் கதாநாயகி நடந்து செல்லும்போது பழைய நினைவுகளைக் காட்டும் யுக்தி நன்றாக அமைந்துள்ளது. மீனவக் குடும்பங்களுக்கேயுரிய ஏக்கமான சூழலிலும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்த குடும்பம் என்பது இயல்பாகவே காட்டப்படுகிறது.

இப்படத்தின் உச்சக்கட்டம், கணவனும் மனைவியும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சந்திப்பது. அதிலும், எந்த விசாரணையுமின்றி தன்னை நியாயப்படுத்துவதற்காக "ஏன் இஞ்ச வந்தனி? எதுக்கு வந்தனீங்கள்? ரண்டு வருசமா அவனோட இருந்திட்டு" என்று குற்றம் சாட்டுவது சமூகத்தின் ஆணாதிக்கத் தன்மையை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

இப்படத்தின் முடிவில் கணவரால் நிராகரிக்கப்பட்ட பெண்ணினதும், குழந்தைகளினதும் வாழ்க்கை கேள்விக்குறியாகவே முடிந்துள்ளது. இதில் மறு திருமணம் செய்து கொண்ட பெண்ணின் வாழ்க்கையுமே கேள்விக்குறிதான் என்பதைச் சூட்சுமமாகக் காட்டியுள்ளார்கள்.

லெப். கேணல் நவம் அறிவுக் கூடத்தின் சலன உருவாக்கப் பிரிவுப் பெண் போராளிகளின் முதலாவது தயாரிப்பு 'விடிவு.' 1994ஆம் ஆண்டு அக்ரோபர் மாத ஒளிவீச்சில் இது பதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ வன்முறைகளால் பெற்றோரை இழந்து வீதியில் அலைந்த சிறுவன் அறிவுச்சோலைக்கு அனுப்பப்படுகின்றான்.

பசுமையான ஒரு மரத்தைக் காண்பிப்பதோடு, இந்தப் படம் ஆரம்பமாகின்றது. இந்தப் பசுமையான மரத்துக்கும் கதைக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

"மாறிவரும் உலகில்......." என்ற பாடல் கருத்துச் செறிவான பாடல். குரலும் நன்றாக அமைந்துள்ளது. ஆனால், பாடலின் வசன உச்சரிப்புக்கள் தெளிவாக இல்லை.

இதில் சிறப்பான காட்சியமைப்பு என்னவென்றால், நீண்ட வீதிகளில் சிறுவன் தன்னந்தனியாக அலைந்து திரிகின்றான். அவன் நேர்மையான வழியில் செல்வதைத் தனது பசிக்கு வாயால் கேட்டு, வேலை செய்துகொடுத்துவிட்டுச் சாப்பிடும் காட்சிமூலம் காட்டப்படுகின்றது.

இராணுவச் சுற்றிவளைப்பின் போது, தாய் மகனை மட்டும் ஓடும்படி அனுப்புகின்றாள். வழமையாகக் கணவன்மாரைத்தான் பெண்கள் அனுப்புவது வழக்கம். இங்கே கணவரைவிட்டு ஏன் மகனை மட்டும் அனுப்புகின்றாள் என்பது விளங்கவில்லை.

இறுதியாக "விடிவின் பாதை திறந்தது..........." என்ற பாடல் கருத்துள்ளதாகவும் குரல் இனிமையாகவும் வசனங்கள் விளங்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

'வெள்ளைத்துணி', விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் முதலாவது தயாரிப்பாகும். இது அமலாவின் படப்பிடிப்பில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாத ஒளிவீச்சில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது இனவாத அரசின் அரக்கத்தனமான குண்டுத் தாக்குதலால் தமிழ் ஏழைச் சிறுமி பாதிக்கப்படும் கதை.

இதில் தாயும் மகளும் மா இடித்து அரிக்கின்றனர். வீட்டுக்காரப் பெண் அருகில் கதிரையில் இருக்கின்றார். அவரின் மகள் வந்து அவரைக் கூட்டிச் சென்று தலை சீவும்போது, திரையில் ஒரே நேரத்தில் இரண்டு குடும்பங்களும் காட்டப்படுகின்றது. மா இடிப்பவர்களுக்குப் பக்கத்திலிருந்த கதிரை திடீரென்று காணாமல் போகிறது. இதை நெறியாளர் கவனிக்கவில்லையோ?

இதில் மனதை உருக்கும் காட்சி, ஆசிரியரிடம் சிறுமி அடிவாங்கும் காட்சியும், வெள்ளைத்துணியை வைத்துக்கொண்டு சிறுமி காணும் குட்டிக் கனவும்.

தமிழீழத்தில் அரக்கர்களின் குண்டு வீச்சால் சிறுவர்களின் சாவு நடப்பது இயல்பானது என்றாலும், இச்சிறுமியின் சாவு வித்தியாசமாகக் காட்டப்படுகின்றது. அவளின் ஆசைக்குப் புதுச்சட்டையைப் போடாமலேயே சாகும் அந்தக் காட்சியே மனதில் பதிகிறது.



இப்படத்தின் நெறியாள்கை, ஒலியமைப்பு, காட்சியமைப்பு எல்லாமே மிகவும் நன்றாக இருந்தது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவும், நிதர்சனம் மகளிர் பிரிவும் முல்லை மாவட்ட கலைபண்பாட்டுக் கழகமும் ஒருங்கிணைந்து

**- உலகமங்கை -**

படைத்த ஒரு படைப்பே எதிர்காலம் கனவல்ல. 1995ஆம் ஆண்டு மே மாத ஒளிவீச்சுக்காக, கௌசி நிர்வாக உதவி வழங்க வைகறையின் ஒளிப்பதிவில் உருவாக்கப்பட்டது. இது அடிக்கடி இராணுவ வன்செயல்களால் பாதிக்கப்படும் ஒதியமலைக் கிராமத்தின் உண்மைக்கதை.

இதில் இராணுவத்தினர் நிற்பதைக் கண்டுவிட்டு சைக்கிளைப் போட்டு விட்டு ஒருவர் ஓடுகிறார். இவருக்கு மிக அண்மையில் இராணுவம். இவர் சைக்கிளைப் போடும் சத்தமும், ஓடும்போது எழும் சத்தமும், படத்தில் கேட்கவில்லை. அவர் சைக்கிள் போடும்போதும் ஓடும்போதும் கேட்கும் சத்தத்தில் இராணுவம் திரும்பிப் பார்த்திருக்கும். ஆனால் அந்தக் காட்சி அடிப்படையாக அமையவில்லை.

அடுத்தது அலுவலகக் காட்சி. அது தொடர்ந்து நடக்கும் காட்சி போலவே காட்டப்படுகின்றது. பழைய நினைவுகள் என்பது தெளிவாக இல்லை.

இதில் மனதை உறையவைக்கும் காட்சி, ஒவ்வொரு சிறுவரும் தமக்கு அப்பா இல்லை என்று கூறுவது. ஒதியமலையில் மட்டுமன்றி இன்று தமிழீழத்தில் பெரும்பாலான சிறுவர்களுக்கு இதே நிலைதான்.

வயலில் கும்பம் வைத்து பூசை செய்து அரிவிவெட்டை ஆரம்பிக்கும் ஒரு சின்னக்காட்சி, ஒதியமலை ஒரு பாரம்பரிய விவசாயபூமி என்பதை மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

கடைசியாக, சரிந்திருக்கும் பெயர்ப்பலகையை ஆசிரியர் நிமிர்த்துவது. இந்தக் காட்சியமைப்பு மிகவும் நன்றாக அமைந்துள்ளது. சரிந்திருக்கும் பெயர்ப்பலகையை நிமிர்த்தும் வதன்மூலம் ஆசிரியரின் மனமாற்றம் காட்டப்படுகின்றது. ஆனால் அவர் கடிதத்தைக் கிழிப்பது ஒரு தேவையற்ற மேலதிகமாகத் தோன்றுகின்றது.

சாரதாவின் நெறியாக்கத்தில், தமிழ்ச்செல்வி, மிருணா ஆகியோர் நிர்வாக உதவி வழங்க உருவானது விடியலைத் தேடி...... இது 1995ஆம் ஆண்டு யூலைமாத ஒளிவீச்சில் பதிவாகியுள்ளது. இந்திய அமைதிகாக்கும் படைகள் எமது மண்ணுக்கு வந்து சூறையாடிய காலத்தில், அவர்களின் வால்பிடிகளான தேசத்துரோகிகளால் அவஸ்தைப்பட்ட ஒரு பெண்ணின் உண்மைக் கதை.

இதில் கதாநாயகி தொடக்கத்திலிருந்து முடியும்வரை தீவிரப்போக்குள்ள பெண்ணாகவே எந்தவொரு சிக்கலும் இல்லாமல் நகர்த்தப்படுகின்றாள். எதிரிகள் பலம் கூடியவர்கள் என்று தெரிந்தும், அவர்கள் சைக்கிளைப் பிடித்து நிறுத்தும் அத்துமீறிய செயலை எதிர்க்கும் கதாநாயகியின் துணிவு எல்லாவற்றிலும் பார்க்கச் சிறப்பாக அமைந்துள்ளது.

இப்படத்தில் பல கதாபாத்திரங்கள் நடித்தாலும் கதாநாயகியின் தீவிரம் தான் எம்மைக் கவர்ந்தது. கடைசியில் அவள் திரும்பிப் பார்க்கும் பார்வையிலேயே அவளின் முடிவு தெளிவாகின்றது.

தேச விடுதலையுடன், பெண் விடுதலையையும் வென்றெடுப்பதே விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினரின் தலையாய கடமையாகும். ஆகவே அவர்கள் குறும்படங்கள் என்ற வடிவத்தை தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் ஊடகமாகப் பயன்படுத்த வேண்டும். நம் நாட்டின் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறும்படங்களாக்கி, ஏனைய பெண்களுக்கும் விழிப்புணர்வைக் கொண்டுவர வேண்டும். இந்த வகையில் இனி......., விடியலைத்தேடி போன்றவை வெற்றித் தயாரிப்புக்கள். இவை போன்ற படங்களை இவர்களிடமிருந்து நாம் மேலும் எதிர்பார்க்கின்றோம். ❋

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மியூரியல் வயலட் கட்சின்
# "விளக்கேந்திய பெருமாட்டி"



***மாவீரர்களைப் போல் எம் சமுதாயத்திற்காய் தனது இறுதிமூச்சுவரை பணியாற்றி, எம் மண்ணுக்கே உரமான மியூரியல் வயலட் கட்சின் அம்மையாரின் 3ஆம் மாத நினைவாக அவரின் நினைவுகள் இங்கே பகிரப்படுகின்றன.***

வேறொரு தேசத்தைத் தாய்நாடாகக் கொண்டு, வேறொரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, வேறொரு பண்பாட்டை வழக்கமாய்க்கொண்டு வேறொரு இனத்திற் பிறந்து வளர்ந்த அந்தப் பெருமாட்டி -

எமது மண்ணுக்கு வந்து, எமது மொழி பேசி, எமது இனத்தோடு வாழ்ந்து, எமது சமூகத்திற்காய்ப் பாடுபட்டு அரும்சேவையாற்றியவர்.
இடர்சூழ்ந்து தாயகம் துன்பப்படும்போது, இந்த மண்ணின் குழந்தைகள் பலர் விட்டு விலகிச் சென்றுகொண்டிருக்கையில் - எம் மண்ணுக்கு அப்பாற்பட்டவராயிருந்தும் - இங்கேயே வாழ்ந்து பெரும்தொண்டாற்றிய அந்த அம்மையார் -

எமது மாவீரர்களைப்போல, தமிழினம் கற்றுத் தெளிய வேண்டிய ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து தனது வாழ்க்கையினாலேயே எமக்குப் பாடம் புகட்டிச் சென்ற அபூர்வமானவர்.

அவர்தான் மியூரியல் வயலட் கட்சின் அம்மையார். பிரித்தானியாவின் 'ஒக்ஸ்போர்ட்" சர்வகலாசாலையின் 'முதுமாணி" (ஆ.யு.) பட்டதாரியான அன்னையை, 70 ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்தவத் திருச்சபை, ஆசிரியப் பணிக்காக எங்களிடம் அனுப்பி வைத்தது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிரியையாகவும், அதிபராகவும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் உப அதிபராகவும், உடுவில் பெண் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அதிபராகவும் அம்மையாரின் சேவை விரிந்தது. எம் மண்ணின் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்கும் மகத்தான பணி செய்த அந்தப் பெருந்தகையார் -

தனது 59ஆவது வயதில் ஆசிரியைப் பணியில் இருந்து ஓய்வுபெற்றுப் பிறந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்றபோதும், இங்கு சமூகப் பணியாற்றும் எண்ணங்கொண்டு அதே ஆண்டிலேயே எம் மண்ணுக்குத் திரும்பிவந்தார்.

கிளிநொச்சியிலுள்ள 'கருணா நிலையம்" அன்னையினது இலட்சிய வாழ்வின் வரலாற்றுச் சாட்சி: அவர் ஆற்றிய திருப்பணியின் நினைவுச்சின்னம். 41 ஆண்டுகளுக்கு முன்னர், காரிருள் கவிந்த கானகத்தின் நடுவில் ஒரு அரிக்கன் விளக்கோடு வந்து அந்தத் தாய் அத்திவாரமிட்டது 'கருணா நிலைய"த்தின் முதற் கட்டடத்திற்கு மட்டுமல்ல, ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கும், துணையற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கும் வாழ்வளிக்கும் தனது சேவைக்குத்தான். ஒவ்வொரு 'சீமெந்ற்" பையாக மிதி வண்டியிற் கட்டிக் கொண்டு வந்து, 'கருணா நிலைய"த்தை இந்த அளவுக்குக் கட்டியெழுப்பிய அன்னையின் உழைப்பு, இந்த ஊரின் பல வயோதிபர்களிடம் இன்றும் பசுமையாய் நினைவில் உள்ளது. 'கருணா நிலைய"ப் பிள்ளைகளைக்கொண்டு உருவாக்குவித்த கைப்பணிப் பொருட்களை 40 மைல்களுக்கப்பால் இருந்து யாழ். நகருக்கு மிதிவண்டியில் எடுத்துச் சென்று விற்றதையும், சித்த சுவாதீனமற்ற சிறுமிகள் பலரைத் தானே கொழும்புக்குக் கூட்டிச்சென்று மருத்துவம் செய்வித்ததும், அவர்களைத் தொடர்ந்து வைத்துப் பராமரித்ததும், அன்னை ஆற்றிய இன்னும் எத்தனை எத்தனையோ அளப்பரிய காரியங்களும் 'கருணா நிலைய"த்தின் மூத்த உறுப்பினர்களிடம் நெஞ்சு கனக்கும் நினைவுகளாக நிறைந்துள்ளன.

அறுத்துறுத்து, தெளிவாக, எழுத்து மொழி நடையில் அம்மையார் தமிழ் பேசுவது அழகோ அழகு! "தமிழர்கள் தங்கள் மொழியையிட்டுப் பெருமைப்பட்டார்கள். அவர்களோடு வாழ்ந்ததால் நான் தமிழைக் கற்று, அதில் பேசவும் எழுதவும் ஆசைப்பட்டேன்"" என்று கூறுகின்ற அம்மையார், தனது ஆசிரியப் பணிக்கும், சமூகப் பணிக்கும் வசதியாக, இந்தியாவுக்கும் 'ஒக்ஸ்போட்" பல்கலைக்கழகத்திற்கும் சென்று தமிழ் மொழி படித்து வந்தார். மியூரியல் கட்சின் அம்மையார் அவர்கள், ஆங்கில மொழிமூலமான அன்றைய கற்பித்தல் முறைத் திட்டத்தில் ஒரு தமிழாசிரியையாகவும் பணியாற்றினார் என்பது, சொல்லிக்காட்டப்பட வேண்டிய ஒன்று. மனிதர்கள் எப்போதும் தம் தாய்மொழியிலேயே யோசிப்பார்கள், கனவு காணுவார்கள். ஆனால் அம்மையார் அவர்கள் தமிழ் மொழியிலேயே சிந்தித்தாராம், கனவுகளும் கண்டாராம் என்றால், எமது மொழியுடனும் எமது பண்பாட்டுடனும் அவர் இரண்டறக் கலந்து வாழ்ந்ததற்கு அது சான்றாகும்.

அன்னை வித்தியாசமானவர். தனது இறப்பின் பின் தனக்கு நினைவுச் சின்னங்கள் எதுவும் எழுப்பப்படக் கூடாது எனக் கட்டளை இட்டிருந்த அவர், தனது உடல் தகனம் செய்யப்பட வேண்டுமென விரும்பினார். 68 ஆண்டுகளாகத் தான் வாழ்ந்து பணிசெய்த மண்ணுடனேயே தான் சங்கமிக்க வேண்டுமென ஆசைப்பட்ட அவர், தகனம் செய்யப்பட்ட தன் சாம்பரை இரணைமடுக்குளத்தில் கலந்துவிட வேண்டுமென வேண்டியிருந்தார்.

கடந்த மார்ச் திங்கள் 4ஆம் நாள் - தனது 98வது வயதில் - எம்மைப் பிரிந்து சென்றுவிட்ட செல்வி மியூரியல் வயலட் கட்சின் அம்மையாரின் இறுதி விருப்பங்களை, 'கருணா நிலைய"த்தின் மூத்த உறுப்பினர்கள் கண்ணீருடன் நிறைவேற்றினார்கள்.

பிரித்தானியாவில், வசதியும் வாய்ப்பும் மிக்க ஒரு வளமான குடும்பத்தின் உறுப்பினராகப் பிறந்து, வனப்புமிக்க எதிர்காலத்திற்குரிய ஒரு பட்டதாரிப் பெண்மணியாகத் திகழ்ந்தபோதும் -

சொந்தங்களை விலக்கி, வாழ்வின் பற்றுதல்களைத் துறந்து, எம் மண்ணுக்கு வந்து இறக்கும் வரை, அழகாக அமைக்கப்பட்ட ஒரு ஓலைக் குடிசைக்குள் வாழ்ந்து, தனது இறுதி மூச்சுவரை எம் சமுதாயத்திற்காய் ஒப்பற்ற பணியாற்றி எம்மை விட்டுச் சென்ற அந்த அன்னையின் திருவடிகளின் மீது சிரம் தாழ்த்தி -

எமது தேசத்தின் சார்பிலும் எமது மக்களின் சார்பிலும் புலிகள் இயக்கம் தனது இறுதி வணக்கங்களைச் செலுத்துகின்றது.

*

## சிரித்திரன் சுந்தர்
# இலக்கியச் சொத்து



***தமிழீழத்தின் ஓர் உன்னதமான இலக்கியச் செம்மலான 'மாமனிதர்' உயர்திரு சிற்றம்பலம் சிவஞானசுந்தரம் அவர்களின் 3ஆம் மாத நினைவாக, இவ் நினைவுக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.***

கரவெட்டியின் புழுதித் தெருக்களிற் கும்மாளமடித்துத் திரிந்த அந்தத் துடியாட்டமான சிறுவன், பின்பொரு காலத்திற் பாரிசவாத நோயினால் வலது காலும், வலது கையும் இயக்கமற்றுப் போன பின்பும், மனம் சோர்ந்து போகாமல் இலட்சியப் பணிசெய்து, இறுதி மூச்சுவரை மண்ணுக்கு இலக்கியப் பணிசெய்த உன்னதமான தமிழன்.

கலைப் பற்றும், பண்பாட்டுப் பற்றும், தமிழ்ப் பற்றும், தமிழீழப் பற்றும் நிறைந்த முற்போக்கான சிந்தனைகளோடு ஒரு பரந்துபட்ட சமூகப் பார்வை கொண்ட ஒரு தமிழ்ப்பணியாளன்.

அவர்தான் சுந்தர் என எல்லாருக்கும் அறிமுகமாகியிருந்த, உயர்திரு சிற்றம்பலம் சிவஞானசுந்தரம் அவர்கள். தமிழ் இலக்கிய உலகில் என்றுமே மறக்கப்பட முடியாத ஒரு சஞ்சிகை வெளியீட்டாளராகவே திகழ்கின்றார். கடந்த முப்பது ஆண்டு காலமாக வெளிவந்து, சிரிப்போடு சிந்திக்கத் தூண்டும் சீரிய கருத்துக்களைச் சொல்லிய சிரித்திரன் திங்கள் இதழின் உயிராகவும் 'உரு"வாகவும் இயங்கியவர் அவர்.

ஐம்பதுகளில், தமிழினத்தின் எழுச்சிகரப் போர்க்குரலாக முழங்கிய சுதந்திரன் இதழில் கனமான அரசியற் கருத்தோவியங்களைத் தந்த சுந்தர் அவர்கள், பிற்காலத்தில் 'சவாரித்தம்பர்" என்ற சுவாரசியமான ஒரு பாத்திரப் படைப்பின்மூலம் தமிழ்ச் சமூகத்திற்குப் பரந்த அளவில் அறிமுகமானார். அவருடைய சவாரித்தம்பர் ஒரு வித்தியாசமான மனிதர். 'தினகரன்", 'வீரகேசரி" ஆகிய செய்தி ஏடுகளைக் களமாக்கி - மாறுபாடான கோணங்களில், மாறுபாடான கருத்துக்களைச் 'சவாரித்தம்பர்" வெளிப்படுத்துவார். பின்பு 'சிரித்திரன்" சஞ்சிகையிலும் சவாரித்தம்பரைப் போல பல குறியீட்டுப் பாத்திரங்களை உருவாக்கிய அண்ணல் அவர்கள், அவைகளின் மூலமாக, மனங்களிற் தைக்கும் பல உயரிய கருத்துக்களை அங்கதச் சுவையோடு எமக்குத் தந்தார்.

பள்ளிப்பராயத்தில், கட்டடக்கலைத் தொழில்நுட்பவியலில் அவரை நிபுணனாக்க ஆசைப்பட்ட தந்தை, உயர் கல்விக்காக அவரை இந்தியா அனுப்பியவேளை - கருத்தோவியக் கலைவடிவம் சுந்தர் அவர்களை ஆகர்சித்தது. கருத்தோவியங்கள், மக்களுக்கு விடயங்களை இலகுவாகப் புரிய வைக்கக்கூடிய சிறந்ததொரு ஊடகமாகக் கண்ட அவர் - கட்டடக்கலையைக் கைவிட்டு, பம்பாயில் ஒரு ஓவியக் கல்லூரியில் இணைந்தார். "ஓவியர்கள் எல்லாரும் கருத்துப்படக்காரர்களாக இருக்க முடியாது. ஆனால் ஒரு கருத்துப் படக்காரன் ஓவியனாக இருக்கத்தான் வேண்டும். ஒரு ஓவியன் கருத்துப்படக்காரனாகவும் இருப்பது, அவனுக்கு ஒரு சிறப்புத் தகுதி."" அத்தகைய தகுதியைப் பெற்றவராகச் சுந்தர் அவர்கள் விளங்கினார். கருத்துப்படங்களினூடாக அவர் காத்திரமான சமூக விமர்சனங்களைச் செய்தார். தூரிகைகளைப் பேரிகைகளாக்கி, சமூகத்தின் மனச்சாட்சியின் முன்னால் முழக்கினார். ஒரு தொழில்சார் ஓவியனாக அல்லாமல், சமூக மேம்பாட்டுப் பிரக்ஞை கொண்ட ஒரு புரட்சிகரமான கருத்தோவியக்காரனாகத் திகழ்ந்தார். இன்று - இலங்கைத் தமிழ்க் கலை இலக்கிய உலகில் தன்னிகரற்ற ஒரு கருத்தோவிய வரைஞனாக முத்திரையைப் பதித்துவிட்டு, எமைப் பிரிந்து அவர் சென்றுவிட்டார்.

இந்தியாவில் ஒரு ஓவிய மாணவனாகப் பயின்றுகொண்டிருந்த காலத்தில், அங்கு முனைப்புப் பெற்றிருந்த சுதந்திரப் போராட்டம்தான், தனக்குள்ளே விடுதலை வேட்கையைக் கிளரச்செய்தது எனச் சொல்கின்ற அவர், இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் 'சுதந்திரன்" இதழில் வரைந்த சிங்கள இனவாத அடக்குமுறைக்கு எதிரான அரசியற் கருத்தோவியங்கள், அவரது சுதந்திர உணர்வின் வெளிப்பாடுகளேயாகும். பின்பொரு காலத்தில் - 20 ஆண்டுகளாக அவர் இடையறாது வெளியிட்டு வந்த 'சிரித்திரன்" சஞ்சிகைக்கு இந்தியப் படையின் ஆக்கிரமிப்பாற் தடங்கல் ஏற்பட்டு, இந்தியப் படையிடம் அனுமதி பெற்றே வெளியிட முடியும் எனச் சட்டம் பிறந்தபோது - "என் மண்ணிலே சஞ்சிகை வெளியிட அந்நியப் படையிடம் அனுமதி பெறுவதா?"" எனச் சினந்து, இந்தியப் படை வெளியேறும்வரை, மனம் கனத்த துயரோடு 'சிரித்திரன்" வெளிவருவதை நிறுத்தி வைக்கும் அளவுக்கு, இனமான உணர்வுமிக்க தேசியப் பற்றாளராக வாழ்ந்தவர் அவர்.

தனது சிரித்திரன் சித்திரக் கொத்து என்ற நூலுக்காக சிறிலங்கா அரசினால் வழங்கப்பட்ட 'சாகித்திய மண்டலப் பரிசை"ப் பெற மறுத்து, அதற்குரிய காசோலையையும் திருப்பி அனுப்பிய அந்தப் பெருந்தகையின் செயல், அவரது தேசபக்தியினது உச்ச உயர்வடிவத்தை எடுத்தியம்பிய ஒரு நிகழ்வாகும்.

இத்தகைய அவரது உன்னத தன்மைகள்தான், தமிழீழத் தேசியத் தலைவரின் கைகளினால், தேசத்தின் அதிசிறப்பு விருதான 'மாமனிதர்" என்ற மகுடத்தைப் பெறும் தகுதிமிகு பெருமைக்குரியவராக அவரை மகிமைப்படுத்தியது.

தனது அறிவையும் ஆற்றலையும் தனது தாயக மண்ணுக்கே உரமிட்டு, எம் மண்ணின் விடிவிற்காகவும் எமது சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் இறுதிவரை உழைத்து, அதில் எத்தகைய இடர் எதிர்ப்படும்போதிலும் சந்திக்கத் துணிந்து ஒப்பற்ற செயலாற்றிய அந்தச் செம்மல், மார்ச் திங்கள் 3ஆம் நாளன்று எமைப் பிரிந்து சென்றுவிட்டார்.

அன்னாரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்குத் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்ற புலிகள் இயக்கம், 'சிரித்திரன் சுந்தர்" அவர்களின் நினைவுகளைச் சுமந்து அவருக்கு இறுதி வணக்கத்தினைச் செலுத்துகின்றது!

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உலக அரங்கு

## மத்திய கிழக்கு

# சமாதானத்துக்கு சாவு மணியா?

ஒஸ்லோவில் ஆரம்பித்து, வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்ட மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள், ஜெருசலமில் தடைப்பட்டு நிற்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த மே மாதம் 29ம் திகதி இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், பழைமைவாத வலது சாரிக் கொள்கையுடைய 'லிக்குட்' கட்சி மயிரிழையில் வெற்றியீட்டியுள்ளது. லிக்குட் கட்சியின் தலைவர் பென்ஜமின் நெட்டன்யாகு, 29,507 வாக்குகள் வித்தியாசத்தில் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை, யாசிர் அரபாத் உட்படப் பல அரபு நாட்டுத் தலைவர்கள் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

> "உண்மையான சமாதானத்துக்குப் பலம், பாதுகாப்பு என்பன அடிப்படையாக அமைகின்றன""

காரணம், தேர்தல் பிரச்சாரத்தின்போது பாலஸ்தீனியர்கள், யூதக் குடியேற்றங்கள், ஜெருசலம் நகர், அண்டையிலுள்ள அரபு நாடுகள் பற்றி நெட்டன்யாகு கூறிய தீவிரக் கருத்துக்களாகும்.

தொழிற் கட்சியைச் சேர்ந்த சீமோன் பெரசைவிட, நெட்டன்யாகு 4 வீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தாலும் எதிர்வரும் 4 வருடங்களில் மத்திய கிழக்கின்



புதிய பிரதமர் பென்ஜமின் நெட்டன்யாகு

அரசியல், பண்பாட்டு மற்றும் பொருளாதாரத் தன்மைகளை மாற்றக்கூடிய வல்லமையுடன் இவர் இருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

நெட்டன்யாகுவின் வெற்றியானது, பாலஸ்தீனியரையும் அரபாத்தையும் மட்டுமல்ல, இச்சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னின்று உழைத்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனையும் பாதித்துள்ளது.

இஸ்ரேலியப் பாலஸ்தீனிய சமாதானத்துக்கு முன்னின்று உழைத்த சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் யிட்சாக் ராபின், வலதுசாரி தீவிரவாதி ஒருவனால் கடந்த நவம்பரில் கொலை செய்யப்பட்டிருந்தாலும், அவருக்கான அனுதாப அலை தொழிற் கட்சிக்கு வெற்றியை ஈட்டித்தரவில்லை. உண்மையில் இவ் அனுதாப அலையை, பெரஸ் தனக்குச் சாதகமாகப் பாவிக்கத் தவறிவிட்டார் என ராபினின் மனைவி குற்றம் சாட்டுகிறார்.

அதேவேளை, இஸ்ரேலியரின் ஆதரவை ஈர்ப்பதற்காகச் சைமன் பெரஸ் அண்மையில் 17 நாட்களாக லெபனான் மீது நடாத்திய பீரங்கித் தாக்குதல்கள் 200 குடிமக்களின் உயிரைப் பலி எடுத்ததே தவிர, யூதர்களின் வாக்குகளைப் பெற்றுத்தரவில்லை.

மேலும், பாலஸ்தீனிய தற்கொலைப் படையினரின் வெடிகுண்டுத் தாக்குதல்கள் அமெரிக்கப் பிரச்சாரக் கம்பனிகளின் துணையுடன் யூத மக்களுக்கு மீண்டும், மீண்டும் லிக்குட் கட்சியினரால் காண்பிக்கப்பட்டபோதும் இவற்றைத் தொழிற் கட்சியினர் லாவகமாகக் கையாளவோ அல்லது எதிர்கொள்ளவோ தவறிவிட்டனர்.

இஸ்ரேலியருக்குத் தேவையான பாதுகாப்பையும் சமாதானத்தையும் பெற்றுத் தருவதாக பெரஸ், நெட்டன்யாகு இருவருமே கூறினாலும், இஸ்ரேலியரின் அடிமனதில் இருந்த பயத்தைத் தூண்டிவிட்டதன்மூலம், நெட்டன்யாகு தனக்குத் தேவையான ஆதரவைத் தேடிக்கொண்டார். வெளித் தோற்றத்துக்கு ஒஸ்லோவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவைத் தெரிவித்துக்கொண்டாலும், அந்தச் சமாதானம் இஸ்ரேலியரின் நிபந்தனைப்படி அமுல்படுத்தப்பட வேண்டும் எனும் கருத்தை வாக்காளர் மனதில் பதிய வைத்ததன்மூலம், தன்னை அவர் நிலைப்படுத்திக் கொண்டார்.

வேறுவார்த்தைகளில் கூறினால், பாலஸ்தீனியருடன் ஒஸ்லோ ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்வேன் எனக் கூறினாலும், மேற்குக் கரை மற்றும் காசாப் பகுதிகளில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க, தனது படையினருக்குப் பூரண சுதந்திரம் அளிப்பேன் எனக் கூறினார். ஆனால், உண்மையில் தற்போதைய ஒப்பந்தத்தின்படி அரபாத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் இஸ்ரேலியப் படைகள் உட்புகக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

ஜெருசலத்தின் எதிர்காலம் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தப்படல்வேண்டும் என ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தாலும், பாலஸ்தீனியருடன் இது பற்றித் தான் உரையாடப் போவதில்லை என நெட்டன்யாகு கூறியுள்ளார்.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின்படி, 5 வருட நிலை மாறு காலகட்டத்தில் சுயாட்சி விஸ்தரிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதுள்ள சுயாட்சி மட்டத்திலிருந்து மேலதிக மாற்றங்கள் ஏற்படக்கூடாது என்பதே நெட்டன்யாகுவின் நிலைப்பாடாகும்.

அதீத தன்னம்பிக்கையுள்ள ஒருவனால்தான், லிக்குட் கட்சி போன்றதொரு அமைப்புள் குறுகிய காலத்துள் தலைமைப் பதவிக்கு வரமுடியும். இற்றைவரை 60 வயதுக்கு மேற்பட்டவர்களே இத் தலைமைப் பதவியில் அமர்ந்திருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. நெட்டன்யாகுவோ தனது 46வது வயதில் இப்பதவியைத் தம் வசமாக்கியுள்ளார். எனவே தனது இலட்சியத்தை, கொள்கைத் திட்டத்தைத் திட்டமிட்ட முறையில் முன்னெடுத்துச் செல்லப் போதிய அவகாசம் அவருக்கிருக்கிறது.

பென்ஜமின் நெட்டன்யாகுவின் பேரனார், 1920ல் லித்துவானியாவிலிருந்து பாலஸ்தீனியத்துக்குக் குடி பெயர்ந்திருந்தார். நெட்டன்யாகுவின் தாயார் சட்டப் படிப்பு படித்தவர். தகப்பனார் ஒரு வரலாற்றாசிரியர் என்பதுடன், வலதுசாரிப் போக்குடையவராகவும் விளங்கினார். சிறு பராயத்திலிருந்தே "பீபி" என அழைக்கப்பட்ட இவர், தகப்பனாரின் அரசியல் கருத்து ஆளுமைக்குட்பட்டிருந்தார் எனக் கூறலாம்.

நெட்டன்யாகு 14 வயதாக இருக்கும்போது, அவரது குடும்பம் அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா மாநிலத்துக்குக் குடி பெயர்ந்தது. இவரது தகப்பனார் அங்குள்ள கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பிலடெல்பியா புறநகர்ப் பகுதியில் உள்ள மேல் தரப் பாடசாலையில் கல்வியை முடித்துக்கொண்ட நெட்டன்யாகு, இஸ்ரேலில் சேவை செய்யவென நாடு திரும்பினார்.

இஸ்ரேலிய விசேட படையணியில் இணைந்த இவர், 1972ல் கடத்தப்பட்டு தெல் அவிவ் விமானத் தளத்தில் தரித்துநின்ற விமானத்தில் இருந்த பயணிகளை வெற்றிகரமாக விடுவிக்க நடாத்தப்பட்ட கமாண்டோ தாக்குதலில் பங்கு பற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் இடம் பெற்றபோது இவருக்கு 22 வயதாகவிருந்தது.

இவரைப்போலவே இவரது தம்பி ஜொனாதனும் இதே படையணியில் இணைந்திருந்தார். இஸ்ரேலியப் பயணிகளுடன் கடத்தப்பட்டு, உகண்டாவின் 'என்டபே' விமான நிலையத்தில் தரித்து நின்ற விமானத்தை மீட்கவெனச் சென்ற கொமாண்டோப் படையணியில் இவரும் பங்கு பற்றினார். எனினும் 1976ல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜொனாதன் கொல்லப்பட்டார்.

M.I.T. இல் கட்டிடக்கலையிலும் பின்பு வர்த்தக நிர்வாகத்திலும் பட்டங்கள் பெற்று, பின்பு

சாள்ஸ் தேவசகாயம்

பொஸ்டன் நகரில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நெட்டன்யாகு, தனது தம்பியின் இறப்பையடுத்து 1978ல் மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்பி வந்தார்.

வாஷிங்டனில் உள்ள இஸ்ரேலியத் தூதுவருக்கு உதவியாளராக 1982ல் பணிபுரியத் தொடங்கிய இவர், 1984–88 காலப் பகுதியில் ஐ.நா. சபைக்கான இஸ்ரேலியத் தூதுவராகவும் கடமையாற்றினார்.

1988–1992 காலப் பகுதியில் பிரதியமைச்சராகக் கடமையாற்றிய இவர், 1992ல் தோல்வியைத் தழுவிய தனது லிக்குட் கட்சியைக் கட்டியெழுப்புவதில் பல வழிகளிலும் உதவியாகவிருந்தார்.

தனது மனைவிக்கு விசுவாசமாக இருக்கவில்லை என நெட்டன்யாகு பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருந்தபோதும், அவருக்கிருந்த செல்வாக்கு சரிந்துவிடவில்லை. அமெரிக்கப் படிப்பு, ஆங்கில அறிவு, சிறந்த நாவன்மை, தான் கொண்ட இலட்சியத்தை அரசியல் சாணக்கியத்துடன் கையாண்ட விதம் போன்றனவற்றால் இளம் வயதில் இஸ்ரேலியப் பிரதமராகும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய பிறகு, தனது லிக்குட் கட்சி ஆதரவாளருக்கு ஆற்றிய முதலாவது உரையில்: "உள்நாட்டில் உள்ள வேறுபாடுகளைக் களையும் அதேவேளை, சமாதான முயற்சிகளைத் தொடரும் வண்ணம் அயலில் உள்ள அரபு நாடுகளையும் இஸ்ரேல் தொடர்ந்து அணுகவுள்ளது" என நெட்டன்யாகு தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் உரையாற்றுகையில், "உண்மையான சமாதானத்துக்குப் பலம், பாதுகாப்பு என்பன அடிப்படையாக அமைகின்றன" எனவும் கூறியுள்ளார். ஆனால், பாலஸ்தீனியரும் தமக்கும் இதே நிலைப்பாட்டைத்தான் விரும்புவர்.

சிறுபான்மையினர் நலன் பற்றி, ஆட்சியிலிருக்கும் கட்சி ஒத்துக்கொண்டதை எதிர்காலத்தில் ஆட்சியேறும் கட்சியும் ஒத்துக்கொள்ளும் அல்லது கடைப்பிடிக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பதை, இஸ்ரேலின் தற்போதைய அரசியல் நிலை தெளிவாகப் புடம்போட்டுக் காட்டுகிறது.

"இஸ்ரேலியர் கேட்ட தெல்லாவற்றுக்கும் நீர் ஒத்துக் கொண்டீர். ஆனால் இஸ்ரேலியர் சமாதானத்துக்கெதிராக வாக்களித்துள்ளார்களே" என அரபாத்தை நோக்கிக் கேள்விகள் எழுப்பப்படலாம். இஸ்ரேலியரின் தன்மை அறிந்து தான் நாம் வன்முறையில் ஈடுபட்டோம் என ஹமாஸ் குழுவினரும் சுட்டிக்காட்டலாம். நெட்டன்யாகு தொடர்ந்து இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தால் 1988ல் ஆரம்பமான 'இன்டிபாடா' எனும் வன்முறைக் கிளர்ச்சிகள் மீண்டும் ஆரம்பமாகலாம். பயங்கரவாதத்தை அடக்குகிறோம் எனும் சாட்டில் பாலஸ்தீனிய பகுதிகளுக்கு இஸ்ரேலிய இராணுவம் தான்தோன்றித்தனமாக உள் நுழையலாம்.

> கடந்த மே மாதம் 29ம் திகதி இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், பழைமைவாத வலதுசாரிக் கொள்கையுடைய 'லிக்குட்" கட்சி மயிரிழையில் வெற்றியீட்டியுள்ளது. லிக்குட் கட்சியின் தலைவர் பென்ஜமின் நெட்டன்யாகு, 29,507 வாக்குகள் வித்தியாசத்தில் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை, யாசிர் அரபாத் உட்படப் பல அரபு நாட்டுத் தலைவர்கள் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

தொடர்ச்சி 8 ம் பக்கம்....

# சிங்கள இனவாதத்திற்கு ஒரு ...

ஆண்டிற்கும் இடையேயான கால கட்டச் சம்பவங்கள் துலக்கமாய் எடுத்துக்காட்டின. எப்படி இருந்த போதிலும், சிங்களவருடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் வாழ்வதற்கான முயற்சிகளைத் தமிழர் தொடர்ந்தும் மேற்கொண்டனர்: ஆனால், சிங்கள

கதையும்மிக்க- மகாவம்சம் எனும் நூலை அடிப்படையாகக்கொண்டே, மேற்படி தவறும் குற்றமும் மிக்க கருத்துருவம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மகாவம்ச நூலின்படி, சிங்கத்திற்குக் கருத்தரித்த- சிங்கத்தின் வழிவந்தோரே சிங்களவர் என்றும்,

**பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கென புத்தபிரானால் இலங்கைத்தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற "தம்பதீப" கருத்தையும், இலங்கைத்தீவு சிங்களவருக்கே உரியது என்ற "சிங்கதீப" கருத்தையும் இணைத்து, சிங்கள-பௌத்தருக்கே இலங்கை சொந்தமானது என்ற பொய்யானதும் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாததும், காலத்திற்குச் சிறிது பொருந்தாததும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்ததுமான ஐதீகக் கருத்திற்குச் சிங்களத் தலைவர்கள் புத்துயிருட்டி, அதன் அடிப்படையில் தமிழரை ஒடுக்குகின்றனர்.**

ஆட்சியாளர் ஓரினத்தன்மை கொண்ட சிங்கள மேலாதிக்கத்தினைத் தொடர்ந்து வளர்ப்பதிலேயே அக்கறை செலுத்தினர்.

காலநேரம் தவறாது, தமிழரின் இரத்தத்தினாலும் கண்ணீராலும் சிங்கள-பௌத்தத்திற்கும் அபிசேகம் நிகழ்த்தப்படும் தீவாக இலங்கை உள்ளது. இப்படி துயரம் ஏன், எப்படி, இத்தீவைப் பீடித்தது?

"இலங்கை, சிங்கள-பௌத்தருக்கே சொந்தமான தீவு"

"தமிழர், இலங்கைத் தீவின் அந்நியர்"

"தமிழர், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த படையெடுப்பாளர்"

"தமிழர், சிங்கள பௌத்த நாகரீகத்தின் முதன்மையான எதிரிகள்"

இப்படியான கருத்துக்களே சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டு நீக்கமற வேரோடியுள்ளன.

சிங்கள-பௌத்த இன, மதவாதிகளும், அரசியல்வாதிகளும், அரச-மத நிறுவனங்களைச் சார்ந்து தமது நலன்களைத் தக்கவைத்துள்ள புத்திஜீவிகளும் இணைந்து, மேற்படி தவறான எண்ண ஓட்டங்களையும் கருத்துக்களையும் சாதாரண சிங்கள் மக்களின் நெஞ்சங்களில் விதைத்துள்ளனர். தமிழருக்குரிய உரிமைகளை ஏற்றுக்கொள்வதென்பது சிங்கள-பௌத்தத்திற்கு புதைகுழிதோண்டுவதாகவும், தமிழரை ஒடுக்குவதென்பதே சிங்கள-பௌத்தத்திற்கு ஆற்றும் பெரும் கைங்கரியமென்பதாகவும் சாதாரண சிங்கள மக்கள் கருதும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கென புத்தபிரானால் இலங்கைத்தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற 'தம்பதீப' கருத்தையும், இலங்கைத் தீவு சிங்களவருக்கே உரியது என்ற 'சிங்கதீப' கருத்தையும் இணைத்து, சிங்கள-பௌத்தருக்கே இலங்கை சொந்தமானது என்ற பொய்யானதும் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாததும், காலத்திற்குச் சிறிது பொருந்தாததும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்ததுமான ஐதீகக் கருத்திற்குச் சிங்களத் தலைவர்கள் புத்துயிருட்டி, அதன் அடிப்படையில் தமிழரை ஒடுக்குகின்றனர்.

சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறுவதாக நம்பவைக்கப்பட்டுள்ள- கற்பனை வளமும், கட்டுக்

அத்தகைய வழித்தோன்றலில் உருவாகி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய முதல் மனிதன் விஜயன் என்றும் இவனே இலங்கையின் முதல் மனிதன் என்றும், அப்போது இலங்கையில் 'இயக்கர்' வாழ்ந்து வந்ததாகவும் அந்த 'இயக்கரை' விஜயன் வெற்றிகொண்டு முதலாவது சிங்கள அரசை அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு நிர்மாணித்ததாகவும் கூறப்படுகின்றது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் விஜயன் அவனது எழுநூறு தோழர்கள் சகிதம், இலங்கை மண்ணில் முதல் முறையாகக் கால்வைத்த நேரத்தில் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்து கொண்டிருந்ததாகவும், அவ்வேளை புத்தபிரான், "இப்போது இலங்கையிற் கால் வைத்துக் கொண்டிருக்கும் விஜயனின் வழித்தோன்றல்களே பௌத்த தர்மத்தைப் பேணி வளர்க்கவும் நிலைநாட்டவும் போகின்றவர்" என்று கூறியதாகவும், அந்த வகையில், பௌத்த தர்மத்தைப்




பூமியில் நிலைநாட்ட புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'தம்மதீபமே' இலங்கைத் தீவு என்றும் மகாவம்சத்தில் எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய மகாவம்சக் கருத்துக்களைச் சிங்கள அரசு, இந்த 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிற்கூட, பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடப்புத்தகங்களில் எழுதியும் போதித்தும் வருகின்றது. இத்தகைய கட்டுக்கதையினூடாகவே, இலங்கைத் தீவு சிங்களவருக்கு

மட்டுமே சொந்தமானது என்ற கருத்து ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் கலை-இலக்கியங்களிலும் சமய, சமூக, அரசியற் பொதுக் கூட்டங்களிலும் ஏனைய பொது வைபவங்களிலும், பெரும்பாலான வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் மேற்கூறப்பட்ட கருத்துக்களே எடுத்துரைக்கப்படுகின்றன. இதனால், நல்லிதயங் கொண்ட சிங்களவர்கூட இலகுவாக மூளைச்சலவைக்குப் பலியாகிவிடுகின்றனர். வெறும் அரச சார்பு, சுயபதவி நோக்கங்களுக்கு அப்பால் மேற்படி சூழலில் மூளைச்சலவைக்குப் பலியான புத்திஜீவிகள் பலருண்டு. இந்த மூளைச் சலவை வியாதிக்கு அப்படியே பலியாகிவிடாத-விதிவிலக்கான 'சிங்களப் புத்திஜீவிகள் சிலர் இருக்கின்றனராயினும், அவர்களிடமும் சூழலின் மூளைச் சலவைத் தாக்கம் குறைந்தபட்சமாயினும் இருக்கவே செய்கின்றது. அதாவது, இத்தகையோர் தமிழருக்குப் பிரச்சினையுண்டு என்று கூறுவார்கள்: ஆனால், பிரச்சினைக்கான தீர்வில் வழுவழுத்து, இறுதியில் சிங்கள இனவாதத்தின் பக்கம் இழுபட்டு விடுகின்றனர்.

கி.மு 5ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனே இலங்கைத்தீவின் முதல் மனிதன் என்று கூறப்படுவதை ஆராய்வோம்...... இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் மனிதன் வாழ்ந்துள்ளமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. உதாரணமாக, 'பலாங்கொட மனிதன்' எனப்பெயரிடப்பட்டுள்ள எலும்புக்கூட்டினைக் கூறலாம்.

மேலும் இலங்கையின் தெற்கு, வடமத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைக்கொண்ட திசமாரகம, அனுராதபுரம், பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, திரியாய் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளின்படி, கி.மு 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற் பண்பாட்டை உடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இப்பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழ்ந்தனர். இது இவர்களுக்கே உரிய

சிறப்பான பண்பாடாகும். இது திராவிடப் பண்பாட்டின் ஒரு மக்கிய மூலக்கூறாகும். இப்பெருங் கற்பண்பாட்டு மக்களே இலங்கையின் தொல்குடியினர் என்ற கருத்தினை தெரணியகல, சுசந்த குணதிலக, சேனக பண்டார போன்ற சிங்கள ஆராட்சியாளர்களும் விமலா பேக்கின் போன்ற வெளிநாட்டு ஆய்வாளரும் தெரிவித்துள்ளனர்.

இவற்றின்மூலம் கி.மு 5ஆம் நூற்றாண்டில் குடியேறிய விஜயன் என்பவனே, இலங்கையின் முதல் மனிதன் என்ற கருத்து, அடியோடு கேலிக்கூத்தாகி விடுகின்றது. விஜயன் சிங்கத்தின் வாரிசு என்பது எப்படிக் கற்பனைக் கதையோ அப்படியே, விஜயனே இலங்கையின் முதல்மனிதன் என்பதும் கற்பனைக் கதையாகும். விஜயன் முதல் மனிதன் என்பதற்கு மட்டுமல்ல, அப்படி ஒரு மனிதனோ அன்றி மனிதக் குழுவோ இலங்கைக்கு வந்ததற்கும் எத்தகைய தொல் பொருட் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை. விஜயன் கட்டுக்கதை என்னும்போது, விஜயனைச் சின்னமாகக் கொண்ட "தம்மதீப" கருத்தும் கட்டுக்கதை என்பது புலனாகின்றது.

இந்த வகையில், இலங்கைத் தீவு சிங்கள-பௌத்தருக்கு மட்டுமே சொந்தமானது என்ற பிழையான-ஆதாரமற்ற-கட்டுக்கதையை முதலில் நிராகரிப்பதுடன், உண்மையான வரலாற்றைச் சற்று நோக்குதல் நலம். தமிழரா அன்றிச் சிங்களவரா இத் தீவிற்கு முதலில் வந்தவர் என்றோ, மூதாதையருக்குத்தான் பூமி சொந்தமானது என்றோ வாதங்களை முன்வைப்போமாயின், மனிதனுக்கு மூலமான குரங்கிற்குத்தான் பூமி சொந்தம் என்ற முடிவிற்குப் போக வேண்டிவரும். உண்மையான வரலாற்றைத்தேடி அறிவதென்பது, மனிதனின் சமூக வளர்ச்சி விதிகளைக் கண்டகொள்வதற்காகவே தவிர, வரட்டுப் பெருமைகளையும்-பிடிவாதங்களையும் மேற்கொள்வதற்காக அல்ல.

அடுத்த இதழில் முடிவுறும்

## வன்னியில் சிரமத்தின் மத்தியிலும் ஊக்கத்துடன் பொதுப்பணிகள்

வன்னிப் பிரதேசத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் ஊக்கமுடன் மாணவர்கள் கல்வி பயிலும் காட்சியினை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலர்கள் பார்வையிட்டனர். மாணவர்கள் மரநிழல்களின் கீழ் நிலத்தில் இருந்து படிப்பதைப் பார்த்த அதிகாரிகள், சிறிலங்கா அரசு தமிழ்ப் பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்க மறுப்பதே இதற்குக் காரணம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்த அகதிகளுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து, புதுவாழ்வுக்கு வழி செய்வதினாலேயே பள்ளிக்கூடங்களைத் திறந்து மாணவர்களுக்குக் கல்வி புகட்டக்கூடியதாக உள்ளதென்பதையும் அதிகாரிகளுக்கு மக்கள் விளக்கினர்.

### விவசாயிகளுக்கு முன்னுரிமை

தேசத்தின் முதுகெலும்பாக உள்ள விவசாயத்தைச் சிறந்த முறையில் செய்வதற்கு வன்னிப் பெருநிலப்பரப்பில் விவசாயிகளை ஒருங்கிணைப்பதற்காக பல விவசாயச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ் அடிப்படையில் விவசாயக் கல்விக்கு வன்னி நிலப்பரப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கால்நடை வளர்ப்பு, களைகளைக் கட்டுப்படுத்தல், சுற்றாடலுக்கு ஏற்ப பயிரிடுதல் போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 5500 மாணவர்கள் க.பொ.த தேர்வில் பங்கேற்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் கடந்தாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு 5500 மாணவ, மாணவியர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. சிறிலங்கா அரசு, கல்விக்கான அடிப்படை வசதிகளை வன்னிப் பிரதேசத்திற்கு மறுத்து வருகின்ற வேளையிலும், தமிழ் மாணவர்கள் கல்வியில் கொண்டுள்ள தளராத முயற்சி பாராட்டத்தக்கதே.

### அங்கயற்கண்ணி வீடமைப்புத் திட்டம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், கிளிநொச்சி அகதிகள் அபிவிருத்திச் சபையும் இணைந்து, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவின் அனுசரணையுடன் கட்டி எழுப்பியுள்ள புதிய வீடமைப்புத் திட்டத்திற்கு முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி பெயர் சூட்டப்பட்டு ஆனித் திங்கள் 7ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலை, மருத்துவ நிலையம், சந்தை, கிராம அபிவிருத்தி அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ் வீடமைப்புத் திட்டத் திறப்புவிழாவுக்குக் கிளிநொச்சி அகதிகள் அபிவிருத்தி சபை தலைவர் விநாயகமூர்த்தி தலைமை வகித்தார்.

### வன்னியில் பெண்களுக்கான நலன்புரி நிலையம்

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் குளத்தில் வறிய மற்றும் விதவைப் பெண்களுக்கான நலன்புரி நிலையமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இத்திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்களின் பாவனையில்லாமல் இருந்த நிலத்தில், 300 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, 75 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்ட நிலையில் மக்களிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. சுயசார்பு உற்பத்தித் திட்டங்களாக பால் உணவு தயாரிப்பு, தும்பு உற்பத்தி, தையல் போன்றவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

www.tamilarangam.net



சிவராமனுக்கு நினைவுச்சுமை நெஞ்சை அழுத்தியது. மனதுள் பொங்கியெழும் துயரங்கள், காட்டாற்று வெள்ளம் போல் கரையுடைத்து வரப் பலமுறை முயன்றதை, சிவராமன் அடக்கமுயன்றும் அவனின் சக்திக்கு மீறிக் கண்ணீர் வெள்ளம் பொலபொலத்ததும் உண்டு.

ஒன்றன்பின் ஒன்றாக வந்த அந்தத் துர்நிகழ்வுகளில் எதை முதன்மைப் படுத்துவது எதைப் பின் தள்ளுவது என்ற கணிப்பில் அவன் பலமுறை தோற்றுப் போய்விட்டான். அவற்றில் இறந்தகால நிகழ்வுச்சுமையைப் பின்னே தள்ளி, நிகழ்காலத் துயரை எண்ணி எண்ணி, மிக வேதனைப்பட்டு அவற்றை நீக்கப் பிரயத்தனப்பட்டான்.

எல்லாவற்றையும் மறந்து விட

## சிறுகதை

முயற்சித்தபோதும் சங்கிலித் தொடராய் அவை நினைவில் வந்து வாட்டி, வருத்தும் அந்த வேதனையில் இருந்து மீள வேண்டியவனாய் அவன் படும் அவலம்.

அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய சிவராமன் அன்றும் 'அதே' எதிர்பார்ப்போடுதான் வந்தான். ஆனால் இன்றும் அவன் அதிற் தோல்வியே கண்டான்.


சுரேன். அவன்தான்...... சிவராமனின் நான்கு பிள்ளைகளில் இளைய மகன். முன்பென்றால் என்ன சுறுசுறுப்பாய் முத்து முத்தான செல்ல வார்த்தைகள் உதிர்த்து........"அப்பா வந்திட்டார்" "அப்பா வந்திட்டார்" என்று ஓடிவந்து சைக்கிளை வாங்கி உருட்டிக் கொண்டுபோய் முற்றத்துத் தென்னை மரத்தில் சாத்திவிட்டு கொண்டுவந்த பையைத் துருவித் துருவிப் பார்த்து, வாங்கிவந்த சிற்றுண்டிகளை தனக்கே என்று அடம்பிடித்து.........

"சுரேன்.......எனக்கும் ரொபி தாடா......"

"ம்கூம்......அப்பா வாங்கித் தந்தது எல்லாம் எனக்குத்தான்"

"நல்ல பிள்ளையெல்லே....எனக்கு ஒண்டுதா......"

"தெரமாட்டன்......"



"தொட்டிப் பறிப்பம்....."

ஏனைய மூன்று மூத்த சகோதரங்களும் ஒருபக்கமாக.....சுரேன் தனியாக..... வாக்குவாதப்பட்டுப் பின் அவர்கள் துரத்த ஓடிவந்து அப்பாவின் கழுத்தைக் கட்டிப் பிடிக்க.......

"சுரேன் சும்மா இருங்கோ.....அப்பா வந்த களை இல்லை....உங்களுக்குச் சண்டை" – அம்மாவின் அதட்டல் –

அதையும் மீறி, சுரேன், அப்பாவின் கழுத்தைக் கட்டிப்பிடிக்க......மனைவி கொடுத்த தேநீரை ருசித்துப் பருகிச் சுரேனைச் சமாதானப்படுத்தி....... பகிர்ந்து ண்டு...... அந்த வாழ்வு, அந்த இன்பம் சிவராமனுக்கு கண்ணீர் வெள்ளம் மீண்டும் ஒருமுறை மடை திறந்தது.

வேலியோரம் சைக்கிளை நிறுத்திவிட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்து விட்டுக் குடிசைக்குள் குனிந்தான். முற்றிலும் மாறுபட்ட நிலையில் உள்ள சுரேனைக் கவனித்தபோது சிவராமனுக்குப் பெருமூச்சொன்று வந்து போனது. 7 வயதில் எவ்வித சுறுசுறுப்பும் அற்று இந்த உலகில் வாழும் நிலை மறந்து பறிகொடுத்ததைத் தேடும் ஏக்கநிலையில் அந்தப் பிஞ்சுப் பாலகன், மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த.... அந்த..... அந்தப் 'பிரமை'யில் இருந்து மீளாதவனாய் சுரேன் இன்னமும்......

விடிகாலைப் பொழுதில் நடந்த அந்த விமானக் குண்டுவீச்சில் வீடு கற்கு வியலாகத் தன் மனைவியைப் பறிகொடுத்த சிவராமனும், தாயைப் பறிகொடுத்த பிள்ளைகளும், துயரில் இருந்து மீளாது துடித்த வேளைதான், வலிகாமத்தில் இருந்து ஒட்டு மொத்த இடம்பெயர்வு ஏற்பட்டது. 'புள்ளடி இல்லாத வாக்களிப்பு மாதிரி' ஒட்டுமொத்த ஆதரவு காட்டி அனைவரும் வெளியேறினர். சிவராமனும் பிள்ளைகளும் இழந்தவற்றைவிட்டு, அவற்றை இழந்த மனச்சுமைகளோடு, இருந்த சிலவற்றையும் கொண்டு இடம்பெயர்ந்தனர். வன்னிமண் வரவேற்றது. காலஅசைவில் நடந்தவற்றை மறக்க முயன்றனர். ஆனாலும் நெஞ்சக் கூட்டுக்குள் ஆயுட்சிறைப்பட்ட அந்த நினைவுகள் மீள மீள அழுத்தின. சுரேனை மட்டும் முற்று முழுதாக தொற்றிக் கொண்டது அந்தத்துயர். அதிலிருந்து இன்னும் மீளாதவனாய் அவன்.

"சுரேன்" சிவராமன் ஆவல் ததும்ப அழைத்தான்.

"ம்......"

கண்ணைத் திறந்து விகாரப் பார்வை ஒன்றைச் சிந்தி விட்டு சுரேன் மௌன மானான்.

சிட்டாகப் பறந்து வந்த இரண்டு பெண் பிள்ளைகளும் அப்பாவைக்கண்டு ஆனந்தித்தன.

"வாணி சுரேன் என்னவாம்? எழும்பித்திரிஞ்சு விளையாடுறானோ?"

"ம்......இல்லையப்பா.....நீங்கள் போன உடன படுத்தவன் மத்தியானம் கொஞ்சம் சாப்பிட்டிட்டு, உதில இருந்து யோசிச்சுப்போட்டு பேந்து படுத்திட்டானப்பா......"

"விளையாடப் போகேல்லையே......"

"இல்லை"

வாழ்வில் இழக்கக் கூடாதவற்றை இழந்தபோதும், அவனும் பிள்ளைகளும் மெல்ல மெல்ல இயல்புக்கு திரும்பிய போதும், அந்தப் பிஞ்சுச் சுரேன் மட்டும் இன்னும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பவில்லை. சிவராமனும் எத்தனையோ முயற்சிகளில் ஈடுபட்டான். சுரேனை மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு மாற்ற எண்ணினான். விமானக் குண்டுவீச்சில் சிதைவுண்ட 'தாயின்' அந்தக் கோர உருவத்தையும், வீட்டின் எரிந்த அழிந்த கோலத்தையும் பார்த்தது முதல், இன்னும் அவன் அந்தப்பழைய சுரேனாக மாறவில்லை.

இழந்தது போக இருப்பதையாவது காப்பாற்றச் சிவராமன் பல முயற்சிகள் செய்தான். இடம்பெயர்ந்து வசிக்கும் இடத்தில் இருக்கும் பக்கத்து வீட்டுப் பாபுவையும், விஜயனையும், வினோத்தையும் எத்தனையோ நாட்கள் சுரேனோடு விளையாட அழைத்திருப்பான். அந்தச்




சிறுவர்களும், பலமுயற்சிகள் செய்தும் சுரேனின் மனம் எவற்றிலுமே ஒன்றவில்லை. நின்று நின்று யோசிப்பதும் சில வேளைகளில் மட்டும் இறந்துபோன அம்மாவைப்பற்றி அவர்களிடம் கேட்ப துவும், பின்னர் ஓடிப்போய்ப் படுப்பது வும்......

சிவராமனுக்குத் தலையைப் பிய்த்தது. இருந்தும் எப்படியும் அவனைப் பழைய நிலைக்குக் கொண்டுவரலாம் என்ற தன் முயற்சியிற் சிவராமன் தளரவில்லை.

அன்று அலுவலகத்துக்குப் போகும் போதே அவன் 'அதை' தீர்மானித்துவிட்டான். வாடைக்காற்றில் சிறுவர்கள் பட்டம் விட்டுக்கொண்டிருந்தனர். விதைக்காத வயல்வெளி வரம்புகளிலும், வீதிகளிலும் சிறிய, பெரிய பட்டங்களைச் சிறுவர்கள் ஏற்றி மகிழ்ந்தனர். பட்டம் என்றால் சுரேனுக்கு அலாதி ஆவல். யாழ்ப்பாண த்தில் சோளகக்காற்றில், தன்வீட்டின் அயலில் உள்ள மைதானத்தில் பட்டம் விட்டு சுரேன் மகிழ்ந்த நாட்களைச் சிவராமன் மனதுள் எண்ணிப்பார்த்தான். மிகுந்த 'நம்பிக்கை' அவன் மனதில் துளிர்த்தது.

நடுத்தர அளவான எட்டு மூலைப் பட்டமொன்றைக் கடையில் வாங்கி, அதனை ஏற்றுவதற்கு அளவான பெரிய பந்து நூலையும் வாங்கினான். பட்ட த்தோடும் நூலோடும் வீடு திரும்பும்போது அவன் நினைவு சுரேனையே வட்டமிட்டது. பட்டத்தைக் கண்டதும் சுரேன் ஓடிவரவேண்டும். அதைப்பறித்து அவன் ஏற்றவேண்டும். அந்தப் பிஞ்சு முகத்தில் மீண்டும் 'சிரிப்பு' ஒளிரவேண்டும்...... அந்த முகத்துச் சிரிப்பைப் பார்க்க வேண்டும்....... பலவாறாய் எண்ணியவனாய் சைக்கிளை வேகமாய் மிதித்தான்.

படலையைத் திறந்தபோது சுரேன் நிற்பதைக் கண்டான். சிவராமன் எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும், பட்டத்தைக் கண்ட சுரேனின் முகத்தில் சின்னமாற்றம் ஒன்று எழுந்ததைச் சிவராமன் அவதானித்தான். சிவராமனுக்குத் தன்திட்டத்தின் ஆரம்ப வெற்றி நம்பிக்கை அளித்தது.

தன் அசதியையும் பாராது உடனே, பட்டத்தை சுரேனுடன் ஏற்றி மகிழ முயற்சித்தான்.

"நல்ல பட்டமடா"

"ஐயோ....வடிவான பட்டமடா....."

"இது...... நைலோன் நூலே......"

"விசை (விண்) பூட்டுவீங்களே மாமா....."

பாபுவும், விஜயனும், வினோத்தும் சிவராமனை விடுத்துவிடுத்துக் கேட்டுச் சேர்ந்து அமளிப்பட்டனர். சுரேன் அவர்களோடு சேர்ந்து அமளிப்படவில்லை. ஆனால் அவன் அவ்விடத்தில் இருந்து விலகாது பட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றதானது சிவராமனுக்குத் தெம்பையூட்டியது.

பல சேலைத் துண்டுகளை இணைத்து வால் கட்டி, வண்ணக்கடதாசிகள் எடுத்துப் பட்டத்துக்கு ஒட்டி மேலும் வடிவாக்கி, இரண்டு கட்டைகள் வெட்டி அவற்றுக்கு துளையிட்டு, உரப்பையைப் பின்னி வந்த இழை ஒன்றை எடுத்து விசை (விண்) பூட்டி, சிறுபிள்ளைகள் போல் சிவராமன் எல்லாவற்றையும் செய்தான். அவற்றை ஆவலோடு பார்த்தபடி சுரேன் நின்றான்.

சிவராமனுக்கு தெம்பு வந்தது.

சிறுவர்கள் ஆனந்தப்பட்டனர்......

"மாமா..... இந்தப் பட்டம் எவ்வளவு உயரத்துக்குப் போகும்?"

பாபு கேட்டான்.

"டேய் மேகத்தில முட்டுமடா, பெரிய நூல்ப்பந்தல்லே....." விஜயன் சொன்னான்.

"போடா மேகத்தில முட்டினா எரிஞ்சு போமடா" மீண்டும் பாபு சொன்னான். பட்டத்துக்கு விசையைப் பூட்டியபடியே "பட்டம் சரியான உயரத்துக்குப் போகும், பிளேன் போற அளவு உயரத்துக்குப் போகும்" –சொன்னபடியே சிவராமன் சுரேனைப் பார்த்தான்.

சுரேனின் முகத்தில் மெல்லிய சிரிப்பு உதிர்ந்தது.

சிவராமன் பட்டத்தை ஏற்றி, சுரேனை மேலும் மகிழ்விக்கத் துடித்தான்.

பசைச் சட்டியைத் தூக்கி ஓரமாக வைத்துவிட்டு, முச்சையைச் சரிபார்த்து, வாங்கி வந்த பெரிய பந்து நூலை முடிச்சுப் போட்டு......

"அப்பா" – சுரேன் அழைத்தான்.

"பிளேன் போற உயரத்துக்கு போகுமே இந்தப்பட்டம்"

"ஓ" நீளமாகவே அந்த 'ஓ'வைச் சொன்னான் சிவராமன்.

சிவராமன் நெஞ்சம் மகிழ்ந்தது. சிவராமன் தன் பாரிய முயற்சிக்குப் பட்டம் விடை தருகிறது என, மனதுள் எண்ணி மகிழ்ந்தான்.

"அப்பிடியெண்டால் இந்த விசையை (விண்ணை) கழட்டிப் போட்டு குண்டொண்டைக் கட்டிவிடுவம். அம்மாவைக் கொண்ட அந்த.....பிளேனை...... எங்கட பட்டம் உடைக்குமப்பா......" ✷

www.tamilarangam.net



தமிழீழ மாணவர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக!
தமிழ் மாணவர் அமைப்பு - பிரான்ஸ் நடாத்தும்

# மாணவர் எழுச்சி விழா

ஒரு நீண்ட வரலாற்று அடக்குமுறைக்கு உள்ளாகி நிற்கின்ற தேசம் !
அங்கு கருகத் திருவுளம் கொள்ளா கல்வியின் தவிப்பு !
மரத்தின் நிழலிலும் மரவுரிதரித்தும் கல்வியைத் தொடருவோம்
என்ற மனதின் அழுத்தம் ! உறுதி !!

இடம்: 81, Rue de la Plaine,
75020 Paris.
(Metro: **Maraichers**)

காலம் : 30.06.1996 (ஞாயிறு)
நேரம் : பிற்பகல் 3:00 மணி

**"தேசத்தின் தூண்களாய் மாணவர்கள் ;
அவர்களின் மூச்சாய் கல்வி"**

**குறிப்பு:** பாரிசில் இயங்கும் கல்வி நிலையங்கள், கலைக்கல்லூரிகள் இவ்விழா கலைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்கின்றன.

## யூலை 5 .... யூலை 14 இடம்பெயர்ந்த எமது மக்களின் துயர்துடைக்கும் 10 நாட்கள்

வேர்விட்ட மண்ணில் இருந்து வாழ்வை இழுத்தெடுத்துக்கொண்டு வேறிடத்தில் ஊன்றுவதற்குள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம்.
உடலும் மனமும் ஒருசேர அனுபவிக்கும் துன்பமோ சொல்லில்வரா.
இடம்பெயர்ந்து எம்மினம் படும் துன்பமும் துயரமும்... எழுத்தில் வராதவை. எழுதவராதவை.
துன்பப்பட்டிருக்கும் எம்மக்களின் நிலைகுறித்து... துயரப்படுவதில் லாபமில்லை.
அதை நீக்கும் வழிவகை அறிந்து புரிவதே நம்முன்னுள்ள கடமை.
மழைக்கும் வெயிலுக்கும் ஒதுங்கி...
மனித சீவியம் நடத்த குறைந்த பட்சம் ஒரு சிறு குடிசையாவது அமைத்துக்கொடுக்க வேண்டாமா....?
ஒரு நேர உணவாவது உண்ண வழிவகை செய்யவேண்டாமா...?
மானம் மறைக்க ஒரு தடுப்பிட்டுக் கொடுக்க...

உங்கள் வாசல் கதவைத் தட்டுவோம்!
எங்கள் உறவுகளுக்காக... இதயக் கதவுகளைத் திறந்துவையுங்கள்!!

ஈகத்தின் இமயத்தைச் சுட்டி நிற்கும் கரும்புலிகள் நாளில் இந்த அரிய பணியை ஆரம்பிக்கின்றோம். தம் மக்களுக்காக... தம்தேசத்துக்காக... தம்மையே ஈகம் செய்த அவர்களின் உறவுகளாகிய நாம், எங்களின் உறவுகளுக்காக என்ன செய்யப் போகின்றோம்...?
நீங்கள் தருகின்ற ஒவ்வொரு நாணயமும் நாளை பற்றிய அவர்களது நம்பிக்கையை விதைக்க உதவும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**குறிப்பு:** யூலை 5 தொடக்கம் யூலை 14 வரையான பத்து நாட்களில், ஏதாவது ஒரு நாளில் எங்கள் பிரதிநிதிகள் உங்கள் இருப்பிடம் தேடி வருவார்கள்.
மனம் திறந்த உங்களது பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம்.
நெருக்கடியான இந்தச் சூழலின் நெருக்கத்தில் இருந்து, எமது மக்களைக் காக்க உங்களின் உதவிக் கரம் அவசரமாய் தேவை.
தருவது உங்கள் கடமை அல்லவா !
தமிழர் புனர் வாழ்வுக் கழகம் - பிரஞ்சுக் கிளை

*இத்தாலி பொலோனியா மாநகரில் எமிலியா றோமானியா தமிழ்ச்சங்கத்தினர் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக*

# மாபெரும் கலைவிழா

இடம்: **TEATRO DEHON
(Via. libia. 59 - BOLOGNA)**

காலம்: 07 - 07 - 1996
ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பி.ப. 3.00 மணி

1. தேசிய கீதம்
2. மங்கள விளக்கேற்றல் (மாவீரர் குடும்பம்)
3. வரவேற்புரை
4. புரட்சிகானங்கள் (கலை பண்பாட்டுக் கழகம்) (பலெர்மோ, பொலோனியா கலைஞர்களுடன் மற்றும் பல கலைஞர்கள்)
5. அபினய நடனம் (மாலதி கலைப்பள்ளி பலெர்மொ, திலீபன் கல்வி நிலையம் ஜெனோவா, அன்னை பூபதி கல்வி நிலையம் றெஜியோ எமிலியா, பொலோனியா)
6. சிறப்புரை (பிரதிநிதி தமிழர் ஒருங்கிணைப்புக்குழு) இத்தாலி
7. வில்லுப்பாட்டு (நவீன கண்ணகிகள்) (மகளிர் அமைப்பு பொலோனியா)
8. தாளலயம் - அவலங்கள் - (பொலோனியா கலைஞர்கள்)
9. பட்டிமன்றம் (றெஜியோ எமிலியா கலைஞர்கள்) புலம் பெயர்ந்த மண்ணில் தமிழர்களின் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறதா? பராமரிக்கப்படுகிறதா?

விழாக்குழு:
எமிலியா றோமானியா தமிழ்ச்சங்கம் - பொலோனியா

**இலக்கத்திற்குரியவர் உடன் தொடர்பு கொள்ளவும்.**

இலண்டன் :
தொ.பே.இல:
0956 - 314 370
0181 - 503 4294

**27 - 05 - 96**
தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழாவில் வெற்றி பெற்ற அதிஸ்டலாபச் சீட்டின்
**இலக்கம் 6320**

# மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி 1996

**9-6-96 அன்று** கரப்பந்தாட்டப் போட்டியுடன் ஆரம்பமான மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டி ஸ்ரீ96, 20-7-96 அன்று தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகவுள்ள மெய்வல்லுனர் போட்டியுடன் இவ்விளையாட்டுப் போட்டி நிறைவு பெறுகின்றது.

| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| கரப்பந்தாட்டம் 09.06.96 | 9.00 | Hammfeld Sporthalle (Nahe Gewerbliche Technischen Berufbildung Zentrum) 41460 Neuss (Krefeld - A57 - Ausfahrt Neuss Hafen) |
| நீச்சற்போட்டி 07.07.96 | 9.00 | Hallenbad Berliner Str. 32, 71069 Maichingen (Singen - A81 - Sindelfingen Ost) |
| உதைபந்தாட்டம் 13.07.96 | 8.00 | Mendessport Platz Freden Baum, 44147 Dortmund |
| மெய்வல்லுனர் போட்டி 20.07.96 | 8.00 | Stadion Rote Erde (Nahe Westfalenhallen) Strobel Allee, Turnweg, 44122 Dortmund |

**தமிழ் மாணவர் அமைப்பு - யேர்மனிக்கிளை**
Tamilische Studenten Verein e.V., Postfach:1118, 71278 Hemmingen,Germany. Tel: 0711/ 7655509.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## இறந்தவர்களைப் புதைத்துவிட்டு மீண்டும் எழுக !

கோப்பையின் அடிமட்டம்வரை.
எமக்கேயான சிவப்புநிறகசப்புப் பானத்தை
நாம்தான் முழுமையாகப் பருகவேண்டும்-

சரித்திரமே பிசகிப் போய்விட்ட இவ்வேளையில்
நாம்வதைபடப் போகிறோம்
....ஒருபெண்செம்மறி ஆடுபோல்
கொலைபடப் போகிறோம்.

ஒரு வாத்துக்கூட்டம் பறப்பதுபோல்
நாம் இங்கிருந்து ஓடிவிடத்தான் வேண்டும்-

இந்த வெளியேறல். தரும் அவமானம்.
எமது எலும்பிடை ஊனைக்கூடத்தொடலாம்.
இதனைப் பொருட்படுத்தாதீர்கள்!
கோபங் கொண்ட அந்தநெடுங்கடலில்.....
....எமது சடலங்கள் ஒரு பாலமாக அமையும்
நாம் அக்கடலின் கரைகளை
புறக்கணித்ததும் இல்லை.
அவை ஒருபோதும் எம்மை
கைவிட்டதும் இல்லை-

ஓ! பொன்னைப்போல் மின்னும்
எனது அன்னை பூமியே
சிவப்புக் கற்களும் யானைத் தந்தமும்
உடையநாடே
உன்னில் நாம்கொண்டபிரியம்
காதலைவிட மேலானது.
அதுவிலைமதிப்பற்றதும் கூட

இதனால். இறந்தவர்களைப் புதைத்துவிட்டு
மீண்டும் எழுக
நாளை. எம்மைவிட்டுப் பறந்துபோய்விடும்.
ஆனால் நாம் அதனை நழுவிப்போய்விட
விட்டுவிட முடியாது.
நாம் நிரந்தரமாகவே
ஓடிப்போய்விட்டவர்களோ
அல்லது
தொலைந்துபோய்விட்டவர்களோ அல்ல....
ஆனால் மீண்டும் ஒருமுறை....
நாம் உருக்கிவார்க்கப்பட்டு விட்டோம்.
புதியவர்களாகவே.....

பாலஸ்தீனக் கவிஞர்:
தௌபீக் சியாட்
ஆங்கிலம் வழி தமிழில்:
மயன்

## முரசு வெடிக்கிறது

ஊர் கூடிக்கதைக்கின்ற
சந்திகளுக்கு என்ன நடந்தது?
அன்னதான மண்டபங்கள் கூட
வானத்து முகட்டை
அண்ணாந்து பார்க்கின்றனவே!
குரக்கன். கதலிவாழை.
கரணை. இராசவள்ளித்தோட்டங்களை
துவம்சம் செய்தவன் யார்?
அந்தத் தேவாலய மணிகூட
அதிகாலையில் தூங்கிவிட்டதோ!
ஆடுகால் பூவரசின் இலைகளுக்கும்
காமாலை நோய்.....
மரக்கலப்பை துண்டு துண்டாய்
கிடக்கிறது.
'கழுகனின்' கண்ணை
காகம் கொத்திக் கொண்டிருக்கிறது
வானுயர்ந்த பனையும்
துணையாய் நின்றிருந்த தென்னையும்
சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளதே!
வயல் வெளிகள் எங்கும்
'செல்' கள் விதைக்கப்பட்டுள்ளன.
செத்துக்கிடக்கும் பூனையின்மேல்
நாய்க்குட்டி தலைவைத்துத் தூங்குகிறது.
வாசனையைக் கொண்டுவரும்
வாடைக்காற்றுக்கூட
துர்நாற்றத்தை தந்துவிட்டுப் போகுதே!
இந்த மண்ணுக்கு என்ன நடந்தது
எங்கும் ஓரே வேதனையின்
ஓலங்கள்

முரசு வெடிக்கிறதே!

பூமிப்பந்தில்
ஒரு புதிய புள்ளி
முளைவிடப்போகிறது.

-நீர்வையூர் மைந்தன்

## செப்பனிட முடியாத இழப்பு

இரவின் முதுகிலேறி
அந்த இடி வந்திறங்கியது.
பகலை விழுங்கியவாறு.
இரவு கவிந்தது.
செவிப்பறை கிழிந்து
இதயங்கள் நொருங்க.
இடியுரைத்தது.
எமசிங்கரர்களின் வருகைபற்றி
கண நேரம்.
முகம் வெளுத்து பிணங்களானோம்.
உயிரிழக்கும் விபரீதம்.
மூளையில் உறைக்க.
முடுக்கி விடப்பட்ட பொம்மைகளாய்.
இயங்கினோம்.
எவற்றை எடுப்பது
எவற்றை விடுவது
எங்களுடன் வாழ்ந்த
எல்லாமே உன்னதமானவை.
அந்தரித்து அவதியுற்று
அகப்பட்ட முடிச்சுகளோடு
நடைப்பிணங்களாய் நகர்ந்தோம்
மையிருட்டைக் கிழித்து
மழைநீரில் குளித்து
இருப்பிழந்த துயர்சுமந்து
இலக்கின்றி அலைந்தோம்.
உறவுகளைப் பிரிந்து
திசைக்கொன்றாய்ச் சிதறினோம்.

எங்களது வயல்
எங்களது கோயில்
எங்களது கடற்கரை.
எத்தனை எத்தனை
எங்களது தனித்துவங்கள்
எல்லாமிழந்து
புலம்பித் திரிகின்றோம்.
செப்பனிட முடியாத
இந்த இழப்பின் கனம்
விழியைப் பிதுக்க
இயல்பாய் சுவாசிக்கவும்
முடியவில்லை.
எங்களது மூலத்தின்
வேர்களோடிய உன்னத இருப்பை
மீட்டெடுத்தாலன்றி
இலேசாய் உணர்வதும்
இயல்பாய் இருப்பதும்
சாத்தியமாவதெங்கனம்?
அதுவரை.
உயிர்கூடக் கனம்தான்.

உமாஜிப்ரான்


## அழைப்பு

கதிரறுத்து அம்மணமான
வயல்வெளியையும்
காய்ந்து வெடித்து
நீரற்ற ஏரியையும்
சுற்றிச் சுற்றிக்
கத்தியலைகின்றன பறவைகள்.
ஒரு புழுத்தானுமில்லை
சிறு மீனின் முள்ளுமில்லை
காற்று வந்து
அடிக்கடி
தள்ளிவிட்டுச் செல்கிறது
தீயின் துண்டுகளை.
பாருங்கள்
அவற்றின் சிறகுகளில்
பொத்தல் விழுந்திருப்பதை.
ஒரு சுனையோ பசுஞ்சோலையோ
அவற்றை வாழ வைக்கும்.
யாராவது முன் வாருங்கள்
பேரிதயம் படைத்தவர்களே!
ஒரு சோலைகட்டி சுனை தோண்ட

- இயல்வாணன்

www.tamilarangam.net

# இறுதிப்பதில் இனிமேற்தான்



நிமிர்கூ இந்த நெருப்புக்குள் மொட்டு விடும்
அமிர்தங்களே
ஆடிச் சிலிர்த்திடுங்கள்! இந்த நிலம்
குனியாது, எங்கள் குல உரிமை மண்டியிட்டுப்
பணியாது,
கலைஞர்களும் பாயும் புயலணியில்
பிணைந்தெழுந்தார்.



''ஊர் பிடிப்போம்'' என்ற ''ஓளிக் கதிரின்'' மூச்சுக்கும்
ஆர்த்த புலி நாளை அணைபோடும். எங்களது
விடுதலைத் தீயின் விசுவரூபம் அறியாமல்
அடக்க வந்த கால்,
வைக்கும் அடிகளுக்குள் நிலையெடுத்து
எரிமலைகள் சீறும், எதிரசுரர் வெட்டி வைத்த
பதுங்குகுழி அவர்க்கே
படுகுழியாய் மாறுகையில்—
பலாலியையும் தின்று பறையொலிகள் பொங்குகையில்,
காவம் வழிவிட்டெம்
கைவிலங்கை வெட்டுகையில்,
தாயகத்தில் மீண்டும் தவில் கேட்கும்.

ஈழப் பரம்பரையின் பேத்தி பூட்டர்....
வந்த பகைக்கு வலையெறிந்து
''வெற்றியென்ற''
சண்டியர்க்கெம் வீட்டில் சமாதி செய்தார்.
உதவவரும்
வல்லூறை வதைக்க எழும் பேய்ப் படையின்
பல்லுடைய,
''வானப் பல்லக்கில்'', குறிவைத்தார்.
''நெற்றிக் கண் திறந்தானெம் நிலச் சோழன்!''
இனிமேற்தான்......
புற்றை விட்டு வந்த புடையன் எம் சந்திகளில்
திக்கற்று நிற்கும்.
திருதிருவென்றே விழிக்கும்.





சிங்கங்கள்
வாய் குளறும், மீள வழியின்றி எம்மடிக்கே
உரமாகிப் போகும்!
உருக்கொண்ட புலிபடைக்கும்
வரலாறு தமிழுக்கே வாழ்வு தரும்.
இனிமேற்தான் சங்காரம்!
யார்போய் யாரிடமே சரணடைவார்
இங்கென்று பாப்போம் இனி, மான மறம்பொங்க
சினம் கொண்டோம், பாடும் தெற்குக்கு, ஆமிகளின்
பிணமறுப்பி, பிடித்த பீரங்கிப் படமறுப்பி,
இனிப்பிரிவோம் என்று
இறுதிபதில் கொடுப்போம்''.

-த. ஜெயசீலன்


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 208
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1599 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-8463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 382 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 8441 F: 580 8224


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்